# லேடீஸ் நாவல்

விலை ரூ.50/



புத்தம்புதிய மெகா நாவல்

## கங்கை கொண்ட சோழன் - 4

## பாலகுமாரன்








# 28

அந்த அகலமான மாட்டு வண்டியில் குறுக்கும், நெடுக்குமாக மரக்கட்டைகள் அடிக்கப்பட்டு கட்டம் கட்டமாக பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கட்டத்திலும் மரப்பெட்டிகள் இறக்கப்பட்டிருந்தன. அந்த மரப் பெட்டிகளுள் தைல ஜாடிகளும், மருந்து கூடைகளும் அசையாமல் வைக்கப்பட்டன. தைல ஜாடியைச் சுற்றி கயிறாலும், வைக்கோலாலும் அடிபடாமல் மெத்தென்று இருக்க ஒருவகை செய்யப்பட்டிருந்தது.

ஞானசம்பந்தன் வண்டியின் மீது தாவி ஏறினான்.

"என்னென்ன ஏற்றியிருக்கிறாய் சொல்" மனைவியை பார்த்து கேட்டான். மனைவி ஓலையை உருவி படிக்கத் துவங்கினாள்.

"பஞ்சாங்கத் தைலம் பத்து தூணி"

"சரி"

"வாசனாதி எரண்ட தைலம் ஆறு தூணி"

"மிகச்சரி"

"உத்தம கர்ணாதிதைலம் எட்டு தூணி இருக்கிறது. பில்வாதி சூரணம் பத்து பதரு மண்டூர வடகம், திருவாதி, விமலை, சுனேத்திரி ஆறு பதரு, தாம்ராதி பத்து பதரு, வஜ்ரகல்பம் இருபது பதரு, கல்யாண லவணம் நாலு பதரு"

அவன் ஒவ்வொன்றையும் தொட்டுப் பார்த்து சரி பார்த்துக் கொண்டான். வண்டியை விட்டு கீழே இறங்கினான்.

இதே அளவு, இதே போல இன்னொரு மாட்டு வண்டியிலும் மருந்து கூடைகளும், தைல ஜாடிகளும் அசையாது இருக்க சட்டம் செய்யப்பட்டு, மிகப் பெரிய காளைகள் அவற்றை இழுக்கும்படி

செய்யப்பட்டு நகரத் தயாராக இருந்தது.

தலைமை மருத்துவர் வீட்டு வாசலில் எல்லோரும் கூடி இருந்தார்கள்.

“நேற்றைக்கு திருமணம் முடித்து, இன்றைக்கு மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்ப வேண்டிய பெண்ணை போருக்கு அனுப்புகிறாய். என்ன உன் தலையெழுத்து” ஒரு வயதான கிழவி தலைமை மருத்துவரை பார்த்து அலுத்துக் கொண்டாள்.

தலைமை மருத்துவர் முகம் இறுகிக் கிடந்தது.

“அவளுக்கு ஆயுத கெட்டியம்மா. நல்லபடி போய் வருவாள். போய் கங்கை நீரை கொண்டு வருவாள். இத்தனை சட்டங்களுக்குள்ளும் ஆடாமல், அசையாமல் பல தவலைகளில் கங்கை நீர் வரும், வடக்கே இருக்கும் ஊர்களைப் பற்றி பல கதைகள் சொல்வாள். உடுப்புகள் வாங்கி வருவாள். நகைகள் வாங்கி வருவாள். அப்பொழுது வந்து அவளைப் பார். என்ன கொண்டாட்டமாக இருப்பாள் என்று பார்.

எல்லோரும் தான் வைத்தியருக்கு மகளாக பிறக்கிறார்கள். இவள் அதிர்ஷ்டக்காரி. அரசாங்கத்துக்கு வேண்டிய ஒரு இளைஞனை மணமகனாகப் பெற்றாள். இப்பொழுது அவள் அரசாங்க அதிகாரி. அரசாங்க அதிகாரியின் மனைவி என்றால் இங்கும், அங்கும் ஓடத்தான் வேண்டியிருக்கும். உட்கார்ந்து ஆடு புலி ஆட வசதி இருக்காது. உங்கள் வாழ்க்கை வேறு. அவள் வாழ்க்கை வேறு. அவள் வென்று வருவாளம்மா, கவலைப்படாதே” வேறொரு கிழவன் மிகத் திடமாகச் சொன்னான்.

தலைமை வைத்தியருடைய முகம் மலர்ந்தது.

நாகரத்தினத்தினுடைய தாய் அவளை அணைத்துக் கொண்டாள். நாகரத்தினமும் தாயை தழுவிக் கொண்டாள்.

“கணவனோடு போகிறாய். ஜாக்கிரதையாக இரு. கண்ட இடத்தில் கண்ட நேரத்தில் அருகே படுத்து விடாதே. அனுமதித்து விடாதே. மேலே வானம், கீழே பூமி என்று வெட்டவெளியில் கூடல் செய்ய வேண்டாம். எப்படி போகிறாயோ அப்படியே வா, வந்தபிறகு சகலமும் வைத்துக் கொள்ளலாம். உனக்கும் சிறு வயது. அவருக்கும் சிறுவயது. குழந்தையை பெற்றுக் கொண்டு வராதே. நல்ல அனுபவங்களை பெற்றுக் கொண்டு வா” என்று காதோரம் சொன்னாள். நன்றியாக



[illegible] மகள் இன்னும் இறுக்கிக் கொண்டாள்.

“[illegible] நீங்கள் இங்கு வந்து மருத்துவம் கற்றது [illegible] இருக்கிறது. எனினும் எங்கள் குலத்துப் பெண்ணையே [illegible] கொண்டு எங்களில் ஒருவராக மாறினீர்களே இது மிகப் [illegible] செயல். இதனால் எங்கள் மருத்துவர் குலம் உயர்ந்தது. அரசர் [illegible] போக வேண்டும். வைத்தியம் செய்ய வேண்டும். [illegible] வெளியேற வேண்டும் என்று தான் இருந்தோம். ஆனால் இப்பொழுது எங்களுக்கு கூடுதலாக மரியாதை வந்து விட்டது”

“[illegible] அரசரிடம் போய் போருக்கு போய் வந்தோம். [illegible] அணிந்து கொள்ள உத்தரவு கொடுங்கள் என்று கேட்கப் போவதில்லை. மாறாக நிறைய ஆதுரச் சாலைகள் அமைக்க வேண்டும் என்று கேட்கப் போகிறோம். ஒவ்வொரு வீடாகப் போய் வைத்தியம் செய்வதற்கு பதில் ஆதுரச் சாலைக்கு வந்து விடு. அங்கேயே இரு என்று நோயாளிகளை ஒரு இடத்திலேயே வைத்து நாம் வைத்தியம் செய்யலாம். மழைக்கோ, வெய்யிலுக்கோ [illegible]படாமல் ஓடுகள் வேய்ந்த உயர்ந்த கூரைக்குக் கீழ் நிம்மதியாக மருத்துவம் செய்யலாம்” ஞானசம்பந்தன் பேசினான்.

“மழை என்று வந்து விட்டால் என் வீட்டில் கைப்பிடி மருந்து கூட அரைக்க முடியாது. நல்ல வீடு இல்லையே என்று மிகப் பெரிய வருத்தம் எனக்கு உண்டு. இந்த குறையெல்லாம் உன்னால் தீரும் ஞானசம்பந்தா” என்று ஒருவர் சொல்ல, அவன் அவரை தீர்க்கமாகப் பார்த்தான்.

“நீங்கள் சொல்வது புரிகிறது. நமக்காக இல்லை. வைத்தியம் என்ற விஷயத்திற்காக அரசரிடம் இது பற்றி கேட்கிறேன். சமயம் வரும் பொழுது நாம் ஒட்டு மொத்தமாகப் போய் இதைப் பற்றிச் சொல்வோம்”

“ஞானசம்பந்தா, அங்கிருந்து வெறும் பாத்திர, பண்டங்கள் எடுத்து வராதே, மருந்துகள் எடுத்து வா. அது மிக முக்கியம், மருந்துகளுக்கு உண்டான மூலிகைச் செடிகளை எடுத்து வா, அதுவும் முக்கியம்” என்று சொல்ல, அவரை அருகே போய் ஞானசம்பந்தன் கட்டித் தழுவிக் கொண்டான்.

நல்ல நேரம் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது. சூரியன் மேலே எழ, நிழல் கீழே விழ அந்த நிழலை உற்று கவனித்து.

"இப்போது கிளம்பலாம்" என்று கை அசைத்தார்கள். பெண்கள் குலவை இட்டார்கள்.

மாட்டு வண்டிகள் மெல்ல நகரத் துவங்கின.

ஆறு மாட்டு வண்டிகளும் முன்னே போக, பிறகு கோவேறுக் கழுதைகளும், சிறிய குதிரைகளும் பின்னே போக, கணவனும், மனைவியும் ஊரை வணங்கி விட்டு கைகோர்த்துக் கொண்டு நடந்தார்கள். அவர்களுக்கு உண்டான குதிரைகள் முன்னே போய்க் கொண்டிருந்தன.

"போர் என்றால் நல்லதும் இருக்கிறது. கெட்டதும் இருக்கிறது. போனவர்கள் ஊனத்தை அடையாமல் வர வேண்டுமே என்ற கவலை இருக்கிறது. போய் வெற்றி பெற்று வந்தால் சோழ தேசத்தை வளமாக்கி விடுவார்கள் என்ற சந்தோஷமும் இருக்கிறது.

நீங்கள் சொன்னது போல நல்ல மூலிகைச் செடி இங்கு வந்தால் மூலிகைத் தோட்டம் வைத்து பயிர் செய்தால் எவ்வளவு பிரமாதமாக ...ழ தேசத்தில் நோயே இல்லாது செய்து விடலாமே" என்று ஒரு வைத்தியர் சொல்ல, எல்லோரும் ஆரவாரித்தார்கள்.

"இராஜேந்திர சோழர் வாழ்க" என்று கூவினார்கள்.

யுத்தம் என்பது ஒரு தேசத்தை புரட்டிப் போடுகிற விஷயம். இங்கே புரட்டிப் போடுகின்ற ஆயத்தங்கள் மிகத் தெளிவாக, சுத்தமாக நடந்தேறின.

இது விற்பொறி தேரோடு பிணைக்கப்பட்டது. நித்த விநோதப் பெருந்தச்சன் தன்னை சுற்றி உள்ள மறவர்களுக்கு அது என்ன என்று காண்பித்தான்.

"ஒரே நேரம் ஆறு அம்புகள் விடுவதற்கான வசதி இதில் இருக்கிறது. சுருள் கம்பியின் விசையால் வேகமாக மேலே பறக்கக் கூடியது. எதிரியை பயமுறுத்த உதவக் கூடியது.

"இந்தப்புறம் இருந்து மறுபுறம் உள்ள கோட்டைக்குள் ஒரே நேரத்தில் ஆறு அம்புகள் செலுத்தலாம். இது ஒரு குதிரையோடு இணைக்கப்படும். இதை இயக்கும் போது குதிரையை அவிழ்த்து விடுங்கள். ஒரு மேட்டில் இதை சாய்த்து ஆப்பு அடித்து உறுதியாக நிற்க வையுங்கள். ஆறு அம்புகளை இந்த இடத்தில் சொருகுங்கள். பிறகு இந்த



கட்டையை இழுத்து வைத்துக் கொள்ளுங்கள். வண்டியை அசைத்து எந்த திசை போக வேண்டும் என்பதை பார்த்துக் கொள்ளுங்கள். பிறகு இழுத்த கட்டையை இப்படி தூக்கி விடுவித்து விட்டால் அந்த கட்டை, இந்த அம்பின் அடிப் பாகங்களை வேகமாகத் தாக்கும்.

இதோ பாருங்கள். செய்து காட்டுகிறேன்"

அம்புகள், சரேல் என்று ஒரே வேகத்தில் உயரப் பறந்தன. வெகு தொலைவு போய் தரையில் குத்திட்டு நின்றன.

"ஒன்றை விடுவித்ததும் அடுத்த ஆறு வைத்து விடுங்கள். மறுபடியும் இழுங்கள். மறுபடியும் விட்டு விடுங்கள். ஒரு நிமிடத்தில் இரண்டு முறை அதாவது பன்னிரெண்டு அம்புகளை வெகு சுலபமாக நாம் விட்டு விட முடியும். நல்ல பழக்கம் இருந்தால் மூன்று முறைகள் ஆறு ஆறு அம்பு விடுதலை செய்ய முடியும்.

இதுபோன்ற விற்பொறிகள் பதினாறு செய்து வந்திருக்கிறேன். பதினாறு வண்டிகளை சாய்த்து நிறுத்தி ஒரே நேரம் அனுப்பினால் தொண்ணூற்றியாறு அம்புகள் கோட்டைக்குள் போய் விழும். உடனடியாக இன்னொரு தொண்ணூற்றி ஆறு அம்புகள் அனுப்பினால் எதிரி நிலை குலைந்து போவான்.

இதைத் தவிர வில்லாளிகளும் தங்கள் பக்கத்து அம்புகளை அனுப்பலாம். துல்லியமாக குறி பார்த்து அடித்தல் என்பது இதில் நடக்காது. எதிரியை பயமுறுத்த கைக்கு கிடைத்ததை வீசி அடிப்பது போல, வரிசையாக நிற்கின்ற படைகளை நிலை குலைந்து போகச் செய்ய இவை மிகவும் உதவும். படைகளின் முன்புறம் இந்தப் பொறிகளை நிறுத்தி குதிரைகளை எதிர்பக்கம் வைத்து நீங்கள் தயார் நிலையில் நின்றால், பார் ஓடுவதற்காக தயாராக இருக்கிறார்கள், பயந்து விட்டார்கள் என்றெல்லாம் பேசிக் கொள்வார்கள். இரண்டு முறை இவைகளை சீறியடித்தால் எதிர்படை எப்படி அதை தடுப்பது என்று தெரியாமல் நிலைகுலைந்து போகும். என்னதான் கேடயம் வைத்து தடுத்தாலும் பத்து அம்பில் மூன்று அம்பு பழுதில்லாமல் அடிபடும். எதிர் பக்கம் பொம்மை வைத்து இந்தப் பொறியை சோதித்தேன். பத்து அம்புகளுக்கு எட்டு அம்புகள் தைத்திருக்கின்றன. இதை சரியாக இயக்குவது உங்கள் பொறுப்பு"

அவர்கள் குதூகலமானார்கள். யாரெல்லாம் அதில் சேர்ந்து கொள்வது என்பதை படைத் தலைவர்கள் தீர்மானித்தார்கள்.

மறுபடி மறுபடி அம்புகளை சீரமைத்துப் பார்த்தார்கள். ஓடிப் போய் அம்புகளை எடுத்து வந்தார்கள்.

"ஒருவேளை நமது போறாத காலம் இந்தப் பொறிகள் எதிரியிடம் மாட்டிக் கொண்டால் எதிரி இதை இயக்க கற்றுக் கொண்டால் நாம் எப்படி சமாளிப்பது?" நித்த விநோதப் பெருந்தச்சன் கேட்க, அவர்கள் திகைத்துப் போய் நின்றார்கள்.

"உங்களுக்கு வெறும் விற்பொறிகள் மட்டும் தராமல் இதை தடுக்கின்ற கேடயங்களும் தருகிறேன். எதிர்ப்பக்கத்திலிருந்தும் அம்பு வருமல்லவா. அந்த அம்புகள் வந்தால் எப்படி தடுப்பது. நாம் எல்லோரும் பித்தளையிலோ அல்லது தாமிரத் தகட்டிலோ, இரும்பிலோ கேடயங்கள் வைத்திருக்கிறோம். எவ்வளவு தான் நீங்கள் பெரிதாகச் செய்தாலும் அது எடுப்புடையதாக இருக்காது. வாளை தடுப்பதற்கு இரும்பு கேடயங்கள் சரி. அம்பு தடுப்பதற்கு என்ன செய்யலாம். எனவே பிரம்பினால் ஆன நன்கு அழுத்தமாக முடைந்த தூக்குவதற்கு எளிதான கேடயங்கள் செய்திருக்கிறேன்"

அவன் கொண்டு வந்து கொடுத்தான்.

"இந்த கேடயங்கள் எடுத்துக் கொண்டு போய் பத்து பேர் தொலைவில் நில்லுங்கள்" என்று சொல்ல, பத்து பேர் தொலைவில் நின்றார்கள். வில்லாளிகளைப் பார்த்து,

"அவர்களை தாக்குங்கள்" என்று கட்டளை இட, வில்லாளிகள் எச்சரித்துவிட்டு வில் வளைத்து அம்பு தொடுத்தார்கள். அந்த அம்புகள் அந்த பிரம்பு கேடயங்களால் மிக எளிதாக தடுக்கப்பட்டன.

எனவே, ஒவ்வொரு தேரோடும் அம்புகள் வைக்கின்ற தனி பெட்டியும், அதற்கு மேல் அந்த பிரம்பு கேடயமும் இருக்கும். ஒரு தேருக்கு இரண்டு பேர் என்று பங்கிட்டுக் கொண்டு ஒருவர் தேர் ஓட்டவும், ஒருவர் பின்னால் பெட்டியின் மீது அமர்ந்து கொள்ளவும் பழகிக் கொள்ளுங்கள். மேடு பள்ளங்களில் சாயாது போக இந்த தேரை நன்கு வடிவமைத்திருக்கிறேன். ஆயினும் மேடு பள்ளங்களில் மற்ற தேர்களைப் போல் விரைவாகப் போகாமல் சற்று நிதானமாக போங்கள். உள்ளே கனம் இருக்கிறது அல்லவா. அதனால் அமைதியாக ஏறி இறங்குவது நல்லது" என்று சொல்ல அவர்கள் மறுபடியும் கூச்சலிட்டார்கள்.

"நிஜமாகவே நீர் விநோதமான பெருந்தச்சர் தான்யா, உம்மை



பாராட்ட வார்த்தைகளே இல்லை என்று பொறிகள் மறுபடி மறுபடி இயக்கப்பட்டன. கேடயங்கள் மீது அம்புகள் தைக்கப்பட்டன. அவைகளை பிடுங்கி போட்டார்கள். மிக உற்சாகமாக அந்த பொறிகளை இயக்கிப் பார்த்தார்கள்.

"இந்த சுருள் கம்பி பழுதானால் என்ன செய்வது?" நித்த விநோத பெருந்தச்சன் கேட்டான்.

"பழுதாகுமா?"

"ஆகலாம். கழன்று போகலாம். என்ன செய்வது"

"என்ன செய்வது?" மறவர்கள் கேட்டார்கள்.

"அதற்காக நான்கு ஜதை சுருள் கம்பிகளை ஒவ்வொர் வண்டியிலும் வைத்திருக்கிறேன். அவை இங்கே தொங்க வைக்கப்படும்" வண்டியின் வெளிப்புறத்தை காட்டினான். மறவர்கள் வாய் பிளந்தார்கள்.

மட்டமான குதிரைகளை வைத்துக் கொள்ளாமல் உயரமான, கனமான குதிரைகளை வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி, நித்த விநோத பெருந்தச்சன் விடை பெற்றான்.

"இதற்காகவா வந்தீர்கள்"

"ஆமாம். ஜெயங்கொண்டத்தில் இந்த வேலை தான் செய்து கொண்டிருந்தேன். இந்த போருக்கு என்னுடைய பங்களிப்பு இருக்க வேண்டும் என்று விரும்பி, இதை இரவு முழுவதும் விழித்திருந்து வடிவமைத்தேன். மற்ற நேரங்களில் கல் வேலை இருக்கவே செய்தது"

"கோவில் எப்படி வந்திருக்கிறது"

"வந்து பாருங்களேன். உமது வாயால் சொல்லுங்களேன். மிக அழகாக வந்திருக்கிறது. சண்டேஸ்வரர் சிற்பத்தை செதுக்கிக் கொண்டிருக் கிறார் ஒரு கல்தச்சர். காலமெல்லாம் அது இராஜேந்திர சோழரின் பெயர் சொல்லப் போகிறது. கிட்டத்தட்ட பெருவுடையார் கோவிலைப் போலவே இருக்கும். அவ்வளவு உயரம் இருக்காது. இருக்கக் கூடாது என்பது இராஜேந்திர சோழரின் கட்டளை. அதைவிடச் சிறிதாய் ஆனால் இன்னும் நுணுக்கமானதாய் இந்த கோவில் இருக்கும்"

"போரும் போது இராஜேந்திர சோழர் கண்டிப்பாக போவாரல்லவா"

"போவார், ஆனால் நீங்கள் நேராக கடற்கரை ஓரமாக வேங்கியை நோக்கி நகர்ந்து விடுவீர்கள். உங்களுடைய பங்களிப்பு தான் அங்கு முதலில் இருக்கும். இதை இராஜேந்திர சோழர் இயக்கி பார்த்த பிறகு இதை அரையன் இராஜராஜனிடம் ஒப்படைக்கச் சொன்னார். உங்களை அரையன் இராஜராஜன் சந்தித்து பின் முதலிலேயே உங்களை அனுப்பி விடுவார். கோட்டை மூடி இருப்பின் அதை திறக்க வைக்க நீங்கள் பெரும் முயற்சி செய்து இதை இயக்க வேண்டியிருக்கும்"

மறவர்கள் மறுபடியும் வாழ்த்தொலி எழுப்பினார்கள்.

நித்த விநோத பெருந்தச்சன் வணக்கம் கூறி விடைபெற்றார். மெல்ல மர ஆசனத்தில் கால் வைத்து ஏறி குதிரையில் உட்கார்ந்து கொண்டார்.

"வயதாகி விட்டதய்யா, தளர்ந்து விட்டார்" என்று சொல்ல, "ஆமாம். பெரிய கோவிலை உருவாக்கிய கை அல்லவா. குஞ்சரமல்லரின் சீடரல்லவா. அவருக்காக உழைத்தவரல்லவா. இப்பொழுது கொஞ்சம் வயதாகி விட்டு தான் இருக்கிறது. கல் வேலை செய்வது எளிதா, சூடல்லவா. அந்த சூடு உடம்பை தாக்குமல்லவா" என்றெல்லாம் பேசிக் கொண்டார்கள்.

நித்த விநோத பெருந்தச்சன் தன்னுடைய குடுமியை முடிந்தவாறே குதிரையில் மறுபடியும் ஜெயங்கொண்டம் நோக்கிப் போனார். அவர் குதிரை சேனத்தினுடைய தனித்த பையில் இராஜேந்திர சோழர் கொடுத்த ஆயிரம் கழஞ்சு பத்திரமாக இருந்தது.

"தெரிந்த கைக்கோளப்படை முதலில் நகர்ந்தது. வீர சோழிய குதிரைப்படை அடுத்து நகர்ந்தது. தெரிந்த கைக்கோளப்படை இடங்கை வீரர்கள் பிறகு நகர்ந்தார்கள். அதற்குப் பிறகு தேர்கள் அணிவகுத்தன. பிறகு யானைகள் வந்தன. பிறகு ஈட்டியோடு கூடிய குதிரை வீரர்கள் வந்தார்கள். பிறகு வில்லோடு கூடிய குதிரை வீரர்கள் வந்தார்கள். மிகப்பெரிய படை நீளமாய் அரண்மனையைக் கடந்தது. இராஜேந்திர சோழர் ஒவ்வொரு படையையும் உற்றுப் பார்த்து சுற்றியுள்ள சேனாதிபதிகளிடம் திருத்தங்கள் சொல்லிக் கொண்டிருந்தார்.

கருந்தட்டான் குடையை முதல்படை தாண்டிய பிறகும் இங்கு சேனைகளின் வரிசை முடியவில்லை. "அடர்த்தியாகப் போங்கள்.



அடர்த்தியாகப் போங்கள்" என்று வீரர்களை சேனாதிபதிகள் அதட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு தெருவினுடைய அகலத்திற்கு அடர்த்தியாக படைகள் சென்றன. குதிரைகள் ஒன்றின் மீது ஒன்று உராய்ந்தன. தஞ்சையை தாண்டியதும் பிறகு விலகி ஓடலாம். அதுவரை அடர்த்தியாக, அமைதியாக போக வேண்டும் என்ற கட்டளை இருந்தது. தஞ்சையை தாண்டியதும் குதிரைகள் விலகின. நான்காக, ஐந்தாக பரவிப் போயின. பெரியய்ய தூசு கிளம்பியது. மக்கள் வாய் பொத்திக் கொண்டு துண்டின் நுனியை வேகமாக ஆட்டிக் கொண்டிருந்தார்கள். மேலாடையை உயரத் தூக்கி வீசி பிடித்தார்கள்.

இராஜேந்திர சோழர் தன் மனைவியரை ஒவ்வொருவராய் அணைத்துக் கொண்டார். படி இறங்கினார். தன் குதிரையில் தாவி ஏறினார். குதிரை திரும்பி அரண்மனையை பார்த்தது. அவர்களை நோக்கி விடைபெறும் வண்ணம் கை தூக்கினார். அவர் நகர்ந்ததும் பரவை நாச்சியார் எல்லோரிடமும் விடைபெற்றார். கீழ இறங்கினார். இன்னொரு குதிரையின் மீது தாவி ஏறினார். அவரைச் சுற்றி மெய்க்காவல் வீரர்கள் வளைத்துக் கொண்டார்கள். அரசருக்கு தனி மெய்க்காவல் வீரர்களும், இவருக்கு தனி மெய்க்காவல் வீரர்களும் இருந்தார்கள். ஒரு அதிகாரிச்சி மிக நெருக்கமாக அவருக்கு அருகே தன் குதிரையை செலுத்திய வண்ணம் இருந்தாள்.

குதிரைகள் அரண்மனையைத் தாண்டின. இராஜேந்திர சோழனின் பட்டமகிஷியும், மற்ற மனைவியரும், வேறு பெண்களும் குலவையிட்டார்கள். மிக மங்கலமான ஒலியோடு அவைகள் அரண்மனைக்கு வெளியே போக அரண்மனைகள் கதவுகள் சாத்தப்பட்டன. இனி அரண்மனைக் கதவு கொஞ்சமாகத் தான் திறக்கும்.

இராஜேந்திர சோழர் கிளம்பி விட்டார் என்று எக்காளமும், சிறு முரசும் அறிவித்தன. இங்கே அவர் மெய்கீர்த்தி சொல்லப்பட்டன. இராஜேந்திர சோழர் கொஞ்சம் கடுகடுப்பான முகத்தோடு எல்லா பக்கமும் பார்த்துக்கொண்டு வந்தார்.

"எந்த படையிலும் ஒழுங்கில்லை" என்று பரமன் மழபாடியாரிடம் சீறினார்.

"என்னை பார்ப்பதில் தான் ஆர்வம் காட்டுகிறார்களே தவிர படையில் சீராக அணிவகுத்து போக வேண்டும் என்று தெரியவில்லை.

கோளத்து வீரர்களை கவனித்து இருக்கிறீர்களா. அந்த குதிரை வீரர்களுக்கு முன்னால் போகும் குதிரைதான் கணக்கு. அரசனோ, சேனாதிபதியோ எங்கிருப்பினும் அவர்கள் அதை கவனிக்க மாட்டார்கள். ஒரே சீரான நடையில், ஒரே வேகத்தில் குதிரைகள் போவது கண் கொள்ளா காட்சியாக இருக்கும். அவ்வழியை நாமும் பின்பற்ற வேண்டும். அதைத் தவிர குதிரைகளை எல்லாம் அவரவர் மனப் போக்கின் படி அலங்கரித்து இருக்கிறார்கள். யாரோ தன் குதிரைக்கு சலங்கை கட்டி இருக்கிறான். அறிவு கெட்டவன், இரவு நேரத்தில் சலங்கை ஒலியை குதிரை தலை அசைத்து ஒலி எழுப்பாதா, அது நல்லதா, போருக்கு போகிறோமா அல்லது திருமணத்திற்கு போகிறோமா"

கொதிக்கின்ற எண்ணெய் சட்டியில் போட்ட தண்ணீர் போல் சடபடவென்று பொறிந்தார்.

சேனாதிபதிகள் அமைதியாக இருந்தார்கள்.

"ஒரு சிறிய பிரச்சனை இருக்கிறது" வந்தியத் தேவர் மிருதுவாகப் பேசினார்.

"என்ன பிரச்சனை?"

"ஒரே விதமாக அலங்கரிக்க முயற்சி செய்தோம், முடியவில்லை"

"என்ன தவறாயிற்று"

"துணி கிடைக்கவில்லை. நெசவு பிரச்சனை. நம் நெசவாளர்கள் செய்த பல்வேறு விஷயங்கள் படைக்கு போதவில்லை. எனவே வாள் முதுகு படைக்கு மட்டும், மெய்க்காவலர்களுக்கு மட்டும் தலைக்கு உண்டான தலைப்பாகை தயார் செய்யச் சொன்னார். மற்றவர்களெல்லாம் அவரவருக்கு விருப்பமான படி தான் தலைப்பாகை அணிந்திருக்கிறார்கள்"

"காழகங்கள் வந்திருக்குமே என்ன ஆயிற்று?"

"ஆறு மாதமாக சீனக் கப்பலிலிருந்து எதுவும் வரவில்லை. காழக ஆடை, கடைசியாக உங்களுக்கு கொடுத்தது தான். மற்றபடிக்கு சந்தைக்கு எதுவுமே வரவில்லை. அரசாங்க கணக்கிலும் ஆடைகள் இல்லை. எனவே அதற்காகவே ஒருமுறை ஸ்ரீ விஜயம் போக வேண்டும் போல் இருக்கிறது"

"ஆமாம். நிச்சயமாக ஸ்ரீ விஜயம் போக வேண்டும். போகவில்லையெனில் சோழ தேசத்தினுடைய நாகரீகத்தில் பாதிப்பு



ஏற்படும். சோழ மக்களின் வாழ்க்கையில் சற்று தொய்வு ஏற்படும்" வந்தியத்தேவர் சொன்னார்.

"எனக்கு புரிகிறது. விரைவாக அதற்குண்டான வேலைகளைச் செய்வோம். சேனாதிபதிகள் அவரவர் படைக்கு போகலாம்" என்று விடை கொடுக்க, சேனாதிபதிகள் அவரை சுற்றிக் கொண்டு தங்களுடைய படைகளை நோக்கி விரைவாக குதிரையை செலுத்தினார்கள்.

"உங்களோடு யார் வருவது?"

"நானும் பரவையும் மட்டும் திருவொற்றியூர் வரை தனியாக வர விரும்புகின்றோம். நீங்கள் எல்லோரும் எனக்கு முன்னே அரைக்காத தூரத்தில் பயணப்படுங்கள். ஆரத்தியோ, மலர் தூவுதலோ வேண்டாம் என்று மக்களிடம் சொல்லி விடுங்கள். விலகி நின்று பார்க்கச் சொல்லி விடுங்கள். எவரும் குறுக்கே வந்து பேச வேண்டாம்"

எதனாலோ மன்னர் கடுகடுப்பாக இருக்கிறார் என்று அந்த சேனாதிபதிகள் புரிந்து கொண்டார்கள். பேசினால் அதிகமாகும் என்பதால் மௌனமாக முன்னே நடந்தார்கள். பரவை அவரை எப்படி சமாதானப்படுத்துவது என்ற எண்ணத்திலேயே நடந்தாள்.

அரசர் வரும் சத்தம் எக்காளத்தின் மூலம் அவனுக்கு கேட்டது. அவன் எழுந்து நின்றான். நட்ட மூங்கிலை வளைத்தான். அதன் நுனியில் கயிறு இருந்தது. அதைத் தன் குடுமியில் முடிந்து கொண்டான். வாளை தொடையில் நீட்டிக் கொண்டான். அருகே வைத்துக் கொண்டான். கை கூப்பினான். அவன் மனைவி வாய் விட்டு கதறினாள். அவன் குழந்தைகள் அழுதன. மற்றவர்கள் எல்லோரும் அவனுக்கு அருகே போய் "வேண்டாமய்யா, வேண்டாமய்யா" என்று கெஞ்சினார்கள். ஆனால் அவன் உறுதியாக இருந்தான்.

தன்னுடைய குதிரையை வேகமாக செலுத்தி நகர்ந்த கைக்கோளப் படையை நோக்கி போய்க் கொண்டிருந்த பாண்டியன் ஸ்ரீ வல்லபனுக்கு அந்த காட்சி தென்பட்டது. தாண்டிப் போனவர் சுற்றி குதிரையை அருகே கொண்டு வந்தார்.

"என்ன செய்யப் போகிறாய்? என்று கேட்டார். அவன் பதில் பேசாது இருந்தான்.

"நவகண்டம் கொடுக்க தீர்மானித்திருக் கிறான்" என்று ஊர்மக்கள் சொன்னார்கள். அவர் குதிரையை வந்தியத் தேவரை நோக்கி செலுத்தினார். எதிரே பாண்டியன் ஸ்ரீ வல்லபன் வருவதைப் பார்த்த வந்தியத் தேவர் வியப்பில் ஆழ்ந்தார்.

"என்ன?"

"ஒருவன் நவகண்டம் தீர்மானித்து கையில் வாளோடு, குடுமி முடிந்தபடி இருக்கிறான்"

"கடவுளே, ஏற்கனவே கோபத்தில் இருக்கிறார். இதைப் பார்த்தால் இன்னும் வெறியாகி விடுவார். அடித்து விரட்டு"

"நவகண்டம் கொடுப்பவரை விரட்டினால் சரியாக இருக்குமா, அது அச்சான்யம் அல்லவா"

"கூடாது. ஒரு பொழுதும் கூடாது. அரசருக்காக தற்கொலை செய்து கொள்வது கூடவே கூடாது. இது அரசர் விரும்புவதில்லை. வேண்டுமென்றால் குதிரை ஏறி யுத்தத்திற்கு வரட்டும். அங்கே வந்து செத்துப் போகட்டும். எழுப்புங்கள் அவனை"

"நான் எப்படி எழுப்புவது, என்னிலும் வயதானவனாக இருக்கிறான்"

"விடு, நான் வருகிறேன்" அவர் குதிரையை வேகமாக செலுத்தினார். இரண்டு குதிரைகளும் நவகண்டம் கொடுப்பவர் அருகில் வந்தன. வந்தியத் தேவர் தரையில் குதித்தார். மூங்கிலை பிடுங்கிப் போட்டார். குடுமியை உருவி விசினார். மூங்கில் பிரம்பை எடுத்து 'பளீர் பளீர் பளீர்' என்று அவனை அடித்தார்.

அவன் திகைத்து நின்றான்.

"அரசருக்காக சாகப் போகிறேன்"

"தாராளமாக, நிச்சயமாக. நீ செத்துப் போனால் சந்தோஷம் தான். ஆனால் இப்படி அல்ல. இது தற்கொலை, நவகண்டம் கொடுக்கக் கூடாது என்பது அரசருடைய கட்டளை. வேண்டுமென்றால் யுத்தத்தில் சேர்ந்து கொள். அங்கு வந்து செத்துப் போ" என்று சொல்ல, அவன் "முடியாது" என்று மறுத்தான். வந்தியத் தேவர் வாள் உருவினார். அவன் நெஞ்சில் வைத்தார்.

"உள்ளே இறக்கி இரத்தம் பார்த்து விடுவேன், முட்டாள். அரசருக்கு சற்றும் பிடிக்காத காரியத்தை எப்படி செய்யத் துணிந்தாய்"



"அரசருக்கு பிடிக்காது என்று நீங்கள் சொன்னால் ஆயிற்றா, அரசர் சொல்லட்டும்"

"உங்கள் ஒவ்வொருவரிடமும் அரசர் பேச வேண்டுமா. அப்பொழுது தான் நீங்கள் பேசுவீர்களா. ஊருக்குள் பெரிய மனிதனாக இப்படியெல்லாம் எண்ணமா" அந்த வாளால் பட்டென்று அவன் கன்னத்தில் அடித்தார். அவன் கன்னத்தை பொத்திக் கொண்டான். மக்கள் மிரண்டு பின்னடைந்தார்கள். அவன் மனைவி வாய் பொத்திக் கொண்டு அழுதாள்.

"அடிக்காதீர்கள் அய்யா" என்று அழுதாள்.

"இளம் மனைவி, சிறு குழந்தைகள், என்ன நாடகம் போடுகிறாயா, யார் பரிதாபத்தை சம்பாதித்துக் கொள்ள எதற்காக. யுத்தம். மிகப் பெரிய யுத்தம் நடக்கப் போகிறது. வா, வந்து மான்ய கேடயத்தை தாக்கு. வேங்கியை வீழ்த்து. ஒவ்வொரு வீரனும் ஏகப்பட்ட வேலையோடு அலைந்து கொண்டிருக்கிறான். நீ இங்கே உட்கார்ந்து கொண்டு தலைமுடியை சீவுவது போல கழுத்தை சீவிக் கொள்ளப் போகிறாயா, உன் உயிர் ஒன்றும் எங்களுக்கு தேவை இல்லை. உன் உழைப்பு எங்களுக்குத் தேவை. உன் வீரம் எங்களுக்குத் தேவை. உன் தற்கொலை எங்களுக்கு முக்கியம் அல்ல. நரபலியை மன்னர் விரும்புவதில்லை. ஆடுகளைக் கூட வெட்ட வேண்டாம் என்று சொல்லி விட்டார்.

போய் மன்னரிடம் நவகண்டம் கொடுக்கிறான் என்று சொல்" பாண்டியன் ஸ்ரீ வல்லபனிடம் காதோரம் மெல்லச் சொல்ல, பாண்டியன் ஸ்ரீ வல்லபன் சட்டென்று குதிரை ஏறி பறந்தான்.

அவன் வாள் எடுத்து தன்னை தாக்கிக் கொள்வானோ என்ற பயத்தில் அவனைப் புரட்டி முதுகு பக்கம் கயிறு போட்டு இறுக்கினார். தரையில் உட்கார வைத்தார். அவன் முகம் முழுவதும் கோபத்தோடு தரையில் உட்கார்ந்து கொண்டான்.

இனி என்ன ஆகும் என்பது போல் மக்கள் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

இராஜேந்திர சோழர் அருகே வந்தார். அவனை உற்றுப் பார்த்தார். அவன் இராஜேந்திர சோழனை நோக்கி அழத் துவங்கினான்.

"சரி. இவனுடைய நவகண்டம் நமக்கு தேவையில்லை. இவனுக்கு

பதிலாக இவன் மனைவியையும், குழந்தையையும் என்னைப் ஊற்றி எரித்து விடுங்கள். விறகுகளை அடுக்குங்கள்" என்று சொல்ல, அங்கு விறகுகள் வேகமாக அடுக்கப்பட்டன. அவன் அலறினான்.

"நீ எதற்காக சாகிறாய். எனக்காக உன் மனைவியும், குழந்தைகளும் சாகட்டும். நான் நிச்சயமாக ஊத்தை அடையாமல் வருவேன். உன்னைவிட அவர்களுடைய அலறல் என்னை காப்பாற்றுமல்லவா, எங்கே நீங்கள் தீ வையுங்கள்" என்று சொல்ல தீப்பந்தம் தயார் ஆயிற்று.

வந்தியத்தேவர் அமைதி என்று கை காட்டினார். அவர்கள் எல்லோரும் அவனையே பார்த்துக் கொண்டிருக்க, "மன்னித்துக் கொள் ளுங்கள் அய்யா, இனிமேல் இப்படி செய்ய மாட்டேன்" என்றான்.

"உன் மனைவியின் உயிர் உனக்கு முக்கியமல்லவா. அதே போல உன் உயிர் உன் மனைவிக்கு முக்கியம். இப்படிச் செய்யாதே. வா ப ந்தத்திற்கு போகலாம். எழுந்திரு" என்றார்.

அவன் கை கட்டு அவிழ்த்து விடப்பட்டது. குதிரையில் தாவி ஏறினான். மன்னரை சுற்றி விட்டு அவரை வணங்கி முன்னேறினான். தன் பையில் இருந்த பத்து கழஞ்சு பொற்பையை அவன் மனைவியிடம் அவர் வீசினார். அவள் அதை வாங்கிக் கொண்டு நிலம்பட விழுந்து வணங்கினாள். குழந்தைகள் வணங்கினார்கள். ஊர் மக்கள் வணங்கினார்கள். மன்னர் முகத்தில் மிக மெல்லியதாய் ஒரு மகிழ்ச்சி ரேகை ஓடியது.

பரவை நிம்மதி அடைந்தாள். மன்னர் பரவையைப் பார்த்து, "நம்முடைய சோழ ஜனங்கள் என் மீது வைத்திருக்கும் காதலுக்கு நான் என்ன பதில் செய்வேன். எனக்கு தெரியவே இல்லை பரவை" என்று சொன்னார். பரவை பதில் சொல்லாது சிரித்தாள். அவளுக்குள் ஒரு நிம்மதி வந்தது.

இப்படியே திரும்பி வரும் வரை இனிமையாக வந்தால் தஞ்சை பெருவுடையாருக்கு செண்பக மாலை சாத்துவதாக அங்கேயே வேண்டிக் கொண்டாள்.

தஞ்சை பெருவுடையார் கோவிலை மறுபடியும் பாப்போமா அல்லது ஜெயங் கொண்டத்திலேயே தங்கி விடுவோமா அவளுக்கு சட்டென்று சந்தேகம் வந்தது. எதுவாய் இருந்தால் என்ன என்



போனால் வேறு யாரோ சாத்துவார்கள். வேண்டிக் கொண்டது நிறைவேற்றப்படும். நான் வராவிட்டால் என்ன. ஆனால் வர வேண்டும் என்று மனதில் நினைத்துக் கொண்டாள்.

ஆனால் ராகு தசை ராகு புக்தி, மன கிலேசங்கள் இராஜேந்திரரை தாக்கிக் கொண்டு தான் இருக்கும்.



# 29

அவர்களுக்கு வழியில் வண்ணமாக உணவு கிடைத்தது. எல்லா அந்தணர்கள் குடியிருப்பிலும் அவர்களை வரவேற்று உணவு படைத்தார்கள். அவர்கள் எடுத்து வந்த அரிசி அதிகம் செலவழியாமல் இருந்தது. வெட்ட வெளிகளில் தங்காமல் வீட்டுத் திண்ணைகளில் தங்கினார்கள். கோவில்களில் உறங்கினார்கள். ஒரு பகல் பொழுது பெரிய ஆலமரத்தடியில் உட்கார்ந்து கொண்டார்கள்.

"நமது மன்னர் இராஜேந்திர சோழர் பட்டாபிஷேகத்திற்கு நாள் குறித்தது பற்றி விவரமாக சொல்வதாகச் சொன்னீர்கள். அதை கேட்க ஆவலாக இருக்கிறோம்" மருவூர் அந்தணர் சரப சாஸ்திரிகள் பேச, வில்வநாத ஸ்ரௌதிகள் வாய் விட்டுச் சிரித்தார்.

"இன்னும் அதை மறக்கவில்லையா. மறந்திருப்பீர்கள் என்று நினைத்தேன்"

"எப்படி மறக்க முடியும். நான் இடைவிடாது அதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருக்கிறேன்"

"ஒரு பெண்ணுக்கு ருது ஜாதகம் முக்கியம். ருது ஜாதகம் சரியாக எழுதப்பட்டு விட்டால் ஜனன கால ஜாதகத்தையும் தூக்கி போட்டு விடலாம். அதே போல ஒரு மன்னனுக்கு பட்டாபிஷேக நாள் மிக முக்கி

யம். அது சரியாக கணிக்கப்பட்டு விட்டால் ஜனன கால ஜாதகத்தை பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. மன்னர் இராஜராஜர் நேரிடையாக உட்கார்ந்திருக்கிறார். கிருஷ்ணன் ராமன் இருந்திருக்கிறார். நீங்களும், உங்களைச் சார்ந்தோரும் போயிருக்கிறீர்கள். அத்தை குந்தவை தேவியார் வந்திருக்கிறார். இப்படி எல்லோருமாய் இருந்து, கணித்த ஜாதகமல்லவா இது. எல்லோருடைய கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லக்கூடிய விஷயமல்லவா அது"

"என்ன செய்தீர்கள். கொஞ்சம் தயவு செய்து சொல்லுங்கள்"

"எதற்காக இதை இவ்வளவு ஆவலோடு கேட்கிறீர்கள்" விஸ்வநாத ஸ்ரௌதிகள் சரபரைக் கேட்டார்.

"இது தெளிவானால் இன்னும் கூர்மையாக மற்றவர் ஜாதகங்களையும் நான் கணிக்க முடியும். ஜாதகங்களை பார்க்க பார்க்கத் தான் இந்த ஜோசிய அறிவு விருத்தி ஆகிறது"

"அது உண்மை. ஆவலாக கேட்பதால் உங்களுக்கு சொல்லித் தருவதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. இதில் எந்த இரகசியமும் இல்லை.

ஒரு மிகச் சிறந்த நாளை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது தான் மாமன்னர் இராஜராஜருடைய கட்டளை. கிருஷ்ணன் ராமன் என்னை தேர்ந்தெடுத்து இதை நீங்கள் சரியாக செய்வீர்கள். உங்களுக்கு துணையாக இருக்கிறேன் என்று சொன்னார். கிருஷ்ணன் ராமனுக்கும் நன்கு வேலை தெரியும். ஆனால் விரைவாகச் செய்ய தெரியாது. எனக்கு செய்து செய்து பழக்கம் என்பதால் என் மனக்கணக்கு நினைவுகள் பலம் பெற்றது என்பதால் இதை நான் பல்வேறு கோணங்களில் ஆராய்ச்சி செய்து விரைவாக செய்து முடித்தேன்.

நான் குறித்த நேரம் ரிஷபலக்னம், ரிஷப இராசி, லக்னத்தில் சந்திரன்"

"ஆஹா, ஆஹா" பல அந்தணர்கள் எழுந்தார்கள்.

"லக்னத்தில் சந்திரன் இருந்தால் அவன் அழகன். மன்மதனுக்கு ஒப்பான, நிகரான அழகன்"

"ஜனன காலத்து ஜாதகத்தில் லக்னத்தில் சந்திரன் இருந்திருக்கிறது. ஆனால் பட்டாபிஷேக ஜாதகத்தில் அது வர வேண்டும் என்பதில் நான் குறிப்பாக இருந்தேன். ஏனெனில் ஒரு அழகு வளர



வளர அதிகரிக்க வேண்டுமே தவிர குறையக் கூடாது. நீங்கள் வேண்டுமென்றாலும் உற்று கவனித்து வாருங்கள். மாமன்னர் இராஜேந்திரருடைய அழகு வயதாக வயதாக இன்னும் பொலிவாக இருக்கும். வெகுச் சிலருக்கே இது அமையும்.

அதற்கு காரணம் ஜாதகம் மட்டுமா. வயதாகி ஏதும் சாதிக்கவில்லையென்றால் முகம் தொய்ந்து போகும். அய்யோ எதற்கு இத்தனை நாள் உயிரோடு இருந்தோம் என்ற நினைப்பே காட்டும். வெற்றி மீது வெற்றி பெற்றவருக்கு வயதாக வயதாக நிறைய சாதித்து விட்டோம் என்ற சந்தோஷத்தின் பேரிலேயே முகம் பொலிவுள்ளதாக மாறும்"

"உண்மை"

"அப்படி மிகவும் சாதிக்க வேண்டுமென்றால் மற்ற கிரகங்களும் சரியாக இருக்க வேண்டுமல்லவா"

"ஆமாம்"

"இரண்டிலே சூரியனும், சுக்கிரனும், அதாவது வீடு ஸ்தானத்தில் இடம், பொருள், மனை, வாகனம் இவையெல்லாம் மிகச் சரியாக அமையும். நாலுக்குரிய சூரியன் இரண்டில், குடும்பம், தனம், வாக்கு மிகச் சிறப்பாக இருக்கும், சொன்ன சொல் தவறாதவர். எப்படி பேச வேண்டும் என்று தெரிந்தவர். வாக்கில் வன்மை உடையவர். கூர்மையான புத்தி உடையவர். இதனால் தான் இரண்டிலே சூரியனும், சுக்கிரனும் இருக்கும்படி அமைத்தேன்.

இரண்டில் சூரியனும், சுக்கிரனும் இருப்பின் ஆறாம் இடத்தில் சனி. ஆறாம் இடத்தில் சனி உச்சன். ஏழாம் இடம் களத்திர ஸ்தானம். களத்திர ஸ்தானத்துக்கு உரியவன் செவ்வாய் பன்னிரெண்டில்"

"ஆஹா, பன்னிரெண்டு மறைவிடமாயிற்றே"

"இருந்தால் என்ன. அங்கு செவ்வாய் ஆட்சி. செவ்வாய் பூமி காரகன். அதிகப்படியான பூமியை இந்த ஜாதகன் நிச்சயமாக கைக் கொள்வான். இந்த பட்டாபிஷேகம் இந்த நேரத்தில் நடைபெற்றால் பல தேசங்களை வெற்றி கொள்ளக்கூடிய வாய்ப்பு வெகு நிச்சயம் இந்த ஜாதகருக்கு கிடைக்கும் என்று அடித்துச் சொன்னேன்"

"பிறகு?"

"பத்தில் கேது, எது செய்தாலும் சிறப்பு, ஆறில் சனி உச்சமாக

இருப்பதால் தனம், ரோகம், சத்ரு இவைகள் சரியாக இருக்கும். சத்ருவை நாசம் செய்வான். ரோகம் பெரிதாக இருக்காது. தனம் கொண்டு வந்து கொட்டும்"

"லக்னாதிபதி சுக்கிரன் இரண்டில் இருப்பதால் இவருடைய விதி பலமாகவும் இருக்கும். பதினோருக்குரிய குரு ஒன்பதில், பதினொன்று லாபஸ்தானம், அவன் இருப்பது சிறப்பான இடத்தில், எனவே இது ஒரு பரிபூரண ஜாதகம். மிகச் சிறந்த நேரம்"

"அதாவது அதிகாலை நாலரை மணிக்கு சுக்கிர ஹோரையில் பட்டாபிஷேகம் நடத்த வேண்டுமென்று, நாலரையிலிருந்து ஆறுவரை என்று தீர்மானித்தேன். மிக அற்புதமாக அந்த பட்டாபிஷேகம் நடந்தது. அப்போது ஒரே ஒரு குறை இந்த ஜாதகத்தில் இருக்கிறது என்று கிருஷ்ணன் ராமனிடம் சொன்னேன்"

"இராகு திசை இராகு புத்தியில், இந்த ஜாதகர் கஷ்டப்படுவார். மிக மன சஞ்சலங்களுக்கு ஆளாவார். இழப்புகள் ஏற்படும். தோல்விகள் வராது எனினும், வெற்றிகளுக்கு அதிகம் பலி கொடுக்க வேண்டியதாயிருக்கும் என்று சொன்னேன். அதை ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறார். கிருஷ்ணன் ராமன் இதை என்னிடம் வெளியே சொல்லாதே என்று சொல்லி விட்டார்"

"ஆனால் கிருஷ்ணன் ராமன் வாயை பிடுங்கி இராஜேந்திர சோழர் என்னவென்று விசாரித்து இதை தெரிந்து கொண்டு விட்டார். என்னை தனியாக அழைத்து நீர் தானே, ஜாதகம் கணித்தீர். இது தானே அந்த ஆறாவது வருடம், இப்போது தானே ஆரம்பிக்கிறது. இராகு திசை, இராகு புத்தி என்று கேட்டார். நான் 'ஆமாம்' என்று சொன்னேன். 'இந்த நேரத்தில் நான் மரணமடைவேனா' என்று கேட்டார். வெகு நிச்சயம் நீங்கள் மரணமடைய மாட்டீர்கள். நீங்கள் எண்பத்திரண்டு வயது வரை வாழ்வீர்கள் என்று உறுதி சொன்னேன். ஆனால் வெற்றி இருக்காதோ, தோல்வி ஏற்படுமோ என்று பயந்தார்"

"இராகு திசை அவரை கலங்கடிக்கிறது என்பதை புரிந்து கொண்டேன். இல்லை இதற்கும் பிரசன்னம் பார்த்து விடலாம். நீங்கள் படி ஏறுவதற்குள் உங்கள் உடம்பில் பறவை எச்சம் விழுந்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம் என்று சொன்னேன். அவர் படி ஏறுவதற்குள் காக்கை எச்சம் அவர் தோளில் விழுந்தது. அவர்



சந்தோஷமானார்"

"இப்படி பிரசன்னம் எப்படி பார்க்கிறீர்கள்?"

"இது உள்ளுணர்வு, அது தவிர பேசுகின்ற நேரத்தை கணித்து எது நமக்கு இப்போது உதவி செய்யும் என்று கணித்து விடலாம். பறவை, பல்லி, பசு, கருடன் என்று பலவிதங்களில் நமக்கு நல்ல சகுனம் கிடைக்கும். அதே போல கெட்ட சகுனங்களுக்கும் சில விதிவிலக்குகள் உண்டு"

"இதற்கு இராஜேந்திரர் என்ன சொன்னார்?"

"நான் உங்களை எல்லாம் தவறாக எடை போட்டு விட்டேன். கருத்தச்சர்களுக்கு நான் ஏதோ கொடுக்க முற்பட்ட போது பலமாக அந்தணர்கள் மறுத்ததால் எனக்கு கோபம் ஏற்பட்டு விட்டது"

"ஆமாம். நாம் அதை கொஞ்சம் வேகமாகத் தான் செய்து விட்டோம். தஞ்சை அந்தணர்கள் தான் அதில் முரட்டுத்தனமாக நடந்து கொண்டார்கள். அப்படி நடந்து கொண்டதற்கு ஒரே ஒரு காரணம் உண்டு. பூணூல் அணிந்து கொள்ள வேண்டும் என்று கருத்தச்சர்கள் கேட்டவுடன் இவர்கள் பயந்து விட்டார்கள். தங்களுக்கு போட்டியாக வந்து விடுவார்களோ என்று பயந்து விட்டார்கள். போட்டியாக வர முடியாது என்பதை புரிந்து கொள்ள மறந்து விட்டார்கள்.

பூணூல் அணிந்து கொள்வேன் என்று தாராளமாக சொல்லி இருக்கலாம். நெருப்பில் உட்கார்ந்து இரும்பை ஓங்கி அடிக்கிறவன் எப்படி காயத்ரி ஜபம் செய்ய முடியும். அந்த சப்தத்தில் இருப்பவன் எப்படி மனதை ஒரு நிலைப்படுத்த முடியும். எனவே பூணூல் என்பது அவர்களுக்கு அலங்காரமாகத் தான் இருக்கும் என்பதை புரிந்து கொள்ளாமல் வேகமாகி விட்டார்கள். அதனால் கெட்ட பெயர் வாங்கிக் கொண்டார்கள்"

"இப்பொழுது இராஜேந்திரருடைய நிலைமை என்ன?"

"மிகப் பிரியமாக இருக்கிறார். மிக மரியாதையாக இருக்கிறார். நாமெல்லாம் எந்த எதிர்ப்புமில்லாமல் காசிக்கு கிளம்பியது அவருக்கு மிகுந்த சந்தோஷம். வேண்டாம் என்று கூட சொல்லி விடலாமா என்பதைத் தான் மறுபடியும் சொன்னார். நாங்கள் சந்தோஷமாக போய் வருகிறோம். உங்களுக்கு உதவியாக இருக்கிறோம் என்று சொன்ன போது அவர் அளவில்லாத சந்தோஷம் அடைந்தார்.

மருவூர் அந்தணர் எழுந்தார். விஸ்வநாத ஸ்ரௌதிபகளின் காலில் விழுந்து வணங்கினார்.

"உங்களைப் போன்றவர்கள் இருப்பதால் தான் நாட்டில் மழை பெய்கிறது. நீங்கள் சொன்ன ஒரு வார்த்தை முக்கியம், அவரவர்க்கு வேலை இருக்கிறது. அவரவர் வேலையை அவரவர் செய்து வந்தால் போதும் நாடு சுபிட்சமாக இருக்கும். இவருக்கு இது கூடாது அவருக்கு அது கூடாது என்று மறுப்பதற்கு நமக்கு எந்த உரிமையும் இல்லை.

கருவறைக்கு வந்து யாராவது பூஜை செய்ய வேண்டுமென்றால் வந்து செய்யட்டுமே என்று தான் சொல்லிவிட வேண்டும். அதற்குண்டான யோக்யதையை வளர்த்துக் கொள் என்கிற ஒரே ஒரு கட்டளையை வைத்துக் கொள்ள வேண்டும். மது அருந்தி விட்டு கோவில் கருவறைக்குள் வர முடியுமா. எனவே மது அருந்தும் பழக்கத்தை விட்டு விடு"

"ஆமாம். இன்று பல காளி கோவில்களில் அந்தணர் அல்லாதவர் தான் பூஜை செய்கிறார்கள், மிகச் சிறப்பாக நடக்கிறார்கள். மிக அழகாக அலங்காரம் செய்கிறார்கள். அவர்களும் வடமொழி கற்று நன்கு உரத்த குரலில் மந்திரம் சொல்கிறார்கள்"

"வடமொழி கற்பதற்கு பெரிய புத்தி தேவையா. எதுவும் இல்லை ஐயா, ஒழுக்கமாக இருப்பதற்குத் தான் நல்ல புத்தி தேவை. ஒழுக்கமாக இருக்க எவர் முயன்றாலும் அவர் சிறப்பாக இருப்பார். இதில் ஜாதி வித்தியாசமே இல்லை.

ஒரு தட்டு தட்டி நம்மை தாழ்த்தி வைத்தது தான் நல்லதாகப் போயிற்று. இல்லையெனில் தலைகால் புரியாமல் ஆடிக் கொண்டிருப்போம், மேலே விழாதே. அங்கே நிற்காதே. இங்கே நிற்காதே என்று அலட்டிக் கொண்டிருப்போம். அதுமட்டுமில்லை மிகப்பெரிய காசு ஆசை வந்து விட்டது. அதனால் தான் பிரச்சனை பெரிதாகி விட்டது. செல்வந்தராக இருக்க வேண்டும். மாராயராக இருக்க வேண்டும் என்று ஆசைப் படுகிறார்கள். அதுக்கேற்றபடி இடுப்பில் வாள் தரித்து போருக்கு போக பயப்படுகிறார்கள். வெறும் கழியை வைத்துக் கொண்டே பெருந்தனம் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். இதெல்லாம் தான் பிரச்சனையை கொண்டு வந்து கொடுத்து விடும்"

"இப்பொழுது சொல்லுங்கள் இந்த ஒன்றரை வருடம் ராகு



திசை, ராகு புத்தி இராஜேந்திர சோழருக்கு என்னவெல்லாம் பிரச்சனை வரும்" சரபர் கேட்டார்.

"என்னுடைய அபிப்ராயத்தில் இராஜ நரேந்திரன் மயிரிழையில் தப்பிப்பான். என்னுடைய அபிப்ராயத்தில் குறைந்தபட்சம் பதினைந்து சேனாதிபதிகளாவது மரணமடைவார்கள். என்னுடைய அபிப்ராயத்தில் இராஜேந்திர சோழர் அடுத்தது என்ன செய்வது என்று தெரியாமல் ஆறு அல்லது ஏழு முறை திகைத்துப் போய் நிற்பார். என்னுடைய அபிப்ராயத்தில் இன்னும் ஆறு வருடங்களுக்கு அவருக்கு ஓய்வு என்பதே இருக்காது. என்னுடைய அபிப்ராயத்தில் நீண்ட வயது வாழ்வார். ஆனால் அவர் தன் மகன் இழப்பை அதாவது புத்திர சோகத்தை சந்திக்கும் படி நேரும்"

"அடடா, அடடா" அந்தணர்கள் மன்னருக்காக வருத்தமுற்றார்கள்.

"இதையெல்லாம் உங்களோடு வைத்துக் கொள்வது நல்லது. அதிகம் வாய் திறந்து பேசினீர்கள் என்றால் உங்களுக்கு உண்டான மரியாதை கெட்டுப் போகும். இராஜாதிராஜன் சீக்கிரம் இறந்து விடுவார் என்று சொன்னால் அவர் இறக்க நீங்கள் ஆசைப்படுவது போல் வந்து விடும். எனவே வாயைத் திறக்காதீர்கள். அதிகம் பேசாதீர்கள். அலட்டலாக பேசாதீர்கள். எல்லோரையும் மரியாதையாக நடத்த பழகுங்கள். ஒருமையில் கூப்பிடாதீர்கள். அப்படி ஒருமையுடன் கூப்பிட விரும்புவதென்றால் பிரியத்துடன் கூப்பிடுங்கள்"

"ஜாதகம் கணிப்பதற்கோ, கல்வி, கேள்விகளில் உதவி செய்வதற்கோ ஏழைகளிடம் காசு வாங்காதீர்கள். உண்ண உணவு, இருக்க இடம், உடுத்த உடை இது போதும். மிகப்பெரிய சொத்துக்கள் எதுவும் நமக்குத் தேவையில்லை. அப்படி விலகி இருந்தாலே சொத்துக்கள் தானாக வரும்"

"நாளை கொள்ளிடம் தாண்டி ஜெயங்கொண்டம் போய் விடுவோம். மிகச் சிறந்த அரண்மனை பெரிய கோட்டையுடன், கோவிலுடன் நிர்மாணிக்கப்பட்டு இருக்கிறதாம். இராஜேந்திர சோழர் பார்த்து பார்த்து செய்கிறாராம். நித்த விநோத பெருந்தச்சன் தன் முழு திறமையை காட்டியிருக்கிறாராம். காலாகாலத்துக்கும் நின்று பெரிய கதையை சொல்லுமாம். அவ்வளவு அழகாம், பெருவுடையார் கோவிலைப் போல உயரமாக இல்லாமல், அதே வடிவத்தில் சிறிதாக இருக்குமாம். பெருவுடையார் கோவிலை ஆண் என்றால், இதை

பெண் என்றும் சொல்லலாம் என்று சொல்லுகிறார்கள். அத்தனை அழகு என்று சொல்லுகிறார்கள்"

வழி முழுக்க எத்தனை ஊர்களை பார்த்தோம். எத்தனை விதமான மனிதர்கள். எத்தனை விதமான பயிர்கள், தஞ்சையில் விளையும் நெல்லுக்கும் இங்குள்ள நெல்லுக்கும் எவ்வளவு வித்தியாசம். கரும்பு எவ்வளவு தடிமனாக இருக்கிறது. வெற்றிலை எவ்வளவு முரடாக இருக்கிறது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை, அதைவிட எனக்கு பிடித்தது சாமகானத்திற்கென்றே ஒரு ஊர் இருக்கிறது. அந்த கிராமத்தில் உள்ள அத்தனை பேரும் சாமகானம் தான் சொல்கிறார்கள். கிழிந்த உடையுடன் இருக்கிறார்கள். நல்ல போஷாக்கான உணவு இல்லை. ஆனாலும் அதைப் பற்றியெல்லாம் கவலையே இல்லை. சாமகானம் கற்பது, சாமகானம் சொல்லித் தருவது, இது தான் வாழ்க்கை. அவர்களை வலம் வந்து நமஸ்கரித்தது எனக்கு மிகுந்த சந்தோஷம். கரைபோட்ட காழகம் நாலும், புடவைகள் ஐந்தும் கொடுத்த போது அவ்வளவு குதூகலம் அவர்களிடம், ஒரு கூடை நெல்லையும் கொடுத்து விட்டு வந்திருக்கிறோம். அதுவும் சந்தோஷம். வாங்குவது மட்டும் தான் சந்தோஷமா. கொடுப்பதும் சந்தோஷம் இல்லையா. நான் அப்போது தான் அதை உணர்ந்து கொண்டேன். நாமும் கொடுக்க பழக வேண்டும். வாரி வழங்க பழக வேண்டும்" என்று விஸ்வநாத ஸ்ரௌதிகள் சொல்ல, எல்லா அந்தணர்களும் மிக வேகமாக "ஆமாம், ஆமாம்" என்று தலை ஆட்டினார்கள்.

**வா**ழ்க்கையில் நடக்கின்ற மோசமான அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக் கொள்பவன் கெட்டிக்காரன். தஞ்சை புறம்படியை தாண்டியதும் பரமன் மழபாடியார் இராஜேந்திரரிடம் விடை பெற்றார்.

தஞ்சையை பற்றி எந்த கவலையும் உங்களுக்கு வேண்டாம். இராஜாதிராஜன் அங்கிருக்கும் வரை தெற்கே உள்ள எந்த தேசங்களை பற்றியும் கவலை வேண்டாம். நான் வெறுமனே உட்கார்ந்து கொண்டிருக்க மாட்டேன். சுற்றி சுற்றி வருவேன், கிளம்பும் முன்பு வீரமாதேவியார் ஒரு விண்ணப்பத்தை உங்களிடம் வைக்கச் சொன்னார். நான் எங்கு போனாலும், எங்கு பயணப்பட்டாலும் என்னோடு அவர்களும் வருவதாகச் சொன்னார்கள். நான் அழைத்துப் போகட்டுமா. உங்கள் அனுமதி தேவை" மிகத் தாழ்ந்த குரலில் அமைதியாக



பரமன் மழபாடியார் கேட்டார்.

இராஜேந்திர சோழர் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார். யோசித்தார்.

"அழைத்துப் போங்கள். வீரமாதேவிக்கு அது ஆறுதலாக இருக்கும். கீழைச் சாளுக்கியம் நோக்கி தான் வரவில்லையே என்ற கவலை அவளுக்கு இருக்கிறது. ஆனால் உடல்நிலை ஏற்றுக் கொள்ளுமா என்பதை மட்டும் ஒரு முறைக்கு இருமுறை சோதனை செய்து பார்த்துக் கொள்ளுங்கள். முதலில் தஞ்சைக்குள்ளாகவே குதிரை ஓட்டிப் போகட்டும். எப்படி ஓய்வெடுக்கிறார்கள். ஓய்வெடுக்க முடிகிறதா. கை, கால்களில் வலி இருக்கிறதா. வேறு ஏதேனும் தொந்திரவு இருக்கிறதா என்று பாருங்கள். பெண்கள் பிரச்சனை பெரிதாகாமல் இருக்க வேண்டும். அது தான் முக்கியம். அந்த உடல்நிலை சரியாக இருந்தால் எங்கு வேண்டுமானாலும் போய் விடலாம். ஒரு வாரம் அல்லது அரை மாதம் தஞ்சைக்குள்ளாகவே அவர் சுற்றி வரட்டும், பிறகு தெற்கே கன்னியாகுமரி வரையில் கூட போய் வரலாம். கேரளத்திற்கு போவது மட்டும் யோசித்து செய்யுங்கள்"

"கேரளத்திற்கு நான் போகப் போவதில்லை. ஏனெனில் அவர்கள் மறைந்திருந்து தாக்குபவர்கள், பாண்டிய தேசம் போகலாம் என்றிருக்கிறேன். மதுரையை அவர்களுக்கு காட்ட வேண்டும். திருவெண்காடும், பூம்புகாரும், நாகை பௌத்த விகாரையும், மேல்பட்டினமும் இன்னும் சற்றுத் தள்ளி இராமேஸ்வரமும் அவர்களுக்கு போக வேண்டும் என்பது ஆசை. அவர்கள் உடல்நிலைக்கு ஏற்ப பக்குவமாக அழைத்துப் போகிறேன். என்னாலேயே விரைவாக குதிரை ஓட்ட முடியாது. வயதாகி விட்டதல்லவா" என்று மறுபடியும் தாழ்ந்த குரலில் பேசினார்.

"உங்களால் எப்பொழுதும் விரைவாக என்னை விலக்க தெரிகிறது. உங்கள் வயதில் உங்கள் நிதானம் எனக்கு வருமா என்று கேள்வி இருக்கிறது அல்லது சாகும் வரை படபடப்பாகவே இருப்பேனா என்ற பயமும் இருக்கிறது. சேனாதிபதி சோம்பலாக இருக்கலாம். மன்னர் படபடப்பாக இல்லாமல் முடியுமா. ஒரு பிரச்சனையா, இரண்டு பிரச்சனையா. போதாக்குறைக்கு நாமாக வேறு பிரச்சனைகளை இழுத்து விட்டுக் கொள்கிறோம்"

"எதை இந்த படை எடுப்பை சொல்கிறீர்களா?"

"ஆமாம். குந்தவையால் ஏற்பட்ட படை எடுப்பு தானே. குந்தவைக்கு தெரியுமா. எத்தனை வீரர்கள், எத்தனை குடும்பங்களை பிரிந்து எவ்வளவு தூரம் நடக்கிறார்கள் என்று அந்த குந்தவைக்கு தெரியுமா, புரியுமா. ஒரே ஒரு பெண்மணியால் இந்த படையெடுப்பு நடக்கிறது. விமலாதித்தன் மிக நல்லவன். அவனை அனுசரித்து குடித்தனம் நடத்தி இருந்தால் கீழைச் சாளுக்கியம் வலுவாகி இருக்கும். நமக்கு பெரும் உதவியாக இருந்திருக்கும். நமக்கென்று சில தலையெழுத்து இருக்கிறதல்லவா" இராஜேந்திர சோழர் அலுத்துக் கொண்டார்.

அவர்கள் கை கூப்பினார்கள். பிரிந்தார்கள்.

திருவையாறில் அய்யாரப்பனை இராஜேந்திர சோழர் வணங்கினார். சேனாதிபதிகள் எல்லோரும் சன்னதிக்குள் குழுமி இருந்தார்கள். இராஜேந்திர சோழர் எல்லோருக்கும் திருநீறு இட்டார். தலையைத் தடவினார். எல்லா சேனாதிபதிகளும் சந்தோஷமானார்கள்.

"இனிமேல் நிதானமான பயணம் இல்லை. விரைவான பயணம், எவ்வளவு விரைவாக ஜெயங்கொண்டம் போய் சேர முடியுமோ அவ்வளவு விரைவில் சேர வேண்டும். இரவு பயணம் வேண்டாம்" என்று கட்டளை இட்டார்.

மெய்க்காவல் படைக்கு நடுவே பரவையோடு குதிரையில் ஏற குதிரைகள் வேகம் எடுத்தன. ஜெயங்கொண்டம் நோக்கி போக வேண்டும் என்று எல்லோருக்கும் கட்டளை வந்தது. வெளிச்சம் மங்கும் வரை பயணம் செய்தார்கள். பிறகு அங்கங்கே உள்ள கிராமங்களில் தங்கினார்கள். கிராம மக்களை தொந்தரவு செய்யாது தாங்களே சமைத்து உண்டார்கள். வேடிக்கை பார்த்த கிராமத்து இளைஞர்களையும் அரவணைத்து பக்கத்தில் உட்கார வைத்து அவர்களுக்கும் சோறு கொடுத்தார்கள். வேக வைத்த கறித்துண்டுகளை நீட்டினார்கள். திண்ணைகளிலும், பொதுக் கூடங்களிலும், மரத்தடியிலும் கோவில்களிலும் அயர்ந்து தூங்கினார்கள். நீர் சுத்தமாக இருக்கிறதா என்று சோதித்த பிறகே குடிக்கவும், குளிக்கவும் துவங்கினார்கள்.

இரவு நேரம் நிற்காமல் தன் மனைவியோடு ஞான சம்பந்தன் மாட்டு வண்டிகளை விரட்டிக் கொண்டு ஜெயங்கொண்டம் நோக்கிப் போனான். தந்தையை எப்படியும் அங்கு சந்தித்து விடலாம் என்று



திட்டமிட்டு இருந்தான்.

ஜெயங்கொண்டத்து கோட்டைக் கதவுகள் விரியத் திறந்தன. நித்த விநோதப் பெருந்தச்சனும் அவனுக்கு துணையாக இருந்த வீரசோழ பெருந்தச்சனும், காஷ்டகாரி ஆராவமுத புருஷோத்தமனான இராஜேந்திர சிம்ம பேராசிரியனும், கிருஷ்ணன் ரங்கன் திரிபுவன மாதேவி பேராசிரியனும் அந்த கோட்டைக்கும், கோவில் கட்டவும் பொறுப்பாக இருந்தார்கள். ஓவியக் குலத்தை சேர்ந்த நால்வர் விதம் விதமாக சுண்ணம் அடித்தார்கள். அந்தணர் வீடுகளில் காவியும், வெள்ளையும் இடப்பட்டன. மறவர் வீடுகளில் மஞ்சள் எழுதப்பட்டன. எல்லோர் வீட்டு வாசலிலும் புலி வரையப்பட்டிருந்தது. வாசல் வெளியில் நீல நிறத்தில் எழுதப்பட்டிருந்தது. சேனாதிபதிகளுடைய கூடாரங்கள் வெள்ளை நிறத்தில் இருந்தன. பஞ்சமருக்கு உறுதியான ஓட்டு வீடுகள் எழுப்பப்பட்டன. பஞ்சமருக்கு கோட்டைக்கு வெளியே வைக்க வேண்டுமா என்று வீரசோழ பெருந்தச்சனான இரவி என்பவன் கேட்டதற்கு, "இல்லை. அவர்களுக்கும் கோட்டைக்கு உள்ளேயே இடம். எவரையும் நாம் பிரித்து வெளியே அனுப்ப முடியாது. பாதுகாப்புக்கு நல்லதல்ல. சகலரும் கோட்டைக்குள்ளேயே இருக்க வேண்டும்" என்று இராஜேந்திர சோழர் சொன்னார்.

இராஜேந்திர சோழருடைய அரண்மனை கரு நிறத்தில் பளபளத்து இருந்தது. அதற்கு உள்ளாலை என்று பெயர். உள்கோட்டை என்றும் சொன்னார்கள். சுற்றி மதில் சுவர் எழுப்பி அதில் கண்காணிக்க கோபுரங்கள் அமைத்து உள்ளுக்குள்ளே அலுவலகம், அலுவலகம் தாண்டி சபை, சபை தாண்டி இரகசியமாக பேச வேண்டிய முற்றம். பிறகு அரண்மனை. அரண்மனை வாசலில் இன்னொரு சபை. அதைத் தாண்டி அந்தப்புரங்கள் என்று மிகப் பெரிதாக வடிவமைக்கப்பட்டிருந்தது.

வாள்முதுகு படைவீரர்கள் வந்து விட்டார்கள் என்று எக்காளம் சொல்ல ஸ்தபதிகள் பரபரப்பானார்கள். அத்தனை பேரும் வந்து அரண்மனை முதற்கொண்டு எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்து விட்டுத்தான் போவார்கள். அவர்கள் போய் விதம் விதமாக மாளிகையை பற்றி பேசுவார்கள். இது நல்ல கண்காட்சி. இப்படி பேசுகிறபோது என்ன குறை என்பதும் அவர்களுக்கு தெரிந்து விடும். இதனால் தங்களுடைய ஆட்களை பேசுவதை கேட்க விழிப்போடு இருக்கும்படி சொன்னார்கள்.

கோவில் வேலை முக்கால் திட்டம் முடிந்திருந்தது. அரண்மனை

வேலை முழுவதும் முடிந்து விட்டது. ஆனால் மர வேலைகள் நடந்து கொண்டிருந்தன. பண்டங்கள் வைக்கின்ற மர ஆசனமும் வேகமாக செய்யப்பட்டிருந்தன. எல்லா வேலைகளையும் நிறுத்தி விட்டு வந்த வரை உபசரிப்பதே முக்கியமான வேலை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. மூலைக்கு ஒன்றாய் பல இடங்களில் குழி வெட்டி அடுப்பு தயாராக இருந்தது. விறகுகள் வெட்டப்பட்டு தயாராக இருந்தன.

வாள்முதுகுப் படை வந்ததும் இரண்டு அந்தணர்கள், இராஜராஜ பிரம்மராயருக்கும், உத்தம சோழ மிலாடுடையாருக்கும் பூரண கும்பம் கொடுத்து வரவேற்றார்கள்.

"வலது காலை எடுத்து வைத்து உள்ளே வாருங்கள்" என்று கட்டளை இட, அவர்கள் குதிரையிலிருந்து இறங்கி வலது காலை எடுத்து வைத்து கோவிலை நோக்கி வணங்கினார்கள்.

"சோழம் சோழம் சோழம்" என்று உரக்க கூவப்பட்டது.

"மாமன்னர் இராஜேந்திரர் வாழ்க" என்று கூவப்பட்டது. குதிரையை பிடித்துக் கொண்டு அவர்கள் உள்ளே நடந்தார்கள். வியப்பின் எல்லையை தொட்டார்கள்.

"இத்தனை பெரிய நகரமா, நீருக்கு எங்கே போவது"

"கொள்ளிடம் இருக்கிறதய்யா. கொள்ளிடத்திலிருந்து பிரித்து பல கிணறுகள், குளங்கள் என்று உள்ளுக்குள் சேமித்து வைத்திருக்கிறோம். குறுக்கும், நெடுக்குமாக கால்வாய்கள் வெட்டி இருக்கிறோம். கால்வாய்கள் நீர் உறிஞ்சிக் கொள்ளாமல் இருப்பதற்காக அதில் கருங்கல் பதித்திருக்கிறோம்.

அரண்மனைக்குள்ளே கால்வாய் போகிறது. அந்தப்புரத்துக்குள்ளே கால்வாய் போகிறது. அந்தணர் குடியிருப்பிலும் கால்வாய் போகிறது. பஞ்சமருக்கும் கால்வாய் போகிறது. கால்வாய் இல்லாத இடமே இல்லை. அரண்மனை முழுவதும் பின்னல் பின்னலாக கால்வாய்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன.

ஐம்பது கோலுக்கு ஒரு பாலம் நீங்கள் தாண்டியாக வேண்டும்"

"ஒரு வேளை கொள்ளிடம் பொய்த்து விட்டால் நீருக்கு என்ன செய்வது?"

"கேணிகள் இருக்கின்றன. அதைத் தவிர அருகே இருக்கின்ற வீரநாராயணம் ஏரியிலிருந்து தனியாக ஒரு கால்வாய் வெட்டி



உள்ளுக்குள் கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அங்கு மதகு கட்டப்பட்டு இருக்கிறது. வேண்டுமெனில் வரவழைத்துக் கொள்ளலாம். வேண்டாமெனில் தடுத்தி நிறுத்தி விடலாம்"

"கோவிலுக்குள் போய் பார்க்கலாமா?"

"தாராளமாக, நீங்கள் பார்க்க வேண்டுமென்று தானே ஆசை, உணவருந்தி விட்டு பார்க்கலாமா?"

"முதலில் பார்த்து விடுகிறோமய்யா, பிறகு உணவு எடுத்துக் கொள்கிறோம்" அவர்கள் ஆவலாக கோவிலுக்குள் நுழைந்தார்கள்.

"காலணிகளை போட்டுக் கொண்டே போங்கள். இன்னும் கும்பாபிஷேகம் நடக்கவில்லை. அங்கங்கே கற்கள் சிதறி இருக்கும். ஆணிகள் இருக்கும். உளிகள் இருக்கும். எனவே காலணிகளை அணிந்து கொண்டே போங்கள். கருவறை உள்ளுக்குள்ளே போகும் பொழுது மட்டும் அவிழ்த்து விடுங்கள்" என்று சொல்ல, வீரர்கள் அத்தனை பேரும் காலணிகளோடு கோவிலுக்குள் சுற்றி வந்தார்கள்.

"கருங்கல் நந்தியா?"

"இல்லை, சுதையினால் செய்யப்பட்டது. செங்கல் நந்தி"

"சண்டேஸ்வரரும் சுதையினாலா?"

"இல்லை, அது சுத்தமான கருங்கல், நீலக் கருங்கல்"

"விமானம் ஏறி பார்க்கலாமா?"

"எங்கு வேண்டுமானாலும் ஏறலாம். ஜாக்கிரதையாக செய்யுங்கள்" அவர்கள் எல்லோரும் விமானம் ஏறி பார்த்தார்கள்.

"கொள்ளிடம் எங்கிருக்கிறது. எங்கிருந்து நீர் வருகிறது. எப்படி பிரிகிறது என்றெல்லாம் ஆராய்ந்தார்கள். கீழே இறங்கினார்கள். ஓடி வந்து இராஜராஜ பிரம்மராயர் நித்த வினோதப் பெருந்தச்சனை தழுவிக் கொண்டார்.

"ஆச்சரியம், மிகப்பெரிய ஆச்சரியம். உங்களுடைய சாமர்த்தியம் முழுவதையும் காட்டி இருக்கிறீர்கள். சோழ தேசம் உங்களை சிறப்பாகப் பெற்றது பாக்கியம், சோழ தேசத்தினுடைய ஜாதகம் மிகச் சரியாக இருக்கிறது. இங்கு வேலை செய்கிறவர்கள் அத்தனை பேரும் உன்னதமானவர்களாக இருக்கிறார்கள். உன்னதமானவர்கள் அத்தனை பேரும் ஒரே நேரத்தில் பிறந்திருக்கிறார்கள். இது தான் எனக்கு சொல்லத் தோன்றுகிறது.

சிற்பி சரியா, போர் வீரர் சரியா, அந்தணர் சரியா எனக்கு ஒன்றும் புரியவில்லை. மன்னருக்கெல்லாம் மகுடம் வைத்தது போல ஒரு அற்புதமான மாமன்னர் நமக்கு கிடைத்திருக்கிறார். நொடி நேரத்தில் முடிவு எடுக்கிறார். தீர்மானமாக இருக்கிறார். தெளிவாக இருக்கிறார். அவரிடம் பேசப் பேச வியப்பு தான் வருகிறது. ஒரு அற்புதமான கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோமய்யா. இந்த காலத்தில் வாழ கொடுத்து வைத்திருக்க வேண்டும்"

"சேனாதிபதிகளுக்கு எங்கே வீடு?"


"அது பிரித்து பிரித்து தரப்பட்டிருக்கிறது. அரண்மனைக்கு அருகே ஆறு சேனாதிபதிகளுக்கு வீடு. கோட்டை வாசலில் ஆறு சேனாதிபதிகளுக்கு வீடு. கோவிலுக்கு அருகே ஆறு சேனாதிபதிகளுக்கு வீடு என்று ஆறு ஆறாக நாலாபக்கமும் பிரித்திருக்கிறோம்"

"கோட்டைக்கு எத்தனை வாசல்"

"இரண்டே வாசல்கள். ஒன்று கிழக்கு, இன்னொன்று மேற்கு"

கேணியிலிருந்து நீர் எடுத்து பருகினார்கள். சுவையோ சுவை என்றார்கள். சாப்பிட விரும்பினார்கள். கன்னிமூலை கணபதி என்ற இடத்திற்கு போகச் சொன்னார். அங்கு போய் உட்கார்ந்தார்கள். மெல்ல திரைச் சீலையை விலக்கி கணபதியைக் காட்டினார்.

மிக அழகான, உயரமான, அகலமான, குழைவான ஒரு பிள்ளையார் சிலை அங்கிருந்தது. எல்லோரும் கை எடுத்து கும்பிட்டார்கள். மெல்லத் தொட்டார்கள். காதுகளை வருடிப் பார்த்தார்கள். துதிக்கையை தடவினார்கள்.




ஏசாலத்திலிருந்தும், எண்ணாயிரத்திலிருந்தும் இருநூறு மாணவர்கள் ஜெயங்கொண்டம் நோக்கி மெல்ல நடந்து வந்தார்கள்.



சர்வசிவ பண்டிதரும், ஈசான சிவ பண்டிதரும் பல்லக்கிலே வர, அந்த மாணவர்கள் வேதம் சொன்னபடியும், ஸ்லோகங்கள் சொன்னபடியும், தேவார மந்திரங்கள் சொன்னபடியும் ஜெயங்கொண்டம் அரண்மனையை வந்து சேர்ந்தார்கள். வாசலில் தடுத்து நிறுத்தப் பட்டார்கள்.

யாரென்று விளக்கிச் சொல்லுங்கள் என்று அவர்களிடம் கேட்கப்பட்டது. அவர்கள் தங்களைப் பற்றியும், தங்கள் குரு வழிப் பற்றியும் சொல்ல, வீரர்கள் மதிலிலிருந்து கீழிறங்கி வந்தார்கள். கதவுகளை பெரிதாகத் திறந்தார்கள். சர்வ சிவ பண்டிதரின் பல்லக்கை முன்னே வரச் சொன்னார்கள். அந்த பல்லக்கு வர வீரர்கள் கைகூப்பி நின்றார்கள். திரை விலக்கப்பட்டது. சர்வசிவ பண்டிதர் கை கூப்பினார். தட்டில் உள்ள மஞ்சள் அரிசியை அவர்கள் மீது தூவினார்.

"வாழ்க சோழம், ஜெயங்கொண்டத்திற்கு இப்பொழுது தான் முதலில் வருகிறேன். மாமன்னர் இராஜேந்திரரை இங்கு சந்திப்பதாக ஏற்பாடு. நான் உள்ளே போகலாமா" என்று அனுமதி கேட்டார்.

"உங்கள் வரவு நல்வரவாகுக. தாராளமாகப் போகலாம். கோட்டைக் காவல் எவரையும் தடுத்து நிறுத்தி விசாரித்து உள்ளே அனுப்புவது என்ற வழக்கத்தை கொண்டிருக்கிறது. அந்த வழக்கத்தின் பால் தான் நிற்க வைத்தோமே தவிர நீங்கள் யார் என்று எங்களுக்குத் தெரியும். உள்ளே வாருங்கள். உங்கள் வரவு நல்வரவாகுக" என்று அவரை பணிந்தார்கள்.

அடுத்த பல்லக்கும் வந்தது.

ஈசான சிவ பண்டிதர் திரையை விலக்கி அவர்களுக்கு விபூதி கொடுத்தார். அவர்கள் நெற்றியில் இட்டுக் கொண்டார்கள். அவரையும் விழுந்து வணங்கினார்கள். இந்த இரண்டு பல்லக்குகளும் முன்னே போக, மாணவர்கள் பின்னே யஜுர் வேதம் சொல்லத் துவங்கினார்கள். கோவிலையும், அரண்மனையையும் பார்த்து விட்டு ஈசான சிவ பண்டிதர் திகைத்தார். பல்லக்கை இறக்கச் சொல்லி கீழிறங்கி நடையாகவே வருவது என்று தீர்மானித்தார். சர்வசிவ பண்டிதருக்கு காலில் கொஞ்சம் வலி.

"நான் பல்லக்கிலேயே வரட்டுமா" என்று கேட்க, "தாராளமாகச் செய்யுங்கள்" என்று சொல்லி பல்லக்குக்கு அடுத்தபடி அவரும் நடந்தார்.

"அற்புதம் செய்திருக்கிறார்களய்யா. என்ன அற்புதமான சிற்பிகள். என்ன தெளிவான நிர்மாணம். ஒவ்வொன்றும் அளவெடுத்து செய்திருக்கிறார்களே, ஒரே மாதிரி செய்திருக்கிறார்களே. திட்டமிடப்பட்ட நகரம் என்றால் இது தான் திட்டமிடப்பட்ட நகரம். இப்படி ஒரு நகரம் நான் எங்கேயும் பார்த்ததில்லை. காசி தேசத்தை மிகப்பெரிய நகரம் என்று சொல்லுவார்கள். ஆனால் குறுகலான சந்துகள். நடமாட முடியாத வீதிகள். என்றெல்லாம் நிறைய இருக்கும். ஆனால் இங்கு அப்படி இல்லை. தெருக்கள் அகலமாக இருக்கின்றன. சுத்தமாக இருக்கின்றன. வீடுகளுக்குள் இடைவெளி இருக்கின்றன. நகரம் என்பதற்காக பெருமரங்கள் வெட்டப்படவில்லை. மாறாக பல இளஞ்செடிகள் நடப்பட்டு இருக்கின்றன. குறுக்கே கால்வாய்கள் அதிகம் போகின்றன. கொள்ளை அழகு. கொள்ளை அழகு" என்று வாய்விட்டு அரற்றினார்.

பல்லக்கு கோவிலுக்குள் போயிற்று. சுற்றி வந்தது. அங்குலம் அங்குலமாக ரசித்தார்கள்.

"உள்ளுக்குள் போவோமா"

"வேண்டாம். கும்பாபிஷேகம் நடக்கும் போது போவோம். இப்பொழுது உள்ளே வேலை செய்து கொண்டிருப்பார்கள். அவர்களை தொந்தரவு செய்ய வேண்டாம். கோவில் எப்படி என்று ஓரளவு தெரிந்து விட்டது. இது போதும். வெளியே போகலாம்" கோவிலை விட்டு வெளியே வந்தார்கள்.

அகலமான மறவர் தெருக்களை கடந்தார்கள். பிறகு வணிகர் தெருக்களை கடந்தார்கள். பிறகு அந்தணர் குடியிருப்பை கடந்தார்கள். பிறகு சேனாதிபதிகள் வீட்டை கடந்தார்கள். அரண்மனை வாசலில் நின்றார்கள். அங்கும் அவர்கள் வரவேற்கப்பட்டார்கள். அரண்மனையை சுற்றிப் பார்த்தார்கள். அரண்மனை வாசலில் பெரிய கூடத்தில் அமர்ந்து கொண்டார்கள்.

"இங்கு உட்கார்ந்து சிவனைப் போற்றுவோம். இது மன்னர் இருக்க வேண்டிய இடமல்லவா. இந்த இடத்தில் வேத கோஷம் ஒலிக்கட்டும். ருத்ரம் சொல்லுங்கள். சமகம் சொல்லுங்கள்" என்று சர்வசிவ பண்டிதர் ஆணையிட்டார்.

பையன்கள் உரத்த குரலில் ருத்ரம் சொல்ல ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு பானகம் விநியோகம் நடந்தது. பையன்கள்



[illegible] ருசித்தார்கள். வாழைப்பழங்கள் கொடுக்கப்பட்டன. [illegible] உண்டார்கள்.

"இவர்களுக்கு உணவுக்கு என்ன ஏற்பாடு செய்வது"

"இல்லை. ஏற்பாடு நாங்களே செய்து கொள்வோம். ஒரு அடுப்பு [illegible] செய்து கொடுங்கள். பானை ஏற்றி இவர்களே செய்து [illegible]" என்று சொல்ல, பின்னால் வந்த மாட்டு வண்டியில் [illegible] பானைகள் இறக்கப்பட்டன. அரிசி களைந்து போடப்பட்டது.

"தயிர் இருக்குமா?" என்று ஒரு மாணவன் கேட்க, "இருக்கிறது" என்று ஒரு சிற்பி வெளியே ஓடினான். பெரிய சட்டி தயிரோடு [illegible] வந்தான். சோறு கொதித்தது. மடமடவென்று கைக்கு [illegible] காய்கறிகளை நறுக்கி பருப்பு போட்டு கூட்டு செய்தார்கள். கூட்டு வாசனை மூக்கைக் கண்டி இழுத்தது. மாணவர்கள் உணவு உண்டார்கள். களைப்போடு படுத்தார்கள். கீச்கீச்சென்ற குரலில் [illegible] கொண்டே அரண்மனை முழுவதும் சில மாணவர்கள் சுற்றி வந்தது சிற்பிகளுக்கு சந்தோஷமாக இருந்தது.

"அரசர் உள்ளே நுழையும் போது இவர்களை வைத்து மறுபடியும் வேத கோஷம் செய்யச் சொல்ல வேண்டும். அது இன்னும் நல்ல [illegible] இருக்கும்" என்று சிற்பிகள் பேசிக் கொண்டார்கள்.

மாணவர்கள் வரிசை ஆனார்கள்.

தேர்ப்படை உள்ளே நுழைந்தது. தேரோட்டிகள் துரகமிருந்தவர்களாக [illegible]ப்பட்டார்கள். கன்னி ஓடைப் பக்கம் அவர்களுக்கு இடம் காட்டப்பட்டது. ஓடைகளின் ஓரம் குதிரைகள் நிறுத்தப்பட்டன. தேரில் இருந்து அவிழ்க்கப்பட்டன. குதிரையை ஜாக்கிரதையாக இறக்கி கால்வாய்களில் நிற்க வைத்து சேணங்களை பிடுங்கிப் போட்டு குதிரைகளை குளிப்பாட்டினார்கள். நீர் காட்டினார்கள். குதிரைகள் குளித்து முடித்து, நீர் குடித்ததும் மேலேறின. கால்வாய்களில் [illegible] சுழித்துக் கொண்டு போயிற்று. பிறகு வீரர்கள் முங்கி முங்கி குளித்தார்கள். உடம்பை பீர்க்கங்கரனை போட்டு துடைத்துக் கொண்டார்கள். மேலேறி தலை துவட்டிக் கொண்டார்கள்.

சரேர்கென்று ஒரு ஆடு வெட்டப்பட்டது. அங்கேயே தோலுரிக்கப்பட்டது. வேகமாக கறிகள் துண்டு செய்தார்கள். பானையில் போட்டு, உப்பிட்டு, மிளகு தூள் போட்டு கொதிக்க வைத்தார்கள். பருப்பும், அரிசிமாவும் கலந்து குழைத்தார்கள்.

குழம்பு போல கறி காய்கறிகளோடு மணத்தோடு வெந்தது. சோறு தனிப்பானையில் செய்தார்கள். பானையை சாய்த்து இறுக்கி கஞ்சி வடித்தார்கள். கஞ்சியை வேறு கலயத்தில் ஆற வைத்து மோர் கலக்கினார்கள். உப்பிட்டார்கள்.

தேர்படை வீரர்கள் எல்லோரும் தட்டுகள் வைத்திருக்க அந்த தட்டுகளில் முதலில் கறி பறிமாறப்பட்டது. பிறகு சோறு வைக்கப்பட்டது. கிண்ணங்களில் அரிசி கஞ்சி மோரோடு தரப்பட்டது. அரிசி கஞ்சியை உறிஞ்சி குடித்தபடி அவர்கள் கறியை எடுத்து சுவைத்து உண்டார்கள். சோறோடு கலந்து சாப்பிட்டார்கள்.

"இன்னும் போடு, இன்னும் போடு" என்று கேட்டு உண்டார்கள். ஒரு போர்படை என்பது வயிறால் நடப்பது என்று தெரிந்திருக்கிறது. எனவே வீரர்கள் மனம் கோணாத வண்ணம் சிற்பிகள் பரிமாறினார்கள். வேதம் படிக்கின்ற மாணவர்கள் தொலை தூரம் நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

"ஆதித்யச்சமே, ப்ரயச்சமே, பிரதிச்சமே" என்று ஒரு மாணவன் உரத்த குரலில் சமகம் சொல்ல,

"அடேய், மே மே என்று சொல்லாதே. உன்னையும் ஆடு என்று நினைத்து அறுத்து விடப் போகிறார்கள். பார்ப்பதற்கு குட்டி ஆடு போல் தான் இருக்கிறாய்" என்று ஒரு பெரிய மாணவன் சொல்ல, வாய் விட்டு சிரித்தார்கள்.

அந்த சிரிப்புகள் மறவர்களுக்கு கேட்டன.

"ஆடு அறுத்து சாப்பிடவேண்டும் என்ற ஆசை யாருக்கும் தான் இருக்காது. அந்தணர்களுக்கும் இருக்கும் போலும்" என்று மறவன் சொல்ல, மற்றவர்கள் வாய்விட்டு சிரித்தார்கள்.

யானைகள் உள்ளே நுழைந்தன. மாணவர்கள் ஓடிப் போய் யானைகளை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தார்கள். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு என்று பல யானைகள் உள்ளே நுழைந்தன. அம்பாரி வைத்த யானைகளிலிருந்து சேனாதிபதிகள் கீழே இறங்கினார்கள்.

யானைகளுக்கு தென்னோலைகள் தரப்பட்டன. பச்சை புற்கள் தரப்பட்டன. யானைகளுக்கு இடம் புதிது என்பதால் அடிக்கடி பிளிறின. யானைப் பாகர்கள் அதன் கன்னத்தில் அடித்து சமாதானம்



புரித்தினார்கள். சட்டியை மூன்று மூன்றாய் சாய்த்து விட்டு குதிரை வீரர்கள் குளிக்கப் போனார்கள். யானை குளிப்பதற்கு முன்னால் பாகர் இறங்கினார்கள். குதித்து குதித்து குளித்தார்கள். அவர்களையும் வேத பாடசாலை மாணவர்கள் வேடிக்கை பார்த்தார்கள். அங்கும் உணவு தயார் ஆயிற்று.

ஒரு துணியிலிருந்து வெள்ளைப் பன்றி மாமிசத்தை எடுத்தார்கள். அறுத்தார்கள். துண்டாக்கி பானையில் போட்டார்கள்.

"இது என்ன கறி" என்று வியப்பாக ஒரு மாணவன் கேட்டான்.

"அது பன்றிக்கறி"

"இவர்களுக்கு மட்டும் ஏன் பன்றிக் கறி"

"யானை சூடான விஷயமல்லவா. சூட்டிலே உட்கார்ந்து வருகிறார்கள். உடம்பு குளுமையாக வேண்டும். இல்லையெனில் ஆசன வாயில் புண் வந்து விடும். அதற்காகத் தான் குளுமையான பன்றிக் கறி"

"நாமும் வேதம் சொல்லும் போது உடம்பு சூடாகிறதே. நமக்கு ஏன் இம்மாதிரி கறி உணவுகள் தருவதில்லை"

"உட்கார்ந்து கொண்டு வேதம் சொல்கிறாய். படுத்து தூங்குகிறாய். மறுபடியும் உட்கார்ந்து கொண்டு பேசுகிறாய். இதைத் தவிர வேறு ஏதேனும் செய்கிறாயா. ஓடுகிறாயா. பாடுகிறாயா. ஆடுகிறாயா எதுவும் இல்லை. எனவே உனக்கு கறி சரியாக வராது. உனக்கு தயிர் சாதம் தான் சரி. பானகமும், ஆறு வாழைப்பழமும் சாப்பிட்டாய். அது செரிமானம் ஆயிற்றா"

"வயிற்றிலேயே இருக்கிறது. பசியே இல்லை"

"இவர்கள் எப்படி ஆவலோடு சாப்பிடுகிறார்கள் பார். அவ்வளவு தொலைதூரம் வந்த களைப்பு பசியை அதிகரிக்கச் செய்கிறது. அந்த பசிக்கு இந்த உணவுதான் சரி. அந்த உணவு தான் அடுத்தபடி பயணம் செய்ய உதவி செய்யும். அப்பொழுது தான் ஜீரணமாகும். நாம் மாமிசம் சாப்பிட்டால் ஒரு மாதத்தில் செத்துப் போவோம்" என்று பெரியவன் சொன்னான்.

மற்றவர்கள் 'ஆமாம் ஆமாம்' என்றார்கள். வெளியே எக்காளம் கேட்டு, மாணவர்கள் ஒன்று திரண்டார்கள். ஓடினார்கள்.

"மன்னர் வருகிறார் என்று நினைக்கிறேன். நான் சொல்லும்படி

கேட்க வேண்டும்" என்று தலைவன் போல் உள்ள பெரிய பிள்ளை சொல்ல, மற்றவர்கள் தலை அசைத்தார்கள். கோட்டை வாசலில் நின்று கொண்டார்கள். கோட்டைக் கதவுகள் திறந்தன.

மெய்க் காவல் படை வீரர்கள் முன்னே வர, மாமன்னர் இராஜேந்திரர் பின்னே தொடர்ந்தார். மெய்க்காவல் வீரர்கள் சுட்டிக் காட்டி யார் என்று கோட்டைக் காவலரிடம் விசாரித்தார்கள்.

"வேதம் படிக்கிற மாணவர்கள். எண்ணாயிரம், எசாளத்திலிருந்து வருகிறார்கள்" என்று சொல்ல சரி என்று தலையசைத்தார்.

"இன்னும் சற்று விலகி இருங்கள்" என்று ஈட்டியால் அவர்களை மெல்ல பின்பக்கம் தள்ளினான். அவர்கள் பின்னடைந்தார்கள். மாமன்னர் இராஜேந்திரர் உள்ளே நுழைந்ததும்,

திருமன்னி வளர, இரு நில மடந்தையும் என்ற மெய் கீர்த்தியை மாணவர்கள் சொன்னார்கள். பிறகு வேத கோஷம் செய்தார்கள்.

"வருக வருக. உங்கள் வரவு நல்வரவாகுக" என்று வரவேற்றார்கள். 'ஜெயவிஜயீபவ' என்று கொண்டாடினார்கள்.

உள்ளே நுழைந்ததும் மெய்க்கீர்த்தியும், வேத கோஷமும், ஸ்லோகமும், ஜெயவிஜயீபவ என்ற வார்த்தையும் அவர் காதுக்கு குளுமையாக இருந்தன. யார் மாணவர்கள் என்று விசாரிக்க, எண்ணாயிரம், எசாளம் என்று அவருக்கு பெயர் சொல்லப்பட்டது.

"அடடே, சர்வசிவ பண்டிதர் வந்திருக்கிறாரா?"

"ஈசான சிவ பண்டிதரும் வந்திருக்கிறார்" என்று சொல்ல, அவர் அவர்களை சந்திக்க விரைவானார். மாணவர்கள் அவரை சூழ்ந்து கொண்டார்கள். கை கூப்பினார்கள். பிறகு வேதங்களை சொன்னார்கள். தங்கள் பாடசாலை மிக நன்றாக நடப்பதா கீச்சுக்குரலில் தெரிவித்தார்கள்.

அரசர் வியப்போடும், சந்தோஷத்தோடும் அவர்களை பார்த்தார். கை உயர்த்தி ஆசீர்வதித்தார். குதிரைகள் தொடர்ந்த நடந்தன. கோவிலுக்குள் குதிரையை திருப்பினார். செங்கல்லா அடுக்கப்பட்டு செய்யப்பட்ட நந்திக்கு காரைப்பூச்சு நடந்து கொண்டிருந்தது. காரைப்பூச்சு முடிந்த இடத்தில் நுணுக்கமா வேலைப்பாடுகள் சுண்ணாம்பிலேயே செய்யப்பட்டன. விமானத்தி உச்சியில் கற்களை அடுக்கிக் கொண்டிருந்தார்கள். வட்ட வடிவமா



[illegible] அமைத்து அதில் யானைகள் மூலம் கற்கள் ஏற்றி போகின்ற [illegible] இங்கே நடக்கவில்லை. மாறாக சாரமே 'ட' என்ற எழுத்தைப் போல ஒரு பக்கம் சரிந்து மறுபக்கம் திரும்பி இருந்தது. இரண்டு [illegible] இணைக்கின்ற இணைப்பில் பெரிய தளம் இருந்தது. [illegible] தலையில் தூக்கிக் கொண்டு போய் அங்கே வைத்து [illegible] ஆசுவாசப்படுத்திக் கொண்டு பிறகு மேலே வேலை ஆட்கள் [illegible]தார்கள். மெல்லிய பலகைகள் போக இரும்பு ராட்டினங்களில் [illegible] பொருத்தப்பட்டு கற்கள் தூக்கப்பட்டன. அவைகளை சிற்பிகள் [illegible] அடுக்கினார்கள். சாந்து பூசினார்கள். முற்பக்கத்தை [illegible] உளியால் தேய்த்தார்கள். உளி கூர்மை பட்டு நெருப்பு [illegible].

[illegible] திகைத்தாள்.

"இது என்ன கனவா நனவா எனக்கு புரியவே இல்லை. இவ்வளவு அழகான கோவிலா"

"எதற்கு படை எடுப்பு என்று கேட்டாயே. இதற்குத் தான் படையெடுப்பு. மேலைச் சாளுக்கியம் சோழ தேசத்தை திட்டக்கூடாது என்பதற்காக அல்ல. நாம் போய் அடித்து. இருப்பவர்களை இழுத்துக் கொண்டு வந்து பொன்னும், பொருளும் வாங்கி வந்து இங்கே இந்த மாதிரி ஒரு அற்புதமான நகரத்தை நிறுவி நாங்கள் நாகரீகம் மிக்கவர்கள் என்பதை உலகுக்கு சொல்ல வேண்டிய நிர்பந்தம் இது.

போர் இல்லாவிட்டால் நெல்லும், பொன்னும் கிடைத்திருக்காது. நெல்லும் பொன்னும் கிடைக்காவிட்டால் இப்படி உழைப்பவர்கள் கிடைத்திருக்க மாட்டார்கள். இப்படி உழைப்பவர்கள் கிடைக்கா விட்டால் இந்த உயரத்திற்கு கோவிலெல்லாம் எழும்பி இருக்காது. அவரவர் வீட்டுத் தோட்டத்தில் அவரவர் காய்கறி பயிர் செய்து [illegible] போவோம் அவ்வளவு தான்.

போர் சுழற்சி. போர் ஒரு மாறுதல். போர் ஒரு முன்னேற்றம், போர் ஒரு வெளிச்சம். அதில் தான் இம்மாதிரியான அற்புதமான [illegible] எல்லாம் வெளியாகின்றன"

கோவிலை விட்டு வெளியே வந்தார். மறவர்களுடைய வீடுகள், [illegible]ணர்களுடைய வீடுகள் என்று வரிசையாக குடியிருப்பைக் [illegible]டினார்.

ஒவ்வோர் வீட்டிற்குள்ளும் நுழைந்து என்ன விதமாக

செய்திருக்கிறார்கள் என்று கட்டிக் காட்டினார். சேனாதிபதிகள் வீடுகளில் திண்ணை இருந்தது. அந்த திண்ணை சொகுசாக இருந்தது. அந்தணர் வீட்டில் இரண்டு பக்கமும் ஒரே அகலமான திண்ணை இருந்தது. இரண்டு சபை எதிரும் புதிருமாக உட்கார்ந்து பேச வசதி இருந்தது. அந்தணர் வீட்டில் நடுப்பகுதியில் திறந்த முற்றம் இருந்தது. முற்றத்தில் பறவையோ, மிருகங்களோ புகுந்து விடாமல் இருக்க கம்பி கொடுக்கப் பட்டிருந்தது. வணிகர் வீட்டில் முன் பகுதியில் கிடங்கு இருந்தது. அடுத்த பகுதியில் கூடம் இருந்தது.

பஞ்சமர் வீட்டில் உறுதியான ஓட்டு வீடுகள் இருந்தன. முன் பக்கம் இரண்டு தூண்கள் நடப்பட்டு இருந்தன. ஓடுகளுக்கும் அந்த தூண்களுக்கும் இடையே தட்டோலை பின்னி கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. ஆடுகள் மாடுகள் அங்கே நிழலாய் நிற்கும்.

அரண்மனை இன்னும் பெரிதாக, உயரமாக மதில்களோடு இருந்தது. இது உள்ளாலை அல்லது உட்கோட்டை சேனாதிபதிகளுக்கு தனித்தனியான இடம். அரசருடைய பெண்டுகளுக்கு தனியான இடம். அரசருடைய மனைவிமார்களுக்கெல்லாம் தனியான இடம் என்று பிரம்மாண்டமாய் கட்டப்பட்டு இருந்தது.

அந்தப்புரத்திற்கும் சேனாதிபதிகளுக்கும் நடுவே அரண்மனை இருந்தது. ஆயிரம் பேர் உட்காரக் கூடிய பெரிய கூடம் தெரிந்தது தூண்களிலெல்லாம் சித்திரம் எழுதப்பட்டிருந்தது. அரண்மனையில் பின்புறத்திலிருந்து ஈசான சிவ பண்டிதரும், சர்வ சிவ பண்டிதரும் மெல்ல உள்ளே வந்து அரசரை நோக்கி கை உயர்த்தினார்கள் அரசர் விழுந்து வணங்கினார். வேதபாடசாலை மாணவர்கள் அரசரை வாழ்த்தி பாட ஆரம்பித்தார்கள். வணக்கம் சொன்னார்கள் வாழ்க என்று கோஷம் இட்டார்கள்.

சகலரையும் அரசர் உட்காரச் சொன்னார். நலம் விசாரித்தார்

"என்ன வேண்டும்" என்று கேட்டார்.

"வேதபாடசாலை செவ்வனே நடந்து வருகிறது. ஆனா மாணவர்கள் முன்னை விட அதிகமாகி விட்டார்கள். ஊர் ஒத்துழைப் தால் சிரமமின்றி நகர்கிறது. ஆனால் ஊரை அதிகம் தொந்தர செய்ய முடியாது" என்று சர்வசிவ பண்டிதர் விண்ணப்பித்தார்.

"இன்றிலிருந்து வருடத்திற்கு இரண்டாயிரம் கல



[illegible] வேதபாடச் சாலைக்குத் தருகிறேன். நன்கு படிக்கின்ற மாணவர்களுக்கு பொற்கழஞ்சு தருகிறேன். உடைகளுக்கு ஏற்பாடு செய்கிறேன். உடனடியாக உங்கள் உபயோகத்திற்காக அரிசி வண்டி [illegible] உங்களுக்கு திருப்புகின்றேன். மாணவர்கள் குறையின்றி [illegible]. எல்லோர் முகமும் தெளிவாகவும், அழகாகவும் இருக்கிறது. ஆனால் மாணவர்கள் வாடி இருக்கிறார்கள் என்பது என் கருத்து"

"இல்லை, இல்லை. அவர்கள் வாடி இல்லை. அதிகம் சாப்பிடாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். அதிகம் சாப்பிட்டால் தூக்கம் தான் வரும். அவர்கள் மறவர்கள் அல்ல. குறைவாக அதே சமயம் நிறைவாக சாப்பிடுகிறார்கள். அவர்கள் ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கிறது" என்று வாக்கு கொடுத்தார்.

ஈசான சிவ பண்டிதர் போரும் விஷயம் மிக வெற்றிகரமாக முடிய வேண்டும் என்றும், கோட்டை எல்லையில் ஸ்தாபித்துள்ள காளிகளை கண்திறந்து சீக்கிரமே ஸ்தாபனம் செய்ய வேண்டுமென்றும், வந்ததும் முதல் காரியமாக எல்லைக் காளிகளுக்கு உயிரூட்ட வேண்டுமென்றும் சொன்னார்.

இராஜேந்திர சோழர் அவ்வாறே செய்வதாக வாக்களித்தார்.

"அரண்மனை மிக நன்றாக இருக்கிறது. நகரம் மிகச் சிறப்பாக இருக்கிறது. இப்படி ஒரு நகரம் பரத கண்டத்தில் எங்குமே இல்லை" என்று அவர்கள் புகழ்ந்தார்கள்.

அவர்கள் பரதகண்டம் முழுவதும் சுற்றியவர்கள். அவர்களுக்கு தெரியும் எது எப்படி இருக்கிறதென்று அவர்களுடைய வார்த்தை அரசரை குளிர்வித்தது.

கிரகப் பிரவேசம் செய்யாமல் அரண்மனையில் தங்க வேண்டாம் என்று சொல்லப்பட்டதால் சேனாதிபதிகளுக்கென்று ஒதுக்கப்பட்ட வீட்டில் அரசர் தங்கினார். வீட்டைச் சுற்றி வளையமாக இருந்து போர் வீரர்கள் பாதுகாத்தார்கள். சேனாதிபதிகள் வந்து சேர்ந்ததும் அவர்களை மறுபடியும் பார்க்க விரும்புவதாக மன்னர் கட்டளை இட்டார்.

மறுநாள் விடியும் பொழுதில் ஜெயங் கொண்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட அந்த புதிய நகரம் மிகுந்த பரபரப்புக்கு உள்ளாகியது. இராஜேந்திர சோழரை நோக்கி சேனாதிபதிகள் வாந்

துவங்கினார்கள். எல்லோரும் வந்ததும் தரையில் கோலம் போல பரத கண்டத்தின் படம் வரைந்து அதில் வேங்கியையும், முசங்கியையும், மான்ய கேடயத்தையும் தனித்தனியாக சுட்டிக் காட்டினார்.

இரட்டைப்பாடி, ஏழரை இலக்கம், முசங்கி வழியாக மான்ய கேடயத்தை வடமேற்காக நகர்ந்து தாக்க வேண்டும் என்றும் ஒரு படை கீழைச் சாளுக்கியத்தின் கிழக்கு கடற்கரை ஓரமாகவே நகர்ந்து கலிதண்டி என்ற கிராமத்தை தாண்டி வேங்கியை தாக்க வேண்டும் என்றும் கட்டளை இட்டார்.

நாம் இரண்டு பேரும் எப்பொழுது ஒன்று சேருவோம் என்று தெரியாது. ஆனால் தாக்குதல் இரண்டு பக்கமாக நடக்க வேண்டும். நாம் ஒருவருக்காக ஒருவர் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. வேங்கிக்குள் நுழைந்ததும் சூறையாடி விடுங்கள். நான் வழியில் எந்த இடம் தென்பட்டாலும், எந்த நகரம் இருந்தாலும் அதை எரியூட்டிவிட்டு வருகிறேன். நம்முடைய சந்திப்பு வேங்கியிலோ அல்லது மான்ய கேடயத்திலோ இருக்கட்டும். வேங்கி முற்றிலும் விழ்ந்து விட்டது. வேங்கி ஒன்றும் இல்லை என்றால் நீங்கள் வேங்கியிலிருந்து கிளம்பி மான்ய கேடயம் நோக்கி வந்து விடுங்கள். நான் இரட்டைப்பாடி, ஏழரை இலக்கம், முசங்கி எல்லாவற்றையும் தாக்கிக் கொண்டு மான்யகேடயம் வருகிறேன். ஒரு நகரம்கூட மேலைச் சாளுக்கியத்தில் இருக்கக் கூடாது. வேங்கியில் ஒரு மேலைச் சாளுக்கியர் கூட உயிரோடு இருக்கக் கூடாது. கீழைச் சாளுக்கியர் மட்டுமே இருக்கலாம். மான்ய கேடயத்திலிருந்து நாம் ஒட்ட தேசம் போவோம். ஒட்ட தேசத்திலிருந்து கலிங்கம் போவோம். பிறகு கடவுள் தீர்மானித்தபடி எங்கு நகர வேண்டுமோ அங்கு நகரலாம்.

நாளை மறுநாள் படை இரண்டாகப் பிரிக்கப்பட்டு கிளம்ப வேண்டும். இப்பொழுது என்னுடைய படை முன்னால் போகும், நீங்கள் பின்னால் வருவீர்கள். முதலில் போன படை திருவொற்றியூரை அடைந்து திருவொற்றியூரி லிருந்து வடமேற்காக நகரும். நீங்கள் திருவொற்றியூரை அடைந்து திருவொற்றியூரி லிருந்து கிழக்கு கடற்கரை ஓரமாக நேரே வடக்கே போய் விடுங்கள். என்னுடைய வழி சுற்று வழி என்பதால் நான் முன்னே கிளம்புகிறேன். உங்களுக்கு அவ்வளவு எதிர்ப்புகள் இருக்காது



[illegible] போகலாம் என்பதால் நீங்கள் இரண்டாவதாக வந்தால் நன்றாக இருக்கும்" என்று சொல்ல, சேனாதிபதிகள் தலை அசைத்தார்கள்.

"ஏதேனும் குறை இருக்கிறதா இந்த திட்டத்தில்" என்று கேட்க, எல்லோரும் உற்று கவனித்து 'ஒன்றுமில்லை' என்று சொன்னார்கள்.

"எப்படி படையை பிரிக்கப் போகிறோம்?" என்று வந்தியத் தேவன் கேட்டார்.

"அறுபது, நாற்பது, என்னோடு அறுபது சதவிகிதமும், அரையன் இராஜராஜனோடு நாற்பது சதவிகிதமும் வரும். ஆகவே நாம் இப்பொழுதே படையை இரண்டாகப் பிரித்து முன் பின்னாக நகர்ந்து போய் திருவொற்றியூரில் காத்திருப்போம். திருவொற்றியூரில் வேங்கி மன்னனுடைய நிலைமை என்ன என்று தகவல்கள் நமக்கு கிடைக்கும். அதைப் பொறுத்து கிளம்புகின்ற நேரத்தை தீர்மானிப்போம். ஆனால் படை பிரிக்கப்படுவது இன்றேயே, இப்போதே மிகத் தெளிவாக செய்ய வேண்டும்" என்று கட்டளை இட்டார்.

படை எப்படி பிரிக்க வேண்டும் என்பது பற்றி அவர்கள் வெகு நேரம் பேசினார்கள். இரவு நேரம் எல்லோருக்கும் பாலும் அரிசி சர்க்கரையும் கலந்த உணவு தரப்பட்டது.

"இரவு ஆரியக்கூத்து நடக்கப் போகிறது, கேட்கிறீர்களா?" என்று நிந்த வினோத பெருந்தச்சன் மன்னரிடம் விண்ணப்பித்தான்.

"அப்படியா, ஆரம்பத்திலிருந்தா, வெகு நாளாகுமே"

"இல்லை. ஏதேனும் ஒரு பாகம். எந்த பாகத்தை நீங்கள் நடிக்க வேண்டும் என்று சொல்கிறீர்களோ அதை நடிக்க தயாராக இருக்கிறார்கள்"

"அபிமன்யு வதம். நடிக்கச் சொல். ஒன்றரை நாழிகை, இரண்டு நாழிகையில் நாடகம் முடிக்கட்டும். போர் வீரர்கள் கொஞ்சம் அயர்ந்து தூங்கட்டும்" என்று சொல்ல, அபிமன்யு வதம் நடிக்கப்பட்டது.

அபிமன்யுவை வஞ்சகத்தால் உள்ளழைத்து எல்லோரும் தாக்க அவன் ஒருவனாக போரிடுவது. அதைக் கண்டு அர்ஜுனன் பதறுவது அபிமன்யு இறந்த பிறகு அர்ஜுனன் கதறுவதும், சபதம் செய்வதும் மிகத் தத்ரூபமாக நடிக்கப்பட்டன. எல்லோர் மனதிலும்

ஒரு கோபமும் வெறியும் மூண்டது. அயோக்கியத் தனத்திற்கு பதிலடி கொடுத்தே ஆக வேண்டும் என்ற ஆத்திரம் எழுந்தது.

அபிமன்யு நடிகன் கயிறு பிடித்து ஒரு கட்டையில் ஏறிக் கொள்ள அந்தக் கயிறை இழுத்தார்கள். அபிமன்யு மெல்ல கூட்டத்தின் நடுவிலிருந்து சொர்க்கத்துக்கு போவது போல எல்லோரையும் ஆசீர்வதித்து சொர்க்கத்திற்கு போனான். மரக்கிளையின் மீது உட்கார்ந்து கொண்டான். அங்கிருந்து கீழிறங்கி வந்தான். எல்லோரும் 'சோழம் சோழம் சோழம்' என்று கத்தினார்கள். அபிமன்யுவாக நடித்தவனைப் போய் கட்டித் தழுவிக் கொண்டார்கள். கலைந்து போனார்கள். அவர்கள் கலைந்து போனதும் சிற்பிகளை அழைத்தார்.

"இன்னும் என்ன வேண்டும்" என்று கேட்டார்.

இன்னும் ஆட்கள் வேண்டுமய்யா, இந்த கதியில் வேலை நடந்தால் எங்களுக்கு இன்னும் ஒரு வருடம் ஆகி விடும். இன்னும் நிறைய ஆட்கள் தேவை. இன்னும் நிறைய பொற்காசுகள் தேவை. இன்னும் நிறைய உணவு வகைகள் தேவை. ஆட்களுக்கு ஏற்றபடி உணவும் பொற்காசுகளும் இருந்தால் தான் இந்த வேலை ஒரு வருடத்திற்குள் முடியும். நீங்கள் ஊருக்கு திரும்புவதற்குள் ஒரு சிறிய ஆணி கூட அடிக்க வேண்டாத நிலையில் இந்த அரண்மனையை நாங்கள் தயாராக வைத்திருக்க வேண்டும். கோவில் தொன்னூற்றி ஐந்து விழுக்காடு முடிந்து விடும். கும்பாபிஷேகம் முடிந்த பிறகு செய்ய வேண்டிய வேலைகள் தான் இருக்கும். எனவே குடியேறு வதற்கு தயாராக இருக்க வேண்டுமெனில் எனக்கு நீங்கள் இரண்டு மூன்று மாதங்களில் முன்னூறு ஆட்களை அனுப்ப வேண்டும்".

"எந்த மாதிரி ஆட்களை எதிர்பார்க்கிறாய்?"

"மரங்கள் சுமக்க வேண்டும். கற்களை புரட்ட வேண்டும். ஒட்ட தேசத்தின் தடியர்கள் வேண்டும். அவர்களால் தான் இதை செய்ய முடியும்"

"ஒட்ட தேசத்து ஆட்கள் நிச்சயம் கொண்டு வந்து தருகிறேன்"

"ஆனால் அவர்கள் தப்பித்து ஓட முயற்சிப்பார்கள் என்றும் எங்களை பயமுறுத்துகிறார்கள்"

"இரண்டு பேரை நிற்க வைத்து சிரம் அறுத்தால் யாரும் போக மாட்டார்கள். அதிகம் மேலைச் சாளுக்கிய வீரர்களையும்



அனுப்புகிறேன். முன்னூறு போதுமா, இன்னும் மேற்கொண்டு வேண்டுமா"

"இல்லை, இப்போது முன்னூறு போதும், மேற்கொண்டு வேண்டுமென்றால் நான் சொல்லி அனுப்புகிறேன். எனக்கு உங்களோடு சிறிது தூரம் பயணப்பட வேண்டும் என்ற ஆசை இருக்கிறது"

"என்னோடா, எதுவரையில்?"

"திருவொற்றியூர் வரையில்"

"ஏன் திருவொற்றியூர் வரையில், மான்ய கேடயம் வரைக்கும் வாவேன்"

"இல்லை. திருவொற்றியூர் கோவில் சிறிது சிதிலமாயிருக்கிறது என்றும், வெளிமண்டபம் கட்டப்பட வேண்டும் என்றும், வேறு சில பிரகாரங்கள் எழுப்பப்பட வேண்டுமென்று எனக்கு அங்கிருந்து தகவல் வந்திருக்கிறது. திருவொற்றியூர் பற்றி எனக்கு பல கதைகள் சொல்லப்பட்டு இருக்கின்றன. அந்த கோவிலை பார்த்தது போலவும் ஆகும். உங்களோடு பேசியது போலவும் ஆகும். அந்தக் கோவிலுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை நான் குறித்துக் கொண்டது போலவும் ஆகும்"

"உடனடியாக அங்கு வேலை துவங்குவாயா"

"இல்லை. இங்குள்ள வேலைகளை முடித்து விட்டு நான் அடுத்தபடி அந்தப் பக்கம் போவேன். போகும் முன்பு உங்களுக்கு தகவல் தெரிவிக்கிறேன். நீங்கள் வரும்பொழுது திருவொற்றியூர் வழியாகத் தானே வருவீர்கள். நான் உங்களை அங்கு சந்திக்கிறேன். நீங்கள் வருவதற்குள் திருவொற்றியூரையும் நான் செப்பனிட்டு விடுகிறேன்"

"மிகவும் நல்லது, நீ உற்சாகமாய் இருக்கிறாய் என்பது சந்தோஷமாக இருக்கிறது. அடுத்த வேலை, அடுத்த வேலை என்று எவனொருவன் போகிறானோ அவன் வெற்றி பெற்றவன். வேலை முடிந்த பிறகு ஓய்வெடுப்பவன் வெற்றி பெற முடியாது. ஓய்வில்லாத வேலை தான் ஒரு நல்ல மனிதனுடைய லட்சணம்"

"ஆமாம், உங்களை முன் மாதிரியாக வைத்துக் கொண்டால் அப்படித்தான் வாழ வேண்டும். சோழ தேசத்தில் எல்லோரும்

உங்களைத் தான் முன் மாதிரியாகக் கொள்கிறார்கள்"

"போதுமடா புகழ்ச்சி" இராஜேந்திர சோழர் அலுத்துக் கொண்டார்.

"அருண்மொழித் தேவரிடம் சொல்லி இருக்கிறேன். இந்த முறை நிறைய உருக்கு சாமான்கள் கொண்டு வாருங்கள். அடுத்து உளிகளும், கத்திகளும், கடப்பாறைகளும் செய்ய வேண்டி இருக்கிறது. அவைகளுக்காக தேனிரும்பு தேவைப்படுகிறது. அந்த இரும்பு வந்தால் எங்களுக்கு ஈயம் கலந்து உறுதிப்படுத்திக் கொள்ள நன்றாக இருக்கும். செய்ய தோதாக இருக்கும்"

"வேறென்ன வேண்டும்"

"ஊர் பாலைவனமாக இருக்கின்றது"

"எந்த ஊர்?"

"இப்பொழுது நாங்கள் இருக்கின்ற ஊர்"

"இந்த ஜெயங்கொண்டமா"

"ஆமாம்"

"என்ன சொல்கிறாய், ஏன் பாலைவனம்"

"நடனமாட பெண்களே இல்லை, ஆண்களே பெண்கள் வேடம் போட்டு நடனமாடுகிறார்கள். இது நன்றாக இல்லை. கோவிலுக்கு கும்பாபிஷேகம் நடந்த பிறகு தான் ஆடல் மகளிர் வர வேண்டுமா. அதற்கு முன்னதாகவே வரலாமே என்பது தான் என்னுடைய எண்ணம்.

அந்த உதவி செய்ய முடியுமென்றால் மிக நன்றாக இருக்கும். இரவு நேரம் கண்ணயருவதற்கு முன்பு இம்மாதிரியான கூத்துகள் பார்த்து விட்டு சிற்பிகள் படுத்து தூங்குவார்கள். அதுவும் தவிர கோளச் சிற்பங்கள் செய்வதற்கு எனக்கும் ஆசையாக இருக்கிறது. அழகான பெண்கள் சிலவும், சுமாரான பெண்கள் பலவும் இங்கே வரவழைத்தால் நன்றாக இருக்கும் என்பது எங்களுடைய விருப்பம். இது ஒரு விண்ணப்பம், முடிந்தால் செய்யவும்"

"இது நியாயமான கோரிக்கை, உடனடியாக ஏற்பாடு செய்கிறேன். பரஞ்சோதிக்குப் பிறகு இப்போது தளிச்சேரி பெண்டுகளை யார் நிர்வாகம் செய்வது"



"தேவ பட்டன் என்ற அந்தணர் நிர்வாகம் செய்கிறார்"

"நல்லது. தேவ பட்டனிடம் நான் சொன்னேன் என்று நடனமாடும் பெண்களை வரவழைக்க ஏற்பாடு செய். பத்து அழகான பெண்கள். நாற்பது சுமாரான பெண்கள் என்று கணக்குச் சொல்.

"வேறு என்ன வேண்டும் பெருந்தச்சா"

"எதுவும் இல்லை மாமன்னரே. எல்லாம் இங்கு திருப்தியாக இருக்கிறது"

"உங்களை ஒன்று கேட்க வேண்டும்" பரவை பேச்சுக்கு நடுவே புகுந்தாள்.

"கேளுங்கள் தாயே"

"கோவில் அழகாக இருக்கிறது. மிகச் சீராக இருக்கிறது. நல்ல உயரமாக இருக்கிறது. ஆனால் சிற்பங்களே இல்லையே"

"மாமன்னர் இந்தக் கேள்வியை கேட்பாரென்று நினைத்தேன். நீங்கள் கேட்டு விட்டீர்கள். சிற்பங்கள் தயாராக இருக்கின்றன தாயே. நட்சத்திர குறியிட்ட கோஷ்டங்களில் அவை நிறுவப்படும். கோஷ்டங்களில் வைத்து செதுக்குவது என்பது இயலாது. எனவே தரையில் படுக்கை நிலையில் வைத்து அதன் மீது உட்கார்ந்து கொண்டு தான் நாங்கள் செதுக்குவோம். பார்ப்பதற்கு அவ்வளவு சுகமாக இருக்காது. சிவன் தலையில் கால் வைத்து உட்கார்ந்து இருக்கிறானே என்று உங்களுக்குத் தோன்றும். கோவிலை நிர்மாணிக்கும் வரை அது வெறும் கல் தான். கோவிலை அந்தணரிடம் கொடுத்த பிறகு தான் அதற்கு உயிர் வருகிறது. சிற்பங்களை நாலு பேர் பார்க்க செதுக்குவதே இல்லை. மன்னர் விரும்பினால் வெகு நிச்சயமாக அந்த சிற்பங்களை காண்பிக்கிறேன்"

"பார்க்க வேண்டும் என்ற ஆவல் உண்டு பெருந்தச்சா. ஆனால் நீயாக அறிவிக்காமல் நானாக கேட்பது உனக்கு சங்கடத்தை உண்டு பண்ணுமோ என்று மௌனமாக இருந்தேன்"

"மாமன்னர் வாழ்க. உங்கள் தன்மை மிகப்பெரும் தன்மை. மற்றவரின் மனம் அறிந்து பழகுவதற்கு உங்களைப் போல் எவரும் இல்லை. நீங்கள் சொல்வது ஒரு விதத்தில் சரி, எல்லோரும் அந்த சிற்பங்களை பார்ப்பதற்கு அனுமதிக்க இயலாது. கண்ணேறு படும்.


அந்த கண்ணேறு பட்டால் நான் கொண்டு போய் கோஷ்டத்திற்குள் வைப்பதற்குள் உள்பாடு, என் பாடு என்றாகி விடும். எனவே நீங்களும், உங்கள் துணைவியாரும், இன்னும் நாலைந்து சேனாதிபதிகளும் பார்க்கலாம். மற்றவர்களை அனுப்பி விடுங்கள்"

"நான் தான் முதலில் பயணப்பட போகிறேன். அதனால் யாரையும் அனுப்ப இயலாது. நாளை காலை எழுந்திருந்து வெளிச்சத்தில் அவைகளை பார்க்கிறேன். எங்கே இருக்கின்றன?"

"தனியே ஒரு கொட்டகையில் வைக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் வருவீர்கள் என்று தெரிந்தால் பக்கத்திலுள்ள தட்டிகளை எல்லாம் பிரித்து வெளிச்சத்திற்கு ஏற்பாடு செய்து விடுவேன். அந்தப் பக்கம் இருக்கும் படைகளை மட்டும் கொஞ்சம் வாசலுக்கு அனுப்பி விட்டால் நன்றாக இருக்கும்"

மறுநாள் காலை அவ்விதமே அந்தப் பக்கம் இருக்கின்ற சிறு தேர் படைகள். வேறுபக்கம் இடம் பெயர்ந்தன. மாமன்னர் குளித்து விட்டு, கஞ்சி குடித்து விட்டு சிற்பக்கூடம் நோக்கிப் போனார். அவர் வந்ததும் சிற்பக் கூடத்தின் தட்டியெல்லாம் மடமடவென்று பிரித்து எடுக்கப்பட்டன. உள்ளே வெளிச்சம் பரவியது. மேலே கூரை அழுத்தமாக நின்றது. சிலைகள் புரட்டி நிற்க வைக்கப்பட்டன.

மாமன்னர் இராஜேந்திரர் திகைத்துப் போனார்.




"இது சண்டேஸ்வர மூர்த்தி, தந்தையை விட சிவனே முக்கியம் என்று சொன்ன சண்டேஸ்வரருக்கு சிவபெருமான் தன்னுடைய பிரதிநிதியாக முடிசூட்டிய இடம். எல்லா கோவில்களிலும் அவருக்கு



இடம் உண்டு என்று அறிவித்த இடம்.

சண்டேஸ்வர மூர்த்தி மண்டியிட்டு அமர்ந்திருக்க பரிவட்டம் போன்று ஒன்றை சிவபெருமான் சற்று வலமாக திரும்பி அவருக்கு சூட்டுகிறார். அருகே ஒயிலாக பார்வதி அமர்ந்திருக்கிறார்" அவர்கள் திகைத்துப் போனார்கள்.

"இவ்வளவு அழகாக ஒரு ஆண். இவ்வளவு அழகாக ஒரு பெண். இப்படி ஆண்களை இப்படி பெண்களை எங்கே பார்த்தாய்?"

"எல்லாம் கற்பனை தான் மாமன்னரே. சாமுத்ரிகா இலட்சணம் என்று எங்களுக்கு தனி ஒரு புத்தகம் இருக்கிறது. அதன்படி இந்த உயரத்தில் இந்த அகலத்தில், இந்த விரல் நீளத்தில் என்றெல்லாம் அளவுகள் உண்டு. மூக்குக்கும், உதடுக்கும் உள்ள இடைவெளி இவ்வளவு தான் இருக்க வேண்டும் என்ற கணக்கு உண்டு. முகவாய் குழி விழுதல், கன்னங்கள் செழுப்பேறுதல், புருவங்கள் வில் போன்று வளைந்திருத்தல் போன்றவை எல்லாம் நல்ல இலட்சணங்கள்.

அம்மையோடு கூடிய அப்பனை பார்த்தீர்களல்லவா. அவர்கள் அமைதியாக இருக்கிறார்கள். இதோ பாருங்கள். இது கால சம்ஹார மூர்த்தி. மார்கண்டேயனுக்காக சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு காலனை சம்ஹாரம் செய்த இடம். கீழே பரிதாபமாக எமதர்மன் கிடக்க, அவரை மிதித்தவாறு கையில் உள்ள கோலை அவருடைய தொடையில் அழுத்தியவாறு அடுத்த அடி முகத்தில் விழும் வண்ணம் கையை ஓங்கியவாறு இருக்கிறார். முகத்தில் மெல்லிய கோபம். மிகக் கடுமையாக கோபித்துக் கொள்ள சிவனால் இயலாது. சிவன் கடுமையாக கோபித்துக் கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. மெல்லிய கோபம் போதும். இங்கே இருந்து பாருங்கள். சிவன் சிரிப்பது போல் இருக்கும். மேலே இருந்து பாருங்கள். சிவனின் முகத்தில் கோபம் இருக்கும். இதுதான் மெல்லிய கோபம். உதடுகளை சிரிக்கும்படி விட்டு கண்களை நெருக்கமாக வைத்தால் கண்களிலிருந்து கோபம் வெளிப்படும். உதடுகளில் சிரிப்பு இருக்கும்"

"அற்புதம், அற்புதம், அற்புதம்" கன்னத்தில் கை வைத்து பாவை வியந்தாள்.

"இது சரஸ்வதி. இது லக்ஷ்மி. இது பிரம்மா. இது சிவன்.

உட்கார்ந்த நிலை. இது தட்சிணா மூர்த்தி. கன்னி மூலையில் திருவுவதற்காக செய்யப்பட்ட பெரிய கணபதி, இது கோஷ்டத்தில் வைப்பதற்காக செய்யப்பட்ட சிறிய கணபதி. இந்த சிற்பம் நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள். பரத கண்டத்தில் எங்கேயும் இருந்திருக்காது"

அவர்கள் தொட்டுத் தொட்டு வியந்தார்கள். மெல்ல அணைத்துக் கொண்டார்கள்.

"நான் ஒரு முறை அந்த கன்னி மூலை கணபதியை தழுவிக் கொள்ளட்டுமா. என்ன அழகு.என்ன தொந்தி, இவரைப் பார்த்தது போலவே இருக்கிறது"

"அம்மா, கிட்டத்தட்ட இராஜேந்திர சோழரை மனதில் வைத்துக் கொண்டு சிவனும், பார்வதியுமாக ஒரு உருவம் செதுக்கி இருக்கிறேன். இங்கே வந்து பாருங்கள். இது தான் அது.

உமாமகேஸ்வரர் சற்று தொந்தியுடன் சுகாசனத்தில் இருக்கிறார். அவருக்கு பக்கத்தில் மிக நெருக்கமாக பரவை நாச்சியார், மன்னிக்கவும், உமா பார்வதி இருக்கிறார்கள்"

பரவை வாய் விட்டுச் சிரித்தார். மன்னரும் சிரித்தார். அந்த சிலையும் மிக அழகாக இருந்தது. அதையும் அவர்கள் தடவிப் பார்த்தார்கள்.

"என்னடா, கோவிலில் ஏதோ குறைகிறதே என்று பார்த்தேன். அற்புதம் செய்திருக்கிறாய் நித்த வினோதப் பெருந்தச்சா, மிக அழகான பெயர் உனக்கு. நித்தம் நித்தம் வினோதம் செய்து கொண்டிருக்கும் பெருந்தச்சன் நீ. இழைத்திருக்கிறாய். கல்லில் இப்படி இழைக்க முடியுமா. இதென்ன மரமா, களிமண்ணா, இப்படி உன் கைக்கு வாட்டப்படுகிறதே"

"எல்லாம் உங்களுடைய அன்பு, எது கேட்டாலும் வாரி வாரி கொடுக்கிற உங்கள் அன்பு இருக்கும் பொழுது எனக்கு என்ன குறை?"

"பெருந்தச்சா, உன்னை கொண்டாடிக் கொள்ளவும், என்னை கொண்டாடிக் கொள்ளவும், உன் குடும்பத்தை, குலப் பெருமையை சொல்லிக் கொள்ளவும் இந்த கோவிலை நான் எழுப்பவில்லை. நாம் ஒரு நாகரீகத்தில் பிறந்தவர்கள். காவிரிக் கரை நாகரீகம்,



சோழ தேச நாகரீகம், சோழ தேசம் சோறுடைத்து, வெறும் சோறு தின்கிறதல்ல. அந்த சோற்றினால் விளைந்த நாகரீகம் இது. ஆடல் பாடல் நிற்குமோ. ஓவியங்கள் தாங்குமோ தெரியாது. ஆனால் இந்தச் சிற்பங்களெல்லாம் காலம் தாண்டி நிற்கும். மழையை, வெய்யிலை எல்லாம் தாண்டி நிற்கும். நிற்க வேண்டும் என்பது என்னுடைய அவா. செங்கல்லால் கட்டிய என் மாளிகை நூறு வருடங்கள் கழிந்து மெல்ல சரிந்து விழலாம். ஆனால் இந்தக் கருங்கல்லால் ஆன கோவில் ஒரு பொழுதும் அழியாது. ஆயிரம் ஆயிரம் வருடங்களாக என் பெயரை, உன் பெயரை நம் குலப் பெயரை, நம் நாகரீகத்தை, நம் தமிழ் மொழியின் வளமையை, அதன் நுல்லியத்தை சொல்லிக் கொண்டிருக்கும். நமக்கு கணிதம் எவ்வளவு கரதலப் பாடம் என்பதை சொல்லிக் கொண்டிருக்கும். நமக்கு கட்டிடக் கலை எவ்வளவு எளிது என்பதை சொல்லிக் கொண்டிருக்கும். நம்முடைய உழைப்பு எவ்வளவு மேன்மையானது என்று சொல்லிக் கொண்டிருக்கும். இதைச் சொல்லத்தான், இதை செய்ய வேண்டுமென்று நான் நான் போருக்கு போகிறேன். இதற்காகத் தான் என் உயிரையும் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறேன். சோழ தேசம் சாமான்யமானது அல்ல. அது காவிரிக்கரை நாகரீகம், தமிழ் நாகரீகம்.

அரியானை அந்தணர்தம் சிந்தையானை அருமறையின்

அகத்தானை அணுவையார்க்கும் தெரியாத தத்துவனை

என்று சொல்லுகின்ற நாகரீகம். கடவுளுடைய பிரம்மாண்டத்தை சொல்லுகின்ற நாகரீகம். சிவலிங்கம் எப்போது ஸ்தாபிப்பீர்கள்"

"அய்யா, அது பாதி வரையில் தான் செதுக்கப்பட்டு இருக்கிறது. அதை காட்டுவதற்கு எனக்கு விருப்பமில்லை. சந்திரகாந்தக் கல்லை மேலே வைக்கலாமா, மூலக்கிரகத்தின் கீழே வைக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். சிவலிங்கத்தின் கீழ் அந்தக் கல்லை வைத்து விட்டோம். அந்த இடம் குளுமையான காலத்தில் வெதுவெதுப்பாக இருக்கும் என்பது என்னுடைய எண்ணம். எனவே அவைகளையெல்லாம் பூர்த்தி செய்து விட்டு உங்களுக்கு சொல்லி அனுப்புகிறேன். வெகு நிச்சயமாக ஒரு வருடமாகும். ஜெயங்கொண்டம் எப்போது வருகிறீர்கள்?"

"எனக்கும் ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்கள் ஆகலாம். இங்கு வந்து மறுபடியும் இந்த சிற்பங்களை பார்ப்பேன்

என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நித்த விநோதப் பெருந்தச்சர் வாழ்க" மன்னர் நகர்ந்ததும், வந்தியத் தேவரும், அருண்மொழிப் பட்டனும், பாண்டியன் சீவல்லபனும் அந்தச் சிலைகளை தொட்டுப் பார்த்தார்கள். அருண்மொழிப் பட்டனும் அந்த விநாயகரை ஒரு முறை தழுவிக் கொண்டான்.

"கொஞ்சம் படியாகத் தான் இருக்கிறது" என்று அருண்மொழி மனம் விட்டுப் பேசினான். அவர்கள் வெளியே வர மறுபடியும் தட்டிகளை முடைந்தார்கள். அந்த இடத்தை இருட்டாக்கி னார்கள்.

"அரண்மனையை வியப்பதா, கோவிலின் சிற்பங்களை வியப்பதா ஊர் நிர்மாணித்த அழகை வியப்பதா, ஊருக்குள் ஓடும் கால்வாய்களை வியப்பதா, எதை வியப்பது என்று தெரியவில்லை. சுற்றியுள்ள கோட்டைகள் தான் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றன. உள்ளுக்குள்ளே எல்லோரும் மிகப் பத்திரமாக இருக்கலாம். பஞ்சமர்களுக்கும் அதில் இடம் உண்டு என்று சொல்லியிருக்கிறீர்களே உங்கள் மனம் மிகப் பெரியது. இதுவரை இருந்த பல்வேறு வித்தியாசங்களை நீங்கள் தகர்த்து விட்டீர்கள்"

பாண்டியன் சீவல்லபன் சொல்ல, மாமன்னர் மேலே கை காட்டினார். இறைவனுடைய அனுக்கிரஹம் என்று சொல்லாமல் சொன்னார்.

"விரைவாகப் போக வேண்டுமென்பதால் இன்னும் ஒருநாள் ஓய்வெடுத்துக் கொள்ளட்டும். நாளை கிளம்புவோம். படைகளுக்கு சொல்லிவிடு" என்று சொல்ல, செய்தி நாலாபக்கமும் பரவியது.

"சோழப்படைகள் நகரத் துவங்கி விட்டன. திருவொற்றியூருக்கு நாளை மறுநாள் வந்து சேர்ந்து விடுவார்கள். திருவொற்றியூர் வந்து சேர்ந்ததும் படைகள் இரண்டாகப் பிரியும். கிடுக்கித் தாக்குதல் இருக்கும். இந்த முறை மான்ய கேடயத்தை சூறையாடாமல் திரும்ப மாட்டேன் என்று இராஜேந்திர சோழர் சபதம் செய்திருக்கிறார். எனவே நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்" ஒற்றர் படைத் தலைவன் மிக இரகசியமாக மேலை சாளுக்கிய மன்னன் ஜெயசிம்மனிடம் பேசினான்.



"என் உத்தேசம் உனக்கு தெரிந்தாக வேண்டுமா"

"ஆமாம். அதற்கேற்றபடி தான் சில காரியங்கள் செய்தாக வேண்டும்"

"என்ன?"

"நீங்கள் ஊரை விட்டு போவதற்கு முன்பு தான் போக வேண்டும் என்று விஷ்ணுவர்தன விஜயாதித்தன் திட்டமிட்டிருக்கிறான். அதற்கு தயாராக இருக்கும்படி தன்னுடைய சேனைகளுக்கு கட்டளை இட்டிருக்கிறான். எனவே..." அந்த உளவுப்படை தலைவன் பேச்சை நிறுத்தினான்.

"எனவே, என்ன எனவே, சொல்" ஜெயசிம்மன் கட்டளை இட்டான்.

"தெற்கு நோக்கி போவது போல ஒரு படை எடுப்பை ஏற்படுத்தி படைகளை முன்னே நடத்திக் கொண்டு போய் பிறகு படைகளை நடுவே நிறுத்தி விட்டு நீங்களும் உங்கள் மெய்க் காவல் வீரர்களும் வடமேற்காக மான்ய கேடயம் நோக்கி போய் விடுங்கள். மான்ய கேடயம் நோக்கி ஒரு வேளை இராஜேந்திரர் வந்தால் அங்கிருந்து தப்பி இன்னும் வடக்கே போய் விடுங்கள்"

"விஷ்ணுவர்தன விஜயாதித்தன் பின்னால் வந்தால் என்ன செய்வது?"

"அவனை கோட்டையில் வைத்து பூட்டி விடலாம். கோட்டையின் எல்லா கதவுகளையும் வெளியே தாழ்பாள் போட்டு அகழி கதவை தூக்கி விடலாம். கோட்டையிலிருந்து வெளியே வராதபடி செய்து விடலாம்"

"இதைத் தாண்டியும் கோட்டையிலிருந்து வெளியே வருவதற்கு வழி இருக்கிறதா?"

"இருக்கிறது"

"என்ன வழி?"

"சுரங்கப்பாதை"

"அது விஷ்ணுவர்தன விஜயாதித்தனுக்கு தெரிந்திருக்குமா?"

"தெரிந்திருக்கலாம்"

"அதையும் அடைத்து விடு"

"சரி. எப்போது படை எடுத்து போகப் போகிறீர்கள்?"

"நாளையே படை எடுத்து போகலாம்"

"நாளை நாள் நன்றாக இல்லையே"

"தப்பித்து போவதற்கு நாள் என்னடா கணக்கு. காத்திருக்கவா முடியும். உடனே கிளம்பு என்றால் படைகள் தடுமாறும். நாளை கிளம்பலாம் என்றால் உடனே சகலரும் சரி என்று தலை அசைப்பார்கள். அவர்களை குறிப்பாக கீழைச் சாளுக்கிய வீரர்களை முன்னே அனுப்பி இரவோடு இரவாக வடமேற்கு நோக்கி ஓடி விட வேண்டும்.

கோட்டைக் கதவை யார் தாழ்பாள் போடுவார்கள். சரங்கத்தை யார் மூடுவார்கள்"

"அதை நான் செய்கிறேன்" உளவுப்படைத் தலைவன் மண்டியிட்டு பதில் சொன்னான்.

"மிகச் சரியான வேலை. உனக்கு எவ்வளவு வேண்டும்?"

"நீங்கள் எத்தனை பார்த்துக் கொடுத்தாலும் சரி"

"உனக்காக ஐநூறு பொன் கழஞ்சு தருகிறேன்"

"அய்யா, உங்கள் உயிரையே காப்பாற்றி தருகிறேன். உங்கள் உயிர் ஐநூறு பொன் கழஞ்சா"

"எவ்வளவு வேண்டும்?"

"ஒரு ஆயிரமாவது கொடுங்கள்"

ஒரு ஆயிரம் பொன் கழஞ்சுகள் எண்ணி அவனுக்கு தரப்பட்டது. இது அதிகம் தான். இருந்தாலும் என்ன செய்வது. இப்போதைக்கு இவனை முறைத்துக் கொள்ள முடியாது. பிற்பாடு வழியில் மடக்கி மொத்த பொன்னையும் பிடுங்கிக் கொள்ளலாம் என்று அவருக்குத் தோன்றியது. அவர் பொன் கழஞ்சுகளை கொடுத்து விட்டு அந்தப்புரத்திற்கு நகர்ந்தார். அவர் நகர்ந்ததும், உளவுப்படை தலைவன் குதிரையில் ஏறிக் கொண்டான். வேகமாக வெளியேறினான்.

அரண்மனையின் பின்பக்கம் போய் நின்று கொண்டான். கோட்டையின் மதில் சுவருக்கும், உள் சுவருக்கும் நடுவே இடைவெளி இருந்தது. ,இருட்டாக, குதிரையை நிற்க வைத்தான்.



உள் பக்கத்திலிருந்து அவன் வருகையை, குதிரையை நிற்க வைப்பதை பார்த்துக் கொண்டே இருந்தார்கள்.

"குதிரையை பார்த்தாயா?"

"ஆமாம். வலப்பக்கம் மூட்டை தொங்குகிறது. அங்கிருந்து தான் எடுத்திருப்பான் போலிருக்கிறது" விஷ்ணுவர்தன விஜயாதித்தன் கூர்மையாக குதிரையைப் பார்த்தான்.

"நான் அவனிடம் பேச்சு கொடுக்கும் பொழுது அந்த மூட்டையை எடுத்துக் கொண்டு வந்து விடு. மூட்டையின் உயர, அகலம் பார். அதற்கேற்றபடி கூழாங்கல்லை தயார் செய்து விடு"

ஒரு பை நிறைய கூழாங்கற்கள் நிரப்பப்பட்டன. அவன் வந்ததும் கதவு திறந்தார்கள்.

உள்ளே நடுங்கிய படி விஷ்ணுவர்தன விஜயாதித்தன் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

"என்ன இப்படி உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்"

"பயமாக இருக்கிறது" என்று ஈனஸ்வரத்தில் பேசினான்.

"ஒரு பயமுமில்லை. உங்களுக்கு முன்னதாகவே கிளம்ப வேண்டும் என்று அவர் தீர்மானித்திருக்கிறார். நீங்கள் அவருக்கு முன்னதாக கிளம்பி விடுங்கள்"

"அவர் எப்பொழுது கிளம்புகிறார்?"

"நாளை தெற்கு நோக்கி படை எடுக்கிறார். படை எடுப்பு என்பது பொய். படை எடுப்பு பாதி தூரம் போய் விட்டு அங்கேயே படைகளை நிற்க வைத்து பிறகு வடமேற்காக மான்ய கேடயம் நோக்கிப் போகிறார். நீங்கள் இன்று இரவே கிளம்பி விடுங்கள்"

"ஏன் அப்படி?"

"தாமதித்தீர்கள் என்றால் உங்களை கோட்டைக்குள் வைத்து பூட்டச் சொல்லியிருக்கிறான். நானும் அவ்விதமே வாக்கு கொடுத்திருக்கிறேன்"

"கோட்டைக்குள் வைத்து பூட்டுவதா, யாருடைய எண்ணம் இது?"

www.palsuvainovel.com

"அவருடைய எண்ணம் தான்"

"நன்றாக இருக்கிறது. என்னிடம் வசமாக ஒரு முறை மாட்டப் போகிறான். அப்பொழுது கை, கால்களை வெட்டி வீழ்த்துகிறேன். சுரங்க வழி இருக்கிறதே மறந்து போயிற்றா?"

"அதையும் அடைத்துவிடச் சொல்லி இருக்கிறார்"

"நல்லது. நான் இன்று இரவே கிளம்புகின்றேன்"

"இவ்வளவு தூரம் வந்து சொல்கிறேன். எனக்கு ஒன்றும் கிடையாதா?" அவன் பல் காட்டினான்.

"வைத்திருக்கிறேன். நிச்சயம் தருகிறேன்"

"எங்கே அந்த மூட்டை" என்று கேட்க, அவன் குதிரையிலிருந்து பொன் மூட்டையை வேகமாக எடுத்து வந்தார்கள். அதிலிருந்து இருநூறு பொற்காசுகளை எடுத்தார்கள். சிறு மூட்டையாக்கி கொடுத்தார்கள்.

"என்ன இது? பிச்சையா போடுகிறீர்கள். உங்கள் உயிருக்கு நான் உத்தரவாதம் தருகிறேன். என்னை இப்படி இழிவாக நடத்துகிறீர்களே"

"அய்யா இதற்கு மேல் நூறு பொன் தான் தர முடியும். இதற்கு மேல் என்னால் ஆகாது. நான் என்ன மன்னனா, இளவரசனா, எதுவும் இல்லை. ஒரு பகடைக்காய். நான் உயிர் தப்பி ஓடுவதற்கு இருக்கிறேன். என்னிடம் பேரம் பேசுகிறீர்களே. உங்களுக்கு புண்ணியமாகப் போகும். இன்னொரு நூறு பொன் வாங்கி விட்டு விடுங்கள்"

இன்னொரு நூறு பொன் கொடுக்கப்பட்டது. முன்னூறு கழஞ்சை வாங்கிக் கொண்டான்.

"ஆயிரமும் முன்னூறும், ஆயிரத்து முன்னூறு, இரண்டு கிராமங்களை வாங்கி எங்கேயாவது தனியாக சிவனே என்று உட்கார்ந்து விட வேண்டியது தான். எத்தனை படைகள் வந்தாலும் வாளே எடுப்பதில்லை. சாதாரண பொதுஜனம் விவசாயம் என்று சொல்லிவிட வேண்டியது தான். யார் ஜெயித்தாலும் வாழ்க வாழ்க என்று கோஷம் போட வேண்டியது தான்" என்று தீர்மானம் செய்து கொண்டான்.

அவர்கள் குதிரையில் தயார் ஆனார்கள். வடக்கு பக்கம் வாசலை திறந்தார்கள். ஒவ்வொரு குதிரையாக வெளியே வந்தன.



திறப்பில் நுழைந்தன. காணாமல் போயின.

அவன் வெளியே வந்து தன் குதிரையை எடுத்து மூட்டையை தொட்டுப் பார்த்தான். மூட்டை பத்திரமாக இருந்தது. நிம்மதியாக பெருமூச்சுடன் அவன் கிழக்கு நோக்கி நகர்ந்தான்.

கிராமங்கள் வாங்குவதற்கு பதிலாக மரக்கலன்கள் வாங்கினால் போதும். இன்னும் கூட தள்ளிப் போய் கலிங்கத்திலேயோ அல்லது வங்க தேசத்திலேயோ போய் குடியேறிக் கொள்ளலாம். அங்கு போய் விவசாயம் செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் வந்தது. அவன் தன் வீடு நோக்கி நகர்ந்தான்.

விஷ்ணுவர்தன விஜயாதித்தன் குதிரைகள் வடக்கு நோக்கி, ஓட்ட தேசம் நோக்கி தலைதெறிக்க ஓடின. விடியற்காலையில் கோட்டைக் கதவுகள் சாத்தினார்கள். சுரங்கப் பாதையை மூடினார்கள். மேலைச் சாளுக்கிய மன்னன் ஜெயசிம்மன் உள்ளுக்குள் வைத்து விஷ்ணுவர்தனை பூட்டி விட்டோம் என்ற கர்வத்தோடு கீழைச் சாளுக்கிய படைகளை நகர்த்திக் கொண்டு 'தெற்கு நோக்கி நடந்தான்.

இராஜேந்திர சோழர் படைகள் உத்திரமேரூரைத் தாண்டின. வீதியின் நடுநாயகமாக இருக்கும் மண்டபத்தை நோக்கி இராஜேந்திர சோழர் கை கூப்பினார். பரவையை வணங்கச் சொன்னார். புருஷனும், மனைவியும் அந்த மண்டபத்தில் ஏறினார்கள். அமர்ந்து கொண்டார்கள். அவரைச் சுற்றி சேனாதிபதிகள் நின்று கொண்டிருக்க அவர் நாலாபுறமும் மண்டபத்தை சுற்றிப் பார்த்தார்.

"என் முன்னோர் பராந்தகச் சோழன் காலத்தில் கட்டப்பட்ட மண்டபம் இது. வெறும் மண்டபம் இல்லை. சோழ மன்னனின் நாகரிகத்தை சொல்லும் மண்டபம். மக்கள் ஆட்சி தான் மன்னன் ஆட்சி என்று சொல்லுகின்ற மண்டபம். குடவோலைத் திட்டம் நடந்த மண்டபம். குடவோலைத் திட்டம் எப்படி நடக்க வேண்டும் என்று தெளிவாக கல்வெட்டில் பொறிக்கப்பட்ட மண்டபம்.

யாருக்கு இங்கே படிக்கத் தெரியும். போய் அந்த சுற்றுச் சுவரில் படித்து விட்டு வாருங்கள். ஒவ்வொர் ஊரிலிருந்து ஆட்களை தேர்ந்தெடுத்து அவர்கள் பெயர்களை எழுதி ஒரு குடத்தில் போட்டு பிறகு ஒரு குழந்தையை விட்டு எடுக்கச் சொல்வார்கள்.

அந்த குழந்தை யார் பெயரை எடுக்கிறதோ அவரைத் தான் அந்த வாரியத்தின் தலைவராக நியமிப்பார்கள். ஏரி வாரியம், சம்வத்ர வாரியம், தோட்ட வாரியம் என்று மூன்று வாரியங்களாகப் பிரித்து முப்பது பேரில் பன்னிரண்டு பேர் சம்வத்ர வாரியர்களாகவும், பன்னிரெண்டு பேர் தோட்ட வாரியர்களாகவும், ஆறு பேர் ஏரி வாரியத் தலைவர்களாகவும் பணி அமர்த்தப்படுவார்கள். புறநகர் குடியிருப்புக்கு பன்னிரெண்டு பேர் தேர்ந்தெடுத்து அவர்களை ஆறு பேர் பஞ்சவார வாரியத்திற்கும், ஆறு பேர் பொன் வாரியத்திற்கும் தலைவர் ஆவார்கள்.

"யார் வாரியத் தலைவர்களாக போட்டியிட வேண்டும். தெரியுமா. ஒரு குறிப்பிட்ட அளவு நிலம் இருக்க வேண்டும். சொந்த வீடு இருக்க வேண்டும். முப்பதிலிருந்து அறுபது வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். வேதங்களையும், சாஸ்திரங்களையும் கற்றவராக இருக்க வேண்டும். உடல் வலிமையும், உள்ள வலிமையும் உள்ளவராக இருக்க வேண்டும். இதுவரை வாரியத் தலைவராக இல்லாதிருக்க வேண்டும் அல்லது வாரியத்தில் இருப்பவருக்கு உறவினராக இல்லாதிருக்க வேண்டும். எண்ணத் தெளிவு. முதலில் தகுதி வாரியாக போட்டியிடுவார்கள். உள்ளுக்குள் நுழைவார்கள். ஆனால் தேர்ந்தெடுக்கப்படுவது இறைவன். ஒரு பாலகன். இறைவன் மூலமாக அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். எனவே எந்தவித தவறும் நிர்வாகத்தில் ஏற்படாது. இதோ இந்தக் கூடத்தில் தான் சபை குறைவர கூடியிருந்தது. நடுவிலே தாமிரப் பானை வைத்து அதற்குள் ஓலை எழுதிப் போட்டு சிறுவனை எடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். மண்டபத்தை உயரே கட்டியிருக்கிறார்கள். எனவே சுற்றி உள்ள மக்களும் தொலைவிலிருந்து என்ன நடக்கிறது என்று பார்க்கலாம். எதுவும் இரகசியமில்லை. எந்த ஒளிவு மறைவும் இல்லை.

என்னை என்னவோ மிகப்பெரிய நாகரீகம் மிக்கவன். அற்புதமாக சிற்ப கலைஞர்களுக்கு உதவி செய்பவன். இப்படி இருப்பவன். அப்படி இருப்பவன் என்று சொன்னீர்களே நூறு வருடங்களுக்கு முன்பு என்னத் தெளிவாக ஆட்சி நடந்திருக்கிறது. என் மூத்தோர் பராந்தகனை நான் என்னவென்று கும்பிடுவது"

"இது மிகச் சிறந்த நாகரீகம் அய்யா. நான் கொண்டு வரவில்லை. என் தந்தை கொண்டு வர வில்லை. அதற்கும் முன்னதாகவே இந்த



[illegible] நாகரீகம், சோழ தேசத்து நாகரீகம் வந்து விட்டது.

ஊர் நிர்வாகத்தை மன்னன் நடத்தவில்லை. சேனாதிபதிகள் நடத்தவில்லை. மந்திரிமார்கள் நடத்தவில்லை. ஊருக்குள் உள்ளவர்களே நடத்தி இருக்கிறார்கள். அவர்களுக்குத் தான் பிரச்சனையுடைய மையம் தெரியும். அவர்கள் எல்லோரும் மன்னனுக்கு கட்டுப்பட்டவர்கள். மன்னன் அவர்களை சுயமாக ஆட்சி செய்ய அனுமதித்தான். மன்னனுடைய ஆட்சியும் இருந்தது. அந்த சமயம் மக்களுடைய கையும் ஓங்கி இருந்தது. என்ன அழகு. இந்த பாரத கண்டத்தில் எங்கேனும் ஒரு இடத்தில் இப்படிப்பட்ட ஆட்சி முறை நடந்திருக்குமா அல்லது இந்த உலகத்தில் ஏதேனும் ஒரு இடத்தில் மக்கள் ஆட்சி என்பது நடந்திருக்குமா. எல்லா இடத்திலும் வாள் வைத்துக் கொண்டிருந்த மன்னர் தானே சிறப்பாக இருக்கிறார். புஜவலிமை தானே பெரிதாக இருக்கிறது. புஜவலிமை தாண்டி புத்தி வலிமை முக்கியம். நேர்மை முக்கியம். தியாகம் முக்கியம் என்று சொன்ன ஒரே ஒரு பரம்பரை சோழப் பரம்பரை"

எல்லா சேனாதிபதிகளும் ஆரவாரம் செய்தார்கள். கை கூப்பினார்கள். பராந்தகனை மனதில் நினைத்து வணங்கினார்கள்.

யார் இதற்கு காரணம். பராந்தகரை சொல்வதா அல்லது பராந்தகருக்கு உறுதுணையாக இருந்த சேனாதிபதிகளைச் சொல்வதா அல்லது சேனாதிபதிகளுக்கு உறுதுணையாக இருந்த மந்திரிமார்களை, குருமார்களை சொல்வதா, யாரோ ஒரு ஞானவான் இருந்திருக்கிறான். அவன் மன்னனுக்கும் மேலாக நின்று நல்லதை செய்திருக்கிறான். இப்படி ஞானவான்கள் பிறந்த பூமி அய்யா சோழ தேசம். இந்த சோழ தேசத்தை கிள்ளுக்கீரை என்று நினைத்து எவனேனும் உள்ளே வந்தால் சும்மா விடலாமா, வெட்டி எறிய வேண்டாமா, எங்கள் நாகரீகத்தை கலைக்க முற்பட்டால் சும்மா இருப்போமா, சிதற அடிக்க மாட்டோம்.

உங்களுடைய ஆட்டம் பாட்டங்களையும், பெண் போகத்தையும் இங்கே கொண்டு வந்து காட்டலாம் என்று பார்க்கிறாயா முடியாது. பெண்ணை காட்டி அரசை கவிழ்க்க பார்க்கிறாய். எவ்வளவு கேவலமானவன் நீ. எங்கள் நாகரீகத்தில் கால் தூசுக்கு ஈடாக முடியுமா" அவர் உரத்தக் குரலில் பேச, எல்லோரும் மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவருடைய சிற்றத்தின், அடிமனது வேதனை நன்கு புரிந்தது.

இரண்டு நாள் பயணப்பட்டு மூன்று குதிரை வீரர்கள் வந்தார்கள். அவசரம் என்றார்கள். அவர்களை உடனே உத்திரமேரூர் மண்டபத்தில் அனுமதித்தார். 'என்ன' என்று கேட்டார்.

"வேங்கியின் கோட்டைக் கதவுகள் வெளிப்பக்கம் தாழிடப்பட்டன. சுரங்கப்பாதை மூடப்பட்டு விட்டது. உள்ளே யார் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஆனால் உள்ளே இருந்து எந்த சத்தமும் வரவில்லை. கோட்டை மதிலில் யாரும் ஏறவில்லை. அகழியினுடைய பாலங்களெல்லாம் தூக்கப்பட்டு விட்டன. கோட்டையிலிருந்து இரவு நேரம் வெளிச்சம் கூட வரவில்லை. எல்லாம் மர்மமாக இருக்கிறது" என்று சொன்னார்கள்.

இராஜேந்திரசோழர் வாய் விட்டுச் சிரித்தார்.

"அப்படியானால் வேங்கியில் யுத்தம் இல்லை"

"என்ன?"

"ஜெயசிம்மன் அங்கு இல்லை"

"இல்லை. ஜெயசிம்மன் படை எடுத்து தெற்கு நோக்கி வருகிறார்"

"வரமாட்டார், விஷ்ணுவர்தன் விஜயாதித்தனை உள்ளே அடைத்து விட்டு தான் போக்கு காட்டி ஓடி விடலாம் என்று நினைக்கிறான். செய்யட்டும், ஆனால் விஷ்ணுவர்தன விஜயாதித்தனும் உள்ளே இல்லை என்பது அவனுக்கு புரியவில்லை"

"ஏன்?"

"உள்ளே இருந்தால் ஆ ஐய்யோ என்று அலறி இருப்பான். பெரிய சத்தம் கேட்கும், காப்பாற்றுங்கள் என்று குரல் கேட்கும். உள்ளே சத்தம் வரவில்லை என்றால், உள்ளே விஷ்ணுவர்தன் இல்லை என்று அர்த்தம்"

"எங்கே போயிருக்கக்கூடும். மான்யகேடயம் வந்தால் மறுபடியும் மாட்டிக் கொள்வானே"

"மான்ய கேடயம் போக மாட்டான். அவன் ஒட்ட தேசத்திற்கு போய் விடுவான். எனவே நம்முடைய படை எடுப்பின் பெரிய வேலை இரட்டைப்பாடியிலும், மான்ய கேடயத்திலும் தான் இருக்கின்றன".

"மான்யகேடயத்தை அழித்து விட்டு அப்படியே ஒட்டதேசம்



[illegible] விடலாமா அல்லது வேங்கிக்குப் போய் இராஜநரேந்திரனை [illegible]த்தில் உட்கார வைக்கலாமா.

எது சரி என்று யோசிக்க வேண்டும். எனவே எவ்வளவு சீக்கிரம் கிளம்ப முடியுமோ கிளம்புவோம். வாழ்க பராந்தகர், வாழ்க சோழ தேசம்" என்று சொல்ல வீரர்கள் எதிரொலித்தார்கள்.



# 32

மேலை சாளுக்கிய மன்னர் ஜெயசிம்மனுக்கும் தகவல் வந்தது.

"உள்ளிருந்து எந்த சலனமும் இல்லை. பூட்டப்பட்டது பூட்டப்பட்டதாகவே இருக்கிறது. பணி ஆட்கள் மட்டுமே கதவை தட்டுகிறார்கள். வேறு எந்த குரலும் இல்லை. வீரர்கள் குரல் வரவே இல்லை. தீப்பந்தங்கள் எரியவே இல்லை. என்ன செய்வது" என்று கேட்டார்கள்.

"நாம் தப்பித்து விட்டது. எங்கு போகும். போகட்டும். ஒட்ட தேசம் தான் போகும். என் மீது விழுந்து பிடுங்காமல் இருந்தால் சரி, நான் என்னை காப்பாற்றிக் கொள்ள மான்யகேடயம் போகிறேன். மான்ய கேடயத்தை பலப்படுத்துகிறேன். அதை நோக்கி நிச்சயம் இராஜேந்திரன் வருவான். எத்தனை வீரர்கள் என்பதை கணக்கிட்டு முன்னாடியே சொல்லத் தெரிந்தால் நாம் தாக்குவதற்கு தயாராக இருப்போம்"

"அதுவும் தெரிந்திருக்கிறது"

"எத்தனை வீரர்கள்?"

"ஒன்பது லட்சம் வீரர்கள்"

"என்ன?" ஜெயசிம்மன் திகைத்தான்.

"ஒரு லட்சம், இரண்டு லட்சம் என்று நினைத்தேனே, இத்தனை வீரர்களை அவன் எப்படி ஒன்று திரட்டினான்"

"உங்கள் தலையை கொய்ய வேண்டுமென்பதே அவனுடைய முக்கியமானப் பணி. முழு வேகம், அதனால் சகல பக்கமும் வீரர்களை திரட்டி எடுத்துக் கொண்டு நம்மை நோக்கி வருகிறான்"

"அப்பொழுது திடுக்கி தாக்குதலாக வருகிறான்"

"ஆமாம்"

"சரி, அப்போது மான்ய கேடயமும் போக முடியாது. வேறு எங்கு போகலாம்?"

"வடக்கே போய் விடுங்கள்"

"வடக்கே என்றால்?"

"கல்யாணியை நோக்கிப் போங்கள்"

"அதுதான் சரியான யோசனை"

அவன் சேனாதிபதி சொன்ன யோசனையை உடனே ஏற்றுக் கொண்டான். குதிரை எடுத்தான். கீழைச் சாளுக்கிய வீரர்களிடம் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் வேகமாக வடமேற்கு நோக்கி ஓடினான். அவனைத் தொடர்ந்து அவனுடைய மெய்க் காப்பாளர்களும், சேனாதிபதிகளும் பின் தொடர்ந்தார்கள். அவன் போகும் வரை கீழைச் சாளுக்கிய வீரர்கள் பரிதாபமாக பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவன் போய் மறைந்ததும்,

"வாழ்க. இராஜேந்திர மன்னர் வாழ்க. சோழம் வாழ்க. கீழைச் சாளுக்கியம் வாழ்க" என்று கூவினார்கள். அதே சமயம் துக்கப்பட்டார்கள். மன்னர் இல்லாத, சரியான தலைமை இல்லாத, ஒரு நல்லப் படை எப்பொழுதும் கூனிக்குறுகி தான் நிற்கும். அந்த அவமானம் அவர்கள் முகத்தில் எழுதி ஒட்டி இருந்தது.

"இராஜேந்திரரை எப்படி பார்ப்பது, என்ன பேசுவது" என்று அவர்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

செழுங்கழுநீர் ஓடைப்பக்கம் போய் கை, கால்களை சுத்தம் செய்து கொண்டு வந்த அந்த அந்தணருக்கு பெரிய பரிசல்



[illegible] பட்டது.

[illegible]பூரின் எல்லையில் அந்த செழுங்கழுநீர் ஓடை இருந்தது. நீரும் அதிகம் இல்லாத போனாலும் அதை கடக்க பெண்களும், குழந்தைகளும் தடுமாறுவார்கள். அரிசி, பருப்பு போன்றவைகளை நனையாமல் எடுத்துப் போக ஒரு பரிசல் தேவையாக இருந்தது. [illegible] போட்டு செல்லாமல் ஆற்றின் இரண்டு கரைகளுக்கு நடுவே [illegible] அடித்து கயிறு கட்டி, பரிசலில் உட்கார்ந்து கயிறை பிடித்த வண்ணம் எதிர்கரைக்கு போய் விடுவார்கள். எதிர்கரையிலிருந்து இந்தப் பக்கம் வருவார்கள்.

அப்படி போவதற்கு காசு வசூலிக்க வேண்டும் என்று அவர் சொல்ல, வேளாளர்கள் முடியாது என்று மறுத்து விட்டார்கள். ஆனால் பொது சபையிலிருந்து அந்த பரிசல் ஓட்டிக்கு இத்தனை கலம் நெல்லும், இரண்டு முறை வேட்டியும் எடுத்துத் தர வேண்டுமென்று உத்தரவாகி இருந்தது.

தனக்கு நல்லபடி நெல் ஒதுக்கித் தந்தது வேளாளர்கள் என்பதால் அந்த பரிசல் ஓட்டி வேளாளர்களோடு அதிகம் பேசுவான். அந்தணர்கள் வந்தால் எங்கே என்று கூட கேட்க மாட்டான். இரவு பகல் எந்நேரமும் அவனுடைய சேவை தேவை என்பதால் அங்கேயே அவனுக்கு குடிசை போட்டுக் கொடுத்திருந்தார்கள்.

அரிசி போனால் நாலு கைப்பிடி அரிசி எடுத்துக் கொள்வான். பருப்பு போனால் ஒரு கைப்பிடி பருப்பு எடுத்துக் கொள்வான். காய்கறியும், வெற்றிலையும் அவனுக்கு இனாமாகக் கிடைத்தன. அதைத் தவிர அவனுடைய குடிசையை சுற்றி வேலி போட்டு உள்ளுக்குள் காய்கறிகள் பயிர் செய்து கொள்ளலாம் என்று வேளாளர்கள் யோசனை சொல்லி உதவியும் செய்தார்கள். வீட்டிற்கு வந்து சாண உரம் எடுத்துப் போகச் சொன்னார்கள். அதைத் தவிர வேளாளர்களிடமிருந்து பழந்துணிகள் கிடைத்தன. எதற்கும் கவலை இல்லாத சந்தோஷமான ஆளாக அவன் இருந்தான். அவனுடைய சந்தோஷம் அவருக்கு உறுத்தலாக இருந்தது.

அரை நிலவு வெளிச்சம் கொண்டிருந்த நேரத்தில் அவர் மறுபடியும் செழுங்கழுநீர் ஓடைப் பக்கம் வந்து பரிசல் இருக்கிறதா என்று பார்த்தார், அவன் வீட்டில் இருக்கிறானா என்று பார்த்தார். வீடு உட்பக்கம் பூட்டப்பட்டு இருந்தது. மெல்ல பரிசலில் ஏறி

உட்கார்ந்து கொண்டார். கயிறை அவிழ்த்து விட்டார். ஓடையில் உள்ள நீரின் இழுப்பால் பரிசல் ஓடையில் நகர்ந்து வந்து விரைவாக கிழக்கு நோக்கி போயிற்று.

கடற்கரை ஓரமாக இருந்த கபாலி கோவிலைச் சுற்றி செழுங்கழுநீர் ஓடை போகும். அங்கே கடற் மணற்பரப்பில் ஆழம் குறைவான இடத்தில் கடலோடு கலக்கும். நல்ல நீர் கடலோடு கலக்கின்ற இடத்தில் செம்படவர்கள் குடிசை போட்டு இருந்தார்கள். வங்கக் கடலை தொழிலுக்கும் செழுங்கழுநீர் ஓடையை குளிப்பதற்கும் குடிப்பதற்கும் வைத்துக் கொண்டார்கள். அந்த ஆற்று வண்டல் மண்ணை கொண்டு அவர்களும் தோட்டம் போட்டிருந்தார்கள்.

அவர் அந்த குடிசைகளுக்கு நடுவே இறங்கினார்.

"அடேய்" என்று குரல் கொடுத்தார்.

குடிசையில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் எழுந்தார்கள்.

"யார்?" என்று கேட்டார்கள்.

அவர் தன்னைப் பற்றி சொன்னார். தீப்பந்தங்கள் கொளுத்தப்பட்டன.

"இந்த நேரத்தில் என்ன?" அவர்கள் அவரை வியந்து வரவேற்றார்கள்.

"அரை நிலவில் ஓநாய்கள் வராது. பௌர்ணமியில் தான் வரும். இந்த நிலவில் ஓநாய்கள் உறங்கும். குளிர்வேறு அதிகமாக இருக்கிறது. இது தான் சரியான சமயம். ஓநாய்களால் அவஸ்தைப் படுவது நீங்கள் தான் அதிகம். இந்த ஆற்றை தாண்டி ஓநாய்கள் உங்கள் குடிசைகளுக்கு வந்து விடுகிறது என்று கேள்விப்பட்டேன். குழந்தைகளைக் கூட கடித்து விடுகிறது என்று சொன்னார்கள்"

"ஆமாம் அய்யன், நாய், பூனை எல்லாவற்றையும் கடித்து குதறி விடுகிறது. கன்றுக் குட்டிகளை குதறி விடுகிறது. மிகப்பெரிய தொல்லையாக இருக்கிறது" என்று சொல்ல,

"அதுதான் இன்று வேட்டை ஆடலாம். நாள் நன்றாக இருக்கிறது என்று சொன்னேன்"

"வேட்டையாடவா, நீங்கள் மட்டும் வந்திருக்கிறீர்கள்?"

"நானா வேட்டையாடப் போகிறேன். நீங்கள் தான்"

"எப்படி? எங்களிடம் பெரிய ஆயுதங்கள் இல்லையே?"



"பழந்துணிகள் இருந்தால் எடுத்து வாருங்கள். நான் எண்ணெய் கொண்டு வந்து இருக்கிறேன்" அவர் கசட்டு எண்ணெயை ஊற்றினார். புளித்த வாடை வீசியது. அவர்கள் முகம் சுளித்தார்கள்.

சட்டென்று பற்றிக் கொள்வதற்காக மதுக்கஷாயம் வைத்திருக்கிறேன். இதை எடுத்துக் கொண்டு வாருங்கள். துணியில் நனையுங்கள். கருவேல மரங்களின் மீது போட்டு நெருப்பு வைத்து விட்டு வந்துவிடுங்கள். பரிசல் கொண்டு வந்திருக்கிறேன். இந்தப் பரிசலை சேற்றில் வைத்து இரண்டு பேர் மூன்று பேர் மெல்லிய உருவத்தினர் கருவேலம் காட்டிற்குள் நுழைந்து நெருப்பு வைத்து விட்டால், அதிலேயே ஓநாய்கள் செத்து விடும். மீறி இந்தப் பக்கம் வருபவற்றை தடியால் அடித்து கொன்று விடலாம். வேட்டை நாய்களை வரவழைத்துக் கொள்ளுங்கள்" என்று கட்டளை இட்டார்.

"நாளை பார்த்துக் கொள்ளலாமா? பகல் பொழுதில்"

"வேண்டாம். இரவு நேரம் தான் சரியான விஷயம். இது தான் சரியான நேரம். அதனால் தான் நானே வந்திருக்கிறேன்" என்று சொல்ல, அவர்கள் ஆயத்தமானார்கள்.

பெரிய துடுப்புகள் எடுத்துக் கொண்டார்கள். வீசிப் பார்த்தார்கள். பெரிய மூங்கில் குச்சிகளில் துணிகளை சுற்றினார்கள். அதில் எண்ணெய் வார்த்தார்கள். பரிசலை தலையில் கவிழ்த்துக் கொண்டு கடல் மணலில் நடந்தார்கள். வெகுதூரம் உள்ள கூவம் நதிக்கரையில் நின்றார்கள். சேற்றின் மீது பரிசலை வைத்தார்கள். ஒருவன் ஏறி உட்கார்ந்தான். பரிசல் நன்றாக இருந்தது. இன்னொருவன் ஏறி உட்கார்ந்தான். பரிசல் லேசாக அமிழ்ந்தது. இன்னொருவன் ஏறி உட்கார்ந்தான். பரிசல் அதிகம் அமிழவில்லை.

"கொம்பு போட்டுத் தள்ளு" என்று சொல்ல, நீண்ட குச்சி எடுத்து ஊன்றினார்கள். ஆனால் நீண்ட குச்சிக்கு கீழாக சேறு இருந்தது. இரண்டு குச்சிகளாக இணைத்தார்கள். எண்ணெயும் துணியும் எடுத்துக் கொண்டு நெட்டித் தள்ளிக் கொண்டார்கள். மற்றவர் எல்லோரும் வரிசையாக ஓநாய்கள் உள்ளே நுழைந்தால் அடித்துக் கொல்லுவதற்கு தயாராக இருந்தார்கள். பெண்களும் சிலபேர் கையில் இரும்பு ஆயுதங்களுடன் வந்தார்கள். போகும்போதே எண்ணெய் துணியை கருவேல மரத்தில் போட்டு விட்டு எதிர்கரைக்குப் போய் அங்கே துணியை பற்ற வைத்தார்கள். துணி திகு திகு

என்று எரிந்தது. ஓநாய்கள் ஊளையிட்டன. வேகமாக இந்தப் பக்கம் வந்தார்கள்.

ஆனால் காற்றினுடைய வேகம் வடக்கிலிருந்து தெற்காக இருந்தது. எனவே நெருப்பு எகிறி அடுத்த துணி மீது பட்டது. அடுத்த துணி மீது பட்டது. அடுத்த துணி மீது பட்டது. இவர்கள் வருவதற்குள் ஆறு, ஏழு கருவேலமரங்கள் முழு வேகத்தில் எரிந்தன. இவர்கள் விலகி நின்று வந்தாலும், அவர்கள் மீது நெருப்பு விழுந்தன. அவர்கள் தள்ளாடினார்கள். பயந்தார்கள். பரிசல் கவிழ்ந்தது. இரண்டு கோல் ஆழத்தில் நீச்சல் அடிக்கவும் முடியாமல் மேலே மிதக்கவும் முடியாமல் அவஸ்தைப்பட்டார்கள். மூழ்கினார்கள்.

ஓநாய்கள் நெருப்பு எரிவது பார்த்து ஓடி வந்தன. எங்கெல்லாம் கற்கள் உண்டோ அங்கெல்லாம் முகர்ந்து பார்த்து எகிறி கரைக்கு வந்தன. அவர்கள் தடுப்பால் அடித்தார்கள். மூங்கிலால் விளாசினார்கள். அரிவாளால் வெட்டினார்கள். ஒன்றின் பின் ஒன்றாய் வந்த ஓநாய்களை அடித்து துவைத்தார்கள். தூக்கி நெருப்பில் போட்டார்கள். மூழ்கியவர்களை யாரும் கவனிக்கவில்லை. இவர்களை கவனித்த ஒரு பெண்மணி கூவினாள். ஆனால் எதுவும் செய்வதற்கில்லை.

அவர்களுக்கு நஷ்டஈடாக ஆறு பொன் கழஞ்சுகள் கொடுத்தார். "நெருப்பிற்கு பயப்படாமல் வந்திருக்க வேண்டும். எரி நின்று எதற்காக ஆடினார்கள். அவர்களே கவிழ்ந்து போனார்கள்" என்றெல்லாம் சொன்னார்.

அவர்கள் பதில் சொல்ல முடியாமல் தலை குனிந்து கொண்டார்கள். அவர் பேசியது யாருக்கும் புரியவில்லை. மிருந் துக்கம் என்பது மட்டுமே தெரிந்தது.

வெகு சில ஓநாய்களே எஞ்சி இருந்தன. அவை ஒன்றாகக் கூடி எரிந்து போன காட்டையே பார்த்துக் கொண்டிருந்தன. பிறகு வடக்கு நோக்கி கடற்கரை ஓரமாகவே நண்டுகளை முகர்ந்த வண்ணம் தாவித்தாவி ஓடின. ஓநாய்கள் தொல்லை இனிமேல் இல்லை என்பதாக மக்கள் பேசிக் கொண்டார்கள்.

மறுநாள் விடியலில் தான் செய்த மிகப் பெரிய தீரச் செயலை அவர் முழக்கமாக அறிவித்தார்.

"என்னை அடுத்த அந்தணப் படைத்தளபதி திருவொற்றியூ



[illegible] விட்டான். அவன் ஒரு நாளும் திரும்பி வரப் போவதில்லை. [illegible] அடுத்த பாவம் சும்மா விடாது. இங்கிருக்கின்ற வேளாளர்கள் [illegible] அவனுடைய கைக்கூலிகளாக இருக்கிறார்கள். காட்டிக் கொடுக்கிறார்கள். கடைசியில் ஓநாய்களை அழித்தது யார். நான் [illegible] நான் ஒருவன் தானே" என்று வீரமாக முழக்கமிட்டார்.

ஓநாய்கள் இனிமேல் வராது என்பது நிம்மதியான விஷயமாக இருந்தாலும் அவர் அதிகம் பேசுகிறார் என்று எல்லோருக்கும் தெரிந்தது. இந்த நேரத்தில் பதில் சொல்லக் கூடாது என்று அவர்கள் அமைதியாக இருந்தார்கள்.

"கீழைச் சாளுக்கியத்தில் ஆளே இல்லையா. என்ன தேசமடா இது இப்படி சுடுகாடு போல் காட்சி அளிக்கிறது"

"அரசன் இல்லையென்றால் ஒரு தேசம் எவ்வளவு அவலமான நிலைக்கு வரும் பார்த்துக் கொள்ளுங்கள்" படைத்தளபதிகள் சொல்ல ஒட்டர்கள் வியப்போடு வேங்கியை பார்த்தபடி குதிரையில் வலம் வந்தார்கள்.

"ஜெயசிம்மன் வடமேற்கே மண்ணைக்கலகம் நோக்கி போய் விட்டான். விஷ்ணுவர்தன விஜயாதித்தன் வடக்கே எங்கோ ஒளிந்து கொண்டிருக்கிறான். ஒட்ட தேசத்திற்கு வருவானா இல்லை தாண்டி வங்காளத்திற்கு போய் விடுவானா என்று தெரியவில்லை"

"மிக வேகமாக ஓடினான் என்றார்கள்"

"அப்படியானால் வங்காளதேசம் போய் தான் நிற்பான். நம்மீதும் அவனுக்கு நம்பிக்கை இல்லை"

"இப்பொழுது என்ன செய்யலாம்?"

"ஒரு இருநூறு குதிரை வீரர்கள் மெல்ல தயங்கி தயங்கி தெற்கு நோக்கி வந்தார்கள். கீழைச் சாளுக்கிய படையை கடல் உள்ளுக்குள் எந்த புலிக்காடு அருகே சந்தித்தார்கள். கீழைச் சாளுக்கியப் படை பல கிராம மக்களிடையே பொன் கழஞ்சு கொடுத்தும், வெறுமே கை ஏந்தியும் உணவு வாங்கி உட் கொண்டிருந்தது. என்னது செய்வது என்று தெரியாமல் திகைத்துப் போய் நின்றது. இராஜேந்திர சோழர் வருவார் அப்பொழுது விடியும் என்று காத்திருந்தது. ஆனால் இராஜேந்திர சோழர் திருவொற்றியூர் வரவில்லை. வந்தாலும் இந்தப்

பக்கம் வரப் போவதில்லை. அவர் வடமேற்காக நகரப் போகிறார் என்றெல்லாம் செய்தி வந்தது.

கீழைச் சாளுக்கியத்தினரை புறக்கணித்து விட்டு நூறு பேர் கொண்ட ஒரு ஒட்டர் படை இன்னும் தெற்கு நோக்கி வந்தது. திருவொற்றியூர் நகருக்குள் போகாமல் அலைகள் மோதும் கடற்கரை ஓரமாகவே தெற்கே வர வேண்டும் என்று தீர்மானித்தது. திருவொற்றியூரில் குறைந்தபட்சம் நாலாயிரம், ஐந்தாயிரம் வீரர்களாவது இருப்பார்கள் என்று சொல்லப் பட்டதால் பூனையை போல அவர்கள் நடு இரவில் திருவொற்றியூர் கடற்கரையை கடந்தார்கள். எதிரே ஓநாய்கள் ஓடி வந்தன. வில் வளைத்து அம்பு தொடுத்து அவைகளை கொன்றார்கள். குற்றுயிரும், குலை உயிருமாக இருந்த ஒரு ஓநாயின் முதுகில் ஒருவன் ஈட்டியால் குத்தினான். குத்தி எடுத்து கடலில் தூக்கிப் போட்டான்.

"இராஜேந்திர சோழனையும் இப்படி தூக்கிப் போட வேண்டும்" என்று உரக்கச் சொன்னான். ஒட்டர்கள் சிரித்தார்கள்.

கடற்கரையில் மேலைச் சாளுக்கிய வீரர்கள் வந்ததற்கான பழைய கொடிகள் இருந்தன. அவர்கள் இடுப்பிலும் மேலை சாளுக்கிய கொடி இருந்தது. அதை தங்கள் ஈட்டி மேல் பறக்க விட்டார்கள். அல்லிக்கேணி கரை ஓரம் வந்து நின்றார்கள்.

என்ன செய்வது என்று திகைத்தார்கள். தொலைவில் பரிசல் இருப்பது தெரிந்தது. தோளில் உள்ள உடும்பில் கயிறு கட்டி சுழற்றி வேகமாக அந்த கவிழ்ந்து கிடந்த பரிசலை நோக்கி வீசினான். உடும்பு பொத்தென்று அந்த பரிசல் மீது விழுந்து இறுக்கப் பற்றிக் கொண்டது. மெல்ல கவனமாக இழுத்தார்கள். பரிசல் வந்தது. தட்டி சரி செய்தார்கள். மல்லாக்க போட்டார்கள். ஆற்றுக்கு குறுக்கும் நெடுக்குமாக கயிறு கட்டிக் கொண்டார்கள். எரிந்து போன கருவேல மர கிளைகளை பற்றியபடி தாண்டி மறுகரைக்கு போனார்கள். விடிவதற்கு முன் நூறு வீரர்களும் அக்கரைத் தாண்டி திருவல்லிக் கேணி கடற்கரையில் புகுந்தார்கள். வெற்றிலையை மென்றார்கள். வெள்ளரியை உடைத்து தின்றார்கள். மறித்த காவற்காரனை வெட்டிப் போட்டார்கள். குதிரை ஏறினார்கள். குடிப்பதற்காகவும் குளிப்பதற்காகவும் செழுங்கழுநீர் ஓடை வந்தார்கள். இறங்கி குளித்தார்கள். குதிரை ஏறி செழுங்கழுநீர் ஓடை தாண்டினார்கள்.



செம்படவர்கள் எழுந்து நின்று யாரென்று பார்க்க, வேல்கம்பால் குத்தி விடுவேன் என்று மிரட்டினார்கள். செம்படவர்கள் பயந்து ஒதுங்கி [illegible] செழுங்கழுநீர் ஓடையின் வட கரையாகவே நகர்ந்தார்கள்.

தாமரைச் செல்வி திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். [illegible] யாரோ தொட சிலையாக மாறுகிறாள். அந்த சிலையை தூக்கி மக்கள் அழுகிறார்கள் என்று ஒரு கனவு வந்தது.

என்ன கனவு இது. வியந்தாள்.

காஞ்சிபுரம் நோக்கி போயிருக்கிறாராம். இன்னும் அரிசி வேண்டுமாம். பருப்பும், காராமணியும் வேண்டுமாம், நல்ல பாதை இருப்பதால் மாட்டு வண்டிகள் விரைவாக வந்து விடுமாம். மயிலை வந்து திருவொற்றியூரில் இராஜேந்திர சோழர் ஒரு வாரத்திற்கு மேல் தங்குவாராம். எனவே இல்லையென்று சொல்லாமல் உணவு தர வேண்டும் என்பதால் கூடுதலான அரிசிக்கு நாலாபுறமும் [illegible] கொண்டிருந்தாள். மயிலையிலும், திருவல்லிக்கேணியிலும் அரிசி வாங்கியாகி விட்டது. ஆகவே மேற்கொண்டு வேண்டும் என்பதற்காக செழுங்கழுநீர் பேட்டைக்கும் அப்படியே காஞ்சிபுரத்திற்கும் போய் அரிசி வண்டிகள் வர ஏற்பாடு செய்திருக்கிறாள்.

"அம்மா, அந்த அந்தணர் பீற்றிக் கொள்கிறார்"

"என்ன?"

"அவர் ஒருவராகவே ஆயிரம் ஓநாய்களை அழித்து விட்டாராம்"

"எங்கிருந்த ஓநாய்களை"

"கூவம் நதிக்கரை சேற்றிலே இருந்த ஓநாய்களை அவர் அழித்து விட்டார் என்று சொன்னார்"

"அவைகளை அழித்து விடுவது நல்லதா. அவை தானே நமக்கு பாதுகாப்பு"

"செம்படவர்கள் வந்து அழுதார்களாம், அவரிடம் வந்து [illegible] சொன்னார்களாம். எப்படியாவது காப்பாற்றுங்கள் என்று [illegible] விட்டார்களாம். அவர்களின் துணை கொண்டே அழித்து விட்டாராம்"

"எப்படி அழிக்க முடியும்?"

"நெருப்பு வைத்து விட்டாராம்"

"அடப்பாவி, முட்டாள் தனமல்லவா அது"

"ஆமாம். மற்ற அந்தணர்களும் அதைத்தான் சொல்கிறார்… கடப்பது எளிதாகி விடுமே. பரிசலில் அல்லது ஓடத்தில் அ… சேற்றை தாண்டி விடலாமே. மரப்பலகை போட்டுக் கொண்… வந்து விடலாமே. என்றெல்லாம் சொல்கிறார்கள். அவர்கள் சொல்… அவருக்கு புரியவில்லை. ஓநாய்களை கொன்று விட்டேன் என்ப… மட்டும் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்கிறார். குதி… ஏறி போய் வரலாம் என்றால் இந்த நேரத்தில் மயிலாப்பூரில் … வீரர் கூட இல்லை. வணிக குதிரைகள் தான் இருக்கின்ற… வணிகர்கள் போய் பார்த்து விட்டு வர போயிருக்கிறார்கள்" என… பதட்டத்தோடு சொன்னான்.

இந்த நேரத்தில் சீராளன் இல்லையே என்று அ… கவலைப்பட்டாள். என்ன செய்வது என்று திகைத்தாள். ஆனா… ஏதாவது செய்தாக வேண்டும். யாரைக் கேட்பது. அவள் உட… வேளாளர்களை ஒன்று கூட்டினாள். வேளாளர்கள் ஒன்று கூ… போது வணிகர்கள் தலைதெறிக்க ஓடி வந்தார்கள்.

"மிகப்பெரிய மேலைச் சாளுக்கியப் படை வருகிறது. மூ… குதிரையில் வில்லோடும், அம்போடும், ஈட்டிகளோடும் ஆட்… வருகிறார்கள்" என்று சொல்ல, வேளாளர்கள் ஆயுதங்களை உரு… கொண்டார்கள்.

"ஓடு, காஞ்சிபுரத்திற்கு ஓடு. அவரிடம் செய்தி செ… திருவொற்றியூருக்கு ஓடு. அங்கே ஏதேனும் படை இருந்… இந்தப் பக்கம் வரச்சொல்" என்று அவள் ஆட்களை பிரித்து அனு… னாள். ஒட்ட வீரர்கள் மேலைச் சாளுக்கிய கொடியோடு உள்ளே நு… தார்கள். கண்ணுக்கு தென்பட்டதை எல்லாம் அடித்து நொறு… னார்கள். ஆயுதம் எடுத்தவர்களை அம்பால் அடித்து வீழ்த்தினார்… விழுந்து சுருண்டவர்களை ஈட்டியால் குத்தி கொலை செய்தார்… முன்னேறினார்கள். வீட்டு வாசலில் நின்றார்கள். காவல்காரர்க… தலைமுடி பிடித்து இழுத்து ஓங்கி அடித்தார்கள்.

"எங்கே? இந்த மயிலாப்பூரின் தலைவன் எங்கே?" எ… கேட்டார்கள். காஞ்சிபுரம் போயிருப்பதாக பதில் கிடைத்தது.

"கீழைச் சாளுக்கியம் தான் வெறிச்சோடிக் கிடக்கிறது என்…



…தொண்டை நாடும் வெறிச்சோடி கிடக்கிறது" என்று …பேசிக் கொண்டார்கள்.

"…தலைவன் கூட இல்லாது இங்கு யார் ஆட்சி செய்வது?"

"…தலைவி இருக்கிறாள். அவள் உத்தரவிட்டிருக்கிறாள். வெகு …திருவொற்றியூரிலிருந்து படைகள் வரும். ஓடிப்போய் …கள்" அந்த காவல்காரன் சொல்ல, அவன் தலை …பட்டது. அவர்கள் கோட்டை வாயில் இரத்தச் சேறாகியது.

…களுக்கு கொலை செய்வது மிக எளிதாக இருந்தது. …ம் விட்டு விடுங்கள் என்று சொன்னவரைக் கூட அவர்கள் …த்து வைத்து அடித்தார்கள். அடித்தபிறகு கொலை செய்தார்கள்.

"எதற்கு அடிக்கிறீர்கள், எதற்கு கொலை செய்கிறீர்கள்?" என்று …கள் கேட்டதற்கு, "வலிக்க வேண்டும் என்று அடிக்கிறோம், …க்க வேண்டும் என்று கொலை செய்கிறோம்" என்று மேலைச் …சாளுக்கிய மொழியில் பேசினார்கள்.

"தலைவி இருக்கிறாளாம். எனக்கு அந்த தலைவியை பார்க்க …வேண்டும் போல் இருக்கிறது" ஒருவன் மார்பை வேகமாக சொறிந்து …கொண்டான். அது காம விகாரமான காட்சியாக இருந்தது. வீட்டைச் …சுற்றியும் சில குதிரைகள் வந்தன. பதுங்கி பதுங்கி ஒருவன் முன்னே …வந்தான்.

அவள் கிணற்று விளிம்பிலேயே நின்று கொண்டிருந்தாள். …மெல்லத் திரும்பி வந்தாள்.

"கட்டழகி, பெரும் கட்டழகி அற்புதமாக இருக்கிறாள். …உனக்குத் தான் பொருத்தமாக இருக்கும்" என்று …ஏற்றினான். தலைவன் தொடை தட்டிக் கொண்டான். …வளையமாக முன்னேறினார்கள். அவர்களை பெண்கள் …தார்கள். அடிக்கப்பட்டார்கள். தலைமுடியை பிடித்து சுவரோடு …ப்பட்டார்கள். அவள் இன்னும் முன் தொடர்ந்தாள்.

அவள் கிணற்று கைப்பிடி சுவற்றில் ஏறி நின்றாள். அவளுக்கு …கிணறு பற்றி தெரியும். பல முறை அந்த கிணற்றில் …இறங்கியிருக்கிறாள். குதித்து உறை என்று வளையமாக, வலப்பக்கம் …பட்டிருக்கும். அதற்குள் நுழைந்தால் அடுத்த கிணறுக்கு …விடலாம். கழுத்தளவு தான் தண்ணீர் இருக்கும். தலை

வெளியே நீட்டியபடி சுவாசித்து போய் விடலாம். மழைக் காலங்களி
தான் அந்த உறை மூழ்கும் படி இருக்கும். அப்படி இருக்
பொழுதும் அவள் நீச்சலடித்து போயிருக்கிறாள். என்ன செய்
என்று யோசித்தாள். ஆட்கள் குதிரையில் ஏறி தடதடவெ
பாய்ந்து வர அவள் 'தடேர்' என்று உள்ளுக்குள் குதித்
உறைக்குள் பதுங்கினாள். கழுத்தளவு நீரில் நின்று கொண்டா

"போழகி என்று சொல்கிறார்களே, நீரில் நனைந்த போழகில
பார்க்க வேண்டுமே" அந்த தலைவனே கிணற்றில் இறங்கினா
உறை இருப்பதை கண்டுபிடித்தான்.

"அடியேய் இங்கு ஒளிந்து கொண்டிருக்கிறாயா, வா. வெளி
வந்து விடு. உனக்கு மன்னிப்பு தருகிறேன்" என்று அவன் உர
சொன்னான்.

அவள் வாய் முழுவதும் நீர் நிரப்பி 'தூ' என்று அவன் முகத்
துப்பினாள். களிமண்ணை பிய்த்து முகத்தில் அடித்தாள். அவ
கண்கள் காயப்பட்டன. கோபமானான். மேலே ஏறி வந்தா
கொழுத்த பிராணி தான், ஆனால் இது நமக்கு அடங்காது என
புரிந்து கொண்டான்.

"அடேய், எல்லார் வீட்டிலிருந்தும் அம்மியும் உரலும், கற்க
கொண்டு வாருங்கள். பாறைக்கற்களை கொண்டு வந்து உள்
போடுங்கள். தண்ணீர் மேலே ஏறட்டும். மெல்ல மெல்ல சாகட்டு

அவன் இரண்டு கிணறுகளிலும் தடேர் தடேர் எ
கருங்கற்களைப் போட தண்ணீர் மேலே ஏறியது. அவள் உ
கிணற்றின் நடுவில் நின்று கொண்டாள்.

மேலே நிலம், கீழே தண்ணீர் கழுத்து, முகவாய், உத
மூக்குநுனி என்று வந்தது. அவள் தலையை உயர்த்தி நிமிர்ந்
கொண்டாள். மிகச் சிறிதளவே இடைவெளி இருந்தது. மே
கற்கள் போடப்பட்டன. அவள் தண்ணீரை விழுங்கினாள். மூக்
இழுத்தாள். நுரையீரலில் தண்ணீர் நிரம்பியது. மூச்சு திணறி
கை, கால்கள் துடித்தன. இறுக்க அவள் களிமண்ணை பற்
கொண்டாள். மெல்ல அந்த உச்சிக் களிமண்ணில் 'சீராளா' எ
எழுதினாள். உயிர் ஒன்று கூடி நெஞ்சில் நின்றது. வலித்
கண்கள் இருண்டன. மெல்ல அவள் உயிர் பிரிந்தது. கற்பின் க
தண்ணீரில் மிதந்தது.



அவர்கள் ஓய்ந்து போனார்கள். திருவொற்றியூரிலிருந்து ஒரு
[illegible] கிளம்பி விட்டது என்று தெரிந்து மறுபடியும் மயிலையை
[illegible] நகர்ந்தார்கள். வேண்டுமென்ற பொருள்களை கொள்ளை
[illegible] கொண்டார்கள். தனித்த குதிரையில் கட்டிக் கொண்டார்கள்.
[illegible] ஓரமாகவே கூவம் தாண்டினார்கள். கட்டுமரத்தின் மீது
[illegible] ஏற்றி நிற்க வைத்து மறுபக்கம் போய் இறங்கினார்கள்.
[illegible] அடித்த பொருள்களோடு வேகமாக வெளியேறினார்கள்.
[illegible] போது கவனமாக மேலைச் சாளுக்கிய கொடியை அறுத்து
[illegible] வீசிவிட்டு ஓடினார்கள்.

கீழைச் சாளுக்கிய வீரர்களுக்கு எங்கிருந்து வந்தார்கள்.
எங்கே போனார்கள் என்று தெரியவில்லை. ஆனால் குதிரைகள்
[illegible] பலவேறு மூட்டைகள் இருப்பதை பார்த்து விட்டு கொள்ளை
[illegible] பட்டிருக்கின்றது என்பதை புரிந்து கொண்டார்கள்.

மயிலாப்பூர் அவள் வீட்டு கொல்லைப் பக்கம் ஒன்று திரண்டது.
[illegible] கயிறு கட்டி கிணற்றுக்குள் இறங்கியது. உறைக்குள் இருந்த
[illegible] எட்டிப் பார்த்தது. மெல்ல புடவை மிதப்பது தெரிந்தது
[illegible] இழுத்தது. அவள் பிணமாக உறையிலிருந்து வெளியே
[illegible] கயிறு கட்டி மேலே தூக்கினார்கள். வயிறு நீரால் நிரம்பி
[illegible] முதல் சிகிச்சை செய்து பார்த்தார்கள். இருதயத் துடிப்பு
[illegible] நின்று போயிருந்தது. வேறு வழியில்லை. அவர்கள்
அந்தக் கொல்லைப்புறமே அவளை படுக்க வைத்து நெற்றியில்
பெரிய குங்குமம் இட்டார்கள்.

அவள் தன் உடலுக்கு அருகே நின்று கொண்டாள். இங்கு தான்
இறந்து போனேன். சீராளா, இங்கு தான் இறந்து போனேன். இந்த
இடம் தான் நான் மரணமடைந்த இடம். சீராளா, உனக்காக நான்
இங்கே உயிர் தியாகம் செய்தேன். என்னை கைப்பற்றினால், என்னை
தொட்டால் அது உனக்கு இழுக்கு, உனக்கு இழுக்கு என்றால்
தொண்டை தேசத்திற்கு இழுக்கு. தொண்டை தேசத்திற்கு இழுக்கு
என்றால் சோழ தேசத்திற்கு இழுக்கு. இராஜேந்திர சோழருக்கு
இழுக்கு. எனவே யாருக்கும் இழுக்கு ஏற்படாமல் தானே மெல்ல
மெல்ல மெல்ல ஒவ்வொரு விரற்கடையாய் தண்ணீர்
மேலேறி வர அத்தனையும் அனுபவித்து, இறக்கப் போகிறோம்
என்று தெரிந்து இறந்து போனேன். சீராளா, போய் வருகிறேன்.

இந்த மயிலை, திருவல்லிக்கேணியை நான் காப்பேன். உனக்
நான் காத்தேன். தொடர்ந்து காவல் செய்வேன். இந்த மயிலை, திரு
லிக்கேணி என்னுடைய பாதுகாப்பில் என்றும் இருக்கும். பூமி உ
வரை இருக்கும் என்று அவள் உடல் அருகே நின்று சத்
செய்தாள்.

அந்த சத்தியம் யாருக்கும் தெரியவில்லை. அவனுக்கு ம
கனவாக ஏதோ வந்தது. மனைவியின் உடல் நிலை சரியில்லை எ
சொல்லப்பட்டது. அவன் வேகமாக திரும்பி வந்தான். அருகே வ
நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதான். அவள் அவன் தலைமை
கோதினாள். நெற்றியில் முத்தமிட்டாள். ஒருமுறை ஒருமுறையா
கூடியிருக்கலாம். ஒருமுறைக் கூட என்னை அவிழ்த்து பா
வில்லை. என்னை அணைத்துக் கொள்ளவில்லை. வாயார முத்த
வில்லை. எப்பொழுதும் சோழம் சோழம் என்று இருந்து விட்டாய்.
னால் என்ன? என் புருஷனுக்கு வேலை முக்கியம். எனக்கு என்
ஷன் முக்கியம். என் புருஷனுக்காக நான் மயிலை, திருவல்
கேணியை நிச்சயம் காப்பேன் என்று மறுபடியும் அவள் மு
சபதம் செய்தாள். அது அவனுக்கு தெரியவில்லை.

அவள் அந்த கிணற்றங்கரையிலேயே தகனம் செய்யப்பட்ட
அஸ்திக்கலசம் எடுக்கப்பட்டது. அந்த கிணற்று கரையிலே
அவள் அஸ்திகலசம் புதைக்கப்பட்டது. அதன் மீது படம் எடு
ஆடுகின்ற நாகம் போல ஒரு சிலை நிறுவப்பட்டது.

"அது அவள் உட்கார்ந்த இடமடா, கிழக்கு பார்த்தல்ல
கோவில் இருக்க வேண்டும். வடக்கு பார்த்து வைக்கிறாயே"

"இல்லை. அவள் வடக்கு பார்த்து தானே இறந்தாள்"

"சரி, வடக்கு பார்த்து ஒன்று வை, கிழக்கு பார்த்து ஒன்று வை
கிழக்கே பெண் என்ற விஷயத்தை குறிப்பது போல கல் செது
அந்த கல்லுக்கு வெள்ளியில் தாலி கட்டி பூமியில் அழுத்தம
பதித்தார்கள். அதற்கு மேலே கூரை வேய்ந்தார்கள். சுற்றிலும் த
போட்டார்கள்.

"எனக்கு இந்த இடம் போதும். இந்த எளிமை போதும். எனக்கு மே
விமானம் வேண்டாம். நான் வெளியே போய் மயிலையை காப்பாற்
திருவல்லிக்கேணியை பாதுகாக்க அடிக்கடி போக வேண்டியிருக்கு
விமானம் இருந்தால் வெளியே போக முடியாது. இந்த கூ



து நான் போய் வர இதுதான் சௌகரியம்" அவள் கனவில்
பலபேருக்கு அறிவித்தாள். அவர்கள் எல்லோரும்
கூட இவளுக்கு கோவில் இதுவே என்று தீர்மானித்தார்கள்.

ச்செல்வி என்ற பெயருக்கு பதில் முண்டகக் கண்ணி என
அழைத்தார்கள். அவளை குலதெய்வமாக அந்தப் பகுதி மக்கள் கொண்
ஆரம்பித்தார்கள். கற்புக்கரசியுடைய அஸ்தி புதைக்கப்பட்ட
புனிதமான இடம். அவள் காவல் காப்பது என்பது சத்தியம்.



# 33

திருமயிலையிலிருந்து திருக்கடல் மல்லை வரை சோழ
ர்ந்து வீரர்கள் பரவி இருந்தார்கள். மருந்தீஸ்வரர் கோவிலில்
படை ஓய்வெடுத்துக் கொண்டது. திருமயிலையில்
ராஜேந்திர சோழருடைய மெய்க் காவல் படையும், தேர்படையும்
வந்தன. திருவிடந்தை நித்யபெருமாள் கோவிலிலும்,
திருவிடந்தை கிராமத்திலும் யானைகள் நின்றிருந்தன. கடலைக்
கண்டு மிரண்ட யானைகள் பிறகு இறங்கி கும்மாளம் போட்டன.

ஒரு வயல் முழுவதும் இருந்த கரும்புகளை யானைகளுக்கென்று
திருவிடந்தை கிராம மக்கள் கொடுத்தார்கள். ஒவ்வொரு சதய
சத்திரத்தின் போதும் மாமன்னர் இராஜராஜருக்கு அவர்கள் விழா
டுப்பதை இராஜேந்திரருக்கு சுட்டிக் காட்டினார்கள். இராஜேந்திரர்
பங்காக இருபத்தைந்து கழஞ்சு பொன் கொடுக்க, ஆரவாரம்
செய்தார்கள்.

திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோவிலில் வீரமாதேவிக்காக
வேண்டிக் கொண்டார். அரிசியும், பருப்பும் கொடுத்தார். நித்யபடி

அமுதுக்கு நிலங்களை வாங்கி கோவிலுக்கு எழுதி வைத்தார். அவ
கல்வெட்டிலும் பதித்துக் கொள்ளச் சொன்னார். திருமயிலைக்
வந்து நின்றார்.

"இது கோட்டையா, கோவிலா?" அலை கடல் சிறியடிக்கின்
கோவிலைப் பார்த்து அதிசயித்தார். உள்ளுக்குள்ளே போய் கபா
அருகே மனமுருகி நின்றார்.

"ஏன் திருமயிலையில் காபாலிகம்" விளக்கம் கேட்டார்.

"திருமயிலை வணிகர்கள் நிறைந்த இடம். தரை வ
வணிகர்களே அதிகம். அந்த வணிகர்கள் தாங்கள் காட்டு
பகுதிகளுக்கும், வெவ்வேறு ஊர்களுக்கும் பயணம் செய்யும் போ
கண்ணடி படாமல் இருக்கவும், பில்லி, சூன்ய வகைகள் தாக்காம
இருக்கவும் காபாலிகர்கள் அணுகுவார்கள். அவர்கள் கண்ணே
கழிப்பதில் வல்லவர்கள். அதே நேரம் பில்லி, சூன்யத்திலிருந்
காப்பாற்றவும் மந்திரங்கள் செய்வார்கள். ஆனால் அதெல்லா
பழங்காலம். இப்பொழுது ஆகம விதியின்படி தான் கோவில் நடந்
கொண்டிருக்கிறது. காபாலிகர்கள் வடக்கே போய் விட்டார்கள்
என்று பதில் சொல்லப்பட்டது.

அங்கம்பூம்பாவை கதை சொல்லப்பட்டது.

சிவநேசச் செட்டியார் என்பவர் மயிலையின் எல்லையி
வாழ்ந்து வர அவருடைய மகள் திருஞான சம்பந்தரையே நினைத்து
கொண்டு அவர் பதிகங்களையே பாடிக் கொண்டிருக்க, அவரையே
திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று விரும்ப, ஒருநா
பாம்பு கடித்து இறந்தாள். சிவநேச செட்டியார் அவளை தகன
செய்து அஸ்தியை வைத்தார். அந்தப் பக்கம் திருஞான சம்பந்
வரும்பொழுது தன் கதையை சொல்லி அழுதார்.

"இதற்காக அழுவானேன். உங்கள் மகளை நான் திருப்பி
கொண்டு வந்து தருகிறேன்" என்று பதிகம் பாடி பூம்பாவையை
அஸ்திக் கலசத்திலிருந்து ஞான சம்பந்தம் உயிர்ப்பித்தார். எப்ப
இறந்தாரோ அதே போல அதே ஆடை அணிகலன்களுட
பூம்பாவை எழுந்து வந்தாள்.

என் மகளை திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று ஞா
சம்பந்தரிடம் சிவநேசச் செட்டியார் வேண்ட, "அவளை மறுபடிய
உருவாக்கியது நான். எனவே அவளுக்கு தகப்பன் போல் ஆவே



நான் இங்கு சிவத்தொண்டு செய்து வரட்டும்" என்று சொல்ல,
கன்னிமாடம் அமைத்து கடைசி வரை சிவத்தொண்டு செய்து
கொண்டிருந்தாள் அங்கம்பூம்பாவை" என்று கதை சொல்லப்பட்டது.

"இவ்வளவு அற்புதமான மகான்கள் நான் வாழும் காலத்தில்
இல்லையே. இருக்கிறார்களா, நமக்குத் தான் தெரியவில்லையா"
என்று வியப்போடு வந்தியத் தேவரை கேட்க, வந்தியத் தேவரும்
ஆமாம் என்று தலை அசைத்தார்.

அருண்மொழிப் பட்டன் ஏதோ சொல்ல வந்து சட்டென்று
நிறுத்திக் கொண்டான். அதை இராஜேந்திரர் கவனித்து விட்டார்.

"சொல் அருண்மொழி. என்ன விஷயம் சொல்ல வந்தாய்"

"ஒரு உயிரை பிழைக்க வைத்தவர்கள் இருக்கிறார்களா
எனக்குத் தெரியாது. ஆனால் தேசத்திற்காக உயிர் கொடுத்தவர்கள்
பலர் உண்டு. அதில் விநோதமாக உயிர் கொடுத்தவர்கள்
உண்டு. மறவர்கள் மட்டுமே ஒரு தேசத்தை காக்கிறார்கள் என்று
நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். இல்லை. நல்ல ஜாதிப்
பெண்களும், உத்தம ஸ்திரிகளும் நமது எல்லையை காக்கிறார்கள்.
அப்படி ஒரு சம்பவம் இங்கு நிகழ்ந்திருக்கிறது" சொல்லும் போது
அருண்மொழியின் கண்கள் கலங்கின.

"என்ன விஷயம் அருண்மொழி" என்று கேட்க, தாமரைச்
செல்வியின் மரணம் சொல்லப்பட்டது.

"மேலைச் சாளுக்கியர் வந்து கொன்றார்களா? நூறு வீரர்கள்
வந்து கொள்ளை அடித்தார்களா, என்ன இது? என்ன நினைத்துக்
கொண்டிருக்கிறார்கள் மனதில். அப்படி சட்டென்று மயிலைக்குள்
வரமுடியாதே. வருவதென்றால் பாடி வழியாக அல்லவா வர
வேண்டும். திருவொற்றியூர் தாண்டியல்லவா வரவேண்டும்"

"இல்லை. இந்தப் பக்கம் ஒரு தவறு நடந்து விட்டது"

"என்ன?"

"சேறாக இருந்த சதுப்பு நிலத்தை ஒநாய்களை கொல்ல
வேண்டும் என்று ஒரு அந்தணர் தீயிட்டு கொளுத்தி விட பரிசலை
அங்கேயே விட்டு விட அந்த பரிசலில் ஏறி வீரர்கள் உள்ளே வந்து
விட்டார்கள்.

"என்ன நடந்தது? விவரமாகச் சொல்"

அவன் வேகமாக நடந்தவற்றை சுருக்கமாகச் சொன்னான்.

"முதலில் அந்த பெண்ணுடைய நடுகல்லை போய் பார்க்கலாம்" அவர் குதிரையை முன்னே செலுத்த மெய்க்காவல் வீரர்கள் சுற்றிக் கொண்டார்கள். அருண்மொழி அவர்களுக்கு வழி காட்டினான்.

கலைந்த தலையுடன் மேலே ஒரு துண்டும், இடுப்பில் ஒரு வேட்டியும் கட்டிக் கொண்டு துக்கமாக சீராளன் உட்கார்ந்து கொண்டிருந்தான். அருண்மொழி இறங்கி கைகளை அகலமாக விரித்து அவனை தழுவிக் கொண்டான்.

"கேள்விப்பட்டேன் சீராளா. கேள்விப் பட்டேன். மன்னர் உன்னை பார்க்க வந்து கொண்டிருக்கிறார்" என்று சொல்ல, அடுத்த சில நொடிகளில் அந்த இடம் பரபரப்பாகியது. பெண்கள் வாய் விட்டு அலறினார்கள்.

"எங்கள் குலக் கொழுந்து போய் விட்டதய்யா, எங்கள் குலக்கொழுந்தை சூறையாடி விட்டார்கள் அய்யா. திருமயிலையில் பல பேரை கொன்று விட்டு போய் விட்டார்களய்யா" என்றெல்லாம் குமுறினார்கள்.

ஜனங்களுடைய குமுறலை அமைதியாக இராஜேந்திர சோழர் வேடிக்கை பார்த்தார். கதறும் வரை கதறட்டும் என்று காத்திருந்தார். வந்தியத் தேவர் கை உயர்த்த, மெல்ல மெல்ல கூட்டம் அமைதியாயிற்று.

"பழிக்குப் பழி. இரத்தத்திற்கு இரத்தம். உயிருக்கு உயிர். நிச்சயம் வாங்கப்படும். உள்ளே நுழைந்தது, மேலைச் சாளுக்கியம் அல்ல. ஒட்ட தேசத்தவர்கள். மேலைச் சாளுக்கியர் போல் உள்ளே நுழைந்திருக்கிறார்கள். ஒட்டதேசம் வரைப் போய் ஒட்ட அறுத்துவிட்டு வருவேன். பேடிகளை சவுக்கால் விளாறி விட்டு வருவேன். அவர்கள் பெண்டுகளை கூந்தல் பிடித்து இழுத்து வருவேன்.

உயிருக்கு உயிர், அடிக்கு அடி, உதைக்கு உதை, இரத்தத்திற்கு இரத்தம், பழி வாங்காமல் இராஜேந்திர சோழன் ஊர் திரும்ப மாட்டான். இது சத்தியம், என் தாய் திகம்பசுதனியின் மீது சத்தியம். என் தாய் வானமாதேவியின் மீது சத்தியம். என் தந்தை இராஜராஜர்



சத்தியம்" என்று உரக்கச் சொன்னார்.

கூட்டம் குலவை இட்டது.

"சீராளா, நீ இங்கு இருந்தால் இதையே நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டிருப்பாய். உன்னைப் போல திறமை மிக்கவர் எனக்கு அருகே இருக்க வேண்டும். வழி நெடுக பல்வேறு இடங்களில் அரிசி வாங்கி படையினருக்கு உணவு கொடுக்கும் வேலை உன்னுடையது. நீயும் கங்கை வரை போய் வர வேண்டும், அங்கு போய் உன் மனைவியின் மனக்கேதம் தீருவதற்கு நீராடி வழிபாடு செய்ய வேண்டும். வழியில் உள்ள எல்லா நதிகளிலும் அவள் பெயர் சொல்லி நீர் வார்க்க வேண்டும். இது அவளுடைய தாபத்தை தணிவிக்கும்" என்று இராஜேந்திரர் சொல்ல, அவன் "உத்தரவு" என்றான்.

அடுத்த கால் நாழிகையில் கரைபோட்ட காழகத்துடன் இடுப்பில் மூன்றாம் துண்டுடன், மேலே சால்வையுடன், இடுப்பில் வாளுடன், கையில் குத்தீட்டியுடன் குதிரை ஏறி நின்றான்.

அவன் தந்தை பெரிய வேளாளர், மயிலை, திருவல்லிக்கேணியின் பாதுகாப்பை ஏற்பதாக உறுதி அளித்தார். அவன் தம்பி துணை இருப்பதாக சொன்னான்.

"எல்லாவற்றிக்கும் மேல் உன் மனைவி துணை இருக்கறாளடா, இனி மயிலைக்கு ஒரு கேடும் வராது" என்று அவன் தந்தை உரக்கச் சொல்ல, எல்லோரும் மறுபடியும் குலவை இட்டார்கள். அவள் சந்தோஷமானாள். எகிறி குதித்தாள்.

"ஊர் ஊராக போகப் போகிறாயா, ஆறுகளில் ஸ்நானம் செய்யப் போகிறாயா. எனக்காக நீர் இறைக்கப் போகிறாயா, நீ நீர் ஊற்றி கீழே இறைக்கும் முன்பு அதை நான் குடித்து 'விடுவேன். உன் கையால் நீர் குடிப்பது எவ்வளவு சந்தோஷம்" அவள் ஆனந்தமயமானாள்.

இராஜேந்திர சோழர் எந்த இடத்தில் ஒநாய்கள் அடித்து கொல்லப்பட்டனவோ அந்த இடத்திற்கு போய் நின்றார்.

கருவேலங்காடு எரிந்து விட்டது. மறுபடியும் ஒநாய்கள் வந்து குடிபுகும். எனவே கருவேலங்காடாக இல்லாமல் இந்த இடத்தில் பாதை போட்டு விடலாம். மூன்று நாட்களில் பாதை தயாராக வேண்டும். நமது வீரர்களே இதை செய்ய வேண்டும். மயிலைக்கும்,

திருவல்லிக்கேணிக்கும் இந்த பாதை நம்முடைய அன்பளிப்பாக இருக்கும். பாதைக்கு மறுபக்கம், ஆற்றுக்கு அந்தப்புறம் ஒரு மிகச் சிறந்த பாடி வீடு அமைய வேண்டும். திருவொற்றியூரை தலைமை இடமாக வைத்து, இதை துணை படை நிலையமாக வைத்து திருவல்லிக்கேணி, மயிலாப்பூரை காவல் காக்க வேண்டும்.

மறுபடியும் மயிலாப்பூரை சுற்றி வந்தார்.

"இவர் தான் அந்த அந்தணர்" திண்ணையில் இருந்தவரை இழுத்து எதிரே நிற்க வைத்தார்கள்.

கண்கொட்டாமல் அவரையே பார்த்தார்.

"நான் நல்லது தான் செய்தேன். எவ்வளவு ஓநாய்கள் தெரியுமா?" எந்த கேள்வியும் கேட்காமல் அவரே பதில் சொன்னார். இராஜேந்திர சோழர் அவரையே பார்த்தார்.

"நூற்றுக்கணக்கான ஓநாய்கள் இதோ இந்தத் தெருவில் வரும். உங்கள் குதிரை வீரர்களைப் போல கம்பீரமாகப் போகும் நூறு ஓநாய்கள்" என்று சொல்ல,

இராஜேந்திர சோழர் மெல்ல முகம் சுளித்தார். வந்தியத் தேவர் பல் கடித்தார். அருண்மொழிப் பட்டன் உக்கிரமானான்.

"பேசத் தெரியாது பேசுகிறாரா அல்லது பேச தெரிந்து வேண்டுமென்றே பேசுகிறாரா, அந்தணரை யாரும் எதுவும் செய்ய மாட்டார்கள் என்ற துணிச்சலா. இராஜேந்திர சோழரைப் பற்றி ஒன்றும் அறியாத முட்டாளாக இருக்கிறானே" என்று நொந்து கொண்டார்.

"இந்த அந்தணருக்கு எவ்வளவு நிலங்கள் இருக்கின்றன?"

"எனக்கு இருக்கிறதய்யா. கண்ணுக்கு எட்டிய வரையில் நஞ்சையும், புஞ்சையும் உண்மையில் இந்த மயிலையில் அதிகமான நிலச் சொத்து உடையவன் நான் மட்டும் தான். அதனால் தான் என்னை தலைவராக நியமிக்க வேண்டும் என்று சொல்கிறேன். குடவோலைத் திட்டம் அப்படித் தானே சொல்கிறது" என்று சொல்ல,

"போதும் நிறுத்து" என்று வந்தியத் தேவர், ஒற்றை வார்த்தையில் ஏகவசனத்தில் அடக்கினார். அந்தணர் மிரண்டார்.

"இவருடைய எல்லா சொத்துக்களையும் பிடுங்கி மயிலை கபாலீஸ் வரத்துக்கு சொந்தமாக எழுதி வைத்து அதில் வருகின்ற அந்தனை



மற்றும் மயிலாப்பூர் பொதுச் சபைக்கு கணக்கு கொடுத்து மயிலாப்பூர் பொதுச் சபை அதில் பாதி தங்களுடைய உபயோகத்திற்கும், மயிலை கபாலீஸ்வரத்திற்கும் கொடுக்கப்படும். இந்த அந்தணரை சேர தேசத்திற்கு நாடு கடத்துங்கள். குடும்பத்தோடு கடத்துங்கள்"

அவர் மனைவி 'ஓ' வென்று அழுதபடியே ஓடி வந்தாள்.

"சேர தேசம் வரை நான் எப்படி போக முடியும். எனக்கு மூன்று குழந்தைகள் இருக்கின்றனவே"

"என்ன செய்யச் சொல்கிறாய்? உன் புருஷன் விதி எப்படியோ அப்படித்தானே உன் விதியும்"

"இல்லை. தேவையில்லை. நான் மயிலையிலேயே இருக்க விரும்புகின்றேன்"

"இல்லை. உன் புருஷனோடு போக முடியாதென்றால் உன் புருஷன் தனியாகப் போகட்டும். நீ தஞ்சையை நோக்கி போக வேண்டும். இந்த ஊரில் நீ இருப்பது உனக்கும் கேவலம். உன் புருஷனுக்கும் கேவலம். ஒரு கேவலமான இடத்தில் உன் குழந்தைகள் வளர வேண்டாம். தஞ்சையை நோக்கிப் போய் அங்குள்ள அந்தணர்களிடம் உன் பிள்ளைகளை ஒப்படைத்து அவர்களை வேதம் படிக்கச் சொல்.

அருண்மொழி இதற்குண்டான அறிமுக ஓலையை கொடுத்து விடு. என் முத்திரையையும், உன் முத்திரையையும் இட்டு விடு" என்று சொல்ல, அவள் புருஷனை விட்டு விலகி நின்றாள்.

அவள் புருஷன் நாலா பக்கமும் விழித்துப் பார்க்க, ஊர் கை கொட்டிச் சிரித்தது.

"மூன்று வீரர்கள் இவரை அழைத்துப் போகட்டும். அவர்கள் குதிரையில் வரட்டும். இவர் பெண் குதிரையில் ஏறி கேரளத்திற்கு போகட்டும். இனி திருமயிலை பக்கமே இவர் வரக்கூடாது. வயலே இல்லாத, சோறே விளையாத கேரளத்தில் போய் தேங்காயும், இலந்தைப் பழமும் தின்று கொண்டிருக்கட்டும்" என்று கட்டளை இட்டார்.

அந்த அந்தணனை குதிரையில் ஏற்றினார்கள். அவர் பெண்மணி வீட்டிலுள்ள பொருள்களை எடுத்துக் கொண்டு மாட்டு வண்டியில் கிளம்பினாள். ஒரு பெரிய தொந்தரவு மயிலையை விட்டு நீங்கியது.

"அடேயப்பா, என்ன ஏகடியம் பேசுவான். என்ன எகிறிப்

பேசுவாள். அவள் நிலைமையைப் பார்த்தாயா. ஊர் முழுவதும் சபித்து
கொண்டிருப்பாளே இப்பொழுது அவனுக்கு கிடைத்த சாபத்தை
பார்த்தாயா" ஊர்மக்கள் விதம் விதமாக பேசி கலைந்தார்கள்.

"பிரம்பால் அடித்து என்ன பயன், மறுபடியும் அது புத்தியை
காட்டிற்று. இப்பொழுது நாடு கடத்தினால் இந்தப் பக்கமே அந்த
நாய் வராது" என்றெல்லாம் ஆத்திரத்தோடு பேசினார்கள்.

"நல்ல தீர்ப்பு" என்று கொண்டாடினார்கள்.

"பாவம் அந்த பெண்மணி" என்று பரிதாபப்பட்டார்கள்.

"அவளும் கடைசி நேரம் புருஷனை கை கழுவி விட்டாள் பார். அது தான் சரி. மோசமான புருஷனுக்கு அது தான் நல்ல முடிவு" என்றும் திருமயிலை பேசியது.

கூவத்தின் நடுவே கல்தூண்கள் வைத்து கட்டடம் எழுப்பினார்கள். அதன் மீது மரக்கட்டை பதித்தார்கள். மரக்கட்டையின் மீது கா... ஊற்றினார்கள். பிறகு கருங்கல் பொடியை தூவினார்கள். இரண்டு புறமும் சுவர் எழுப்பினார்கள். அதிக உயரம் இல்லாத அதே நேரம் தரைப்பாலம் போல் இல்லாத ஒரு பாலத்தை விரைவாக சோழ தேசத்து வீரர்கள் கட்டி முடித்தார்கள்.

"இது திருவல்லிக்கேணி, மயிலைக்கு என் அன்பான பரிசு. இங்குள்ள அந்தணர்களும், வணிகர்களும் எங்களுக்கு வயிறார சோறு போட்டீர்கள். எந்த கணக்கும் இல்லாமல் முகமலர்ச்சியாக ஆதரித்தீர்கள். இராஜேந்திரன் இதற்கு நன்றியோடு இருப்பான். உங்கள் கபாலீஸ்வரர் என் உள்ளத்தை கொள்ளை கொண்டு விட்டார். அங்கம்பூம்பாவை கதை இன்னும் நெஞ்சில் மிதந்து கொண்டிருக்கிறது. அதையெல்லாம் விட, தாமரைச்செல்வி அவளுடைய கதை நெஞ்சத்தை உருக்குகிறது. தொடர்ந்து பலகாத தூரம், பல மாதங்கள் நான் பயணப்பட வேண்டியிருக்கும். தாமரைச் செல்வி என்னோடு வருவாள் என்று நினைக்கிறேன். சோழ தேசம் வெற்றி பெற துணையிருப்பாள் என்று நினைக்கிறேன். அவளை நன்கு பேணி கவனித்து வாருங்கள். தினமும் உபசாரம் செய்யுங்கள். தினமும் சக்கரைப் பொங்கல், நிவேதனம் செய்யுங்கள். தாமரைச் செல்வியை கொண்டாட, கொண்டாட திருமயிலை சிறப்பாக இருக்கும். திருவல்லிக்கேணி வளமோடு வாழும்.

இராஜேந்திரன் காலத்தில் ஜாதிகள் பற்றி அதிகம் அலட்டிக்



கூடாது. நான் முக்கியமா, நீ முக்கியமா, நான் உயர்வா, நீ உயர்வா என்ற பேச்செல்லாம் எடுபடாது. இங்கு அந்தணர்களும் முக்கியம். பஞ்சமர்களும் முக்கியம். பஞ்சமர்கள் இல்லாமல் இந்த எடுப்பு முழுமை பெறுமா. அவர்கள் துணை இல்லாமல் ஜெயித்து விட முடியுமா. எனவே இவர் முக்கியம் அவர் முக்கியம் என்ற முட்டாள்தனமான பேச்சுக்கு ஒரு பொழுதும் செவி மடுக்காதீர்கள். அப்படி யார் பேசினாலும் தட்டி அடக்குங்கள்.

திருமயிலை வேளாளர் வசமே இருக்கும். வணிகர்கள் வெளியூருக்கு போய் வருவதால், ஊரிலேயே இருக்கின்ற இங்கு சீராக நிர்வாகம் செய்ய வேளாளர்கள் தான் சிறப்பானவர்கள். வணிகர்கள் அவர்களுக்கு துணையாக இருக்க வேண்டும். அந்தணர்கள் அவர்களுக்கு பலமாக இருக்க வேண்டும். இந்த ஊர் மக்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்பதை திரும்பி வரும் போது நான் கேள்விப்பட வேண்டும். திருமயிலையில் படகுகள் நிற்க, நாவாய்கள் நிற்க இடம் ஏற்படுத்த வேண்டும். கூவம் ஆறு தாண்டியதும் கடல் ...பக்கமாக குவிந்து வருகிறது. எனவே நாவாய்கள் நிறுத்த அந்த இடம் நன்றாக இருக்கும். நாங்கள் வருவதற்குள் அந்த இடம் ஆழம் செய்து நாவாய்கள் வந்து தங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நாவாய்களிலிருந்து சாமான்கள் இறங்குவதற்கு மரப்பாலங்கள் கட்டியிருக்க வேண்டும். இதை வேளாளர்களும் வணிகர்களும் திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும்.

இதற்குண்டான செலவை அரசாங்கம் ஏற்கும். இப்போதைக்கு நூறு கழஞ்சுகள் முன்பணமாக தரப்படும்" என்று அருண்மொழியிடம் ஜாடை செய்தார். அருண்மொழி ஓலை நாயகத்திடம் கண்காட்டி பேச, காசு கை மாறியது.

மாமன்னர் இராஜேந்திரர் திருமயிலையி லிருந்து நீங்கி திருவொற்றியூர் போனார். எல்லா படைகளும் திருமயிலையை வலம் வந்து போயின. கபாலியை தரிசனம் செய்தன. போட்ட பாதையை கண்கொட்டாமல் பார்த்தன.

"திருமயிலைக்கு அன்பளிப்பா இந்த பாதை" என்று ஒரு சேனாதிபதி வியப்போடு கேட்டார்.

"ஏன்?"

"மன்னர் அப்படித் தான் சொன்னார்"

"இல்லை. அங்கே துறைமுகம், இங்கே நாடு. அந் துறைமுகத்திற்கும், ஊருக்கும் இடையே சேறு இருந்தது. அந் சேறை சமன்படுத்தி உயரமாக கருங்கல் தூக்கி ஒரு பால அமைத்து விட்டார். எனவே எந்தப் பொருள் நாவாயில் வந்தாலு இறக்கி உடனடியாக பாலம் தாண்டி திருவல்லிக்கேணி வழியா மயிலைக்கு வந்து விடும். மயிலையின் கடற்கரை ஓரமாகவ மாமன்னர் சாலைப் போடச் சொல்வார் அல்லது நீங்களாக போடுவது நல்லது" என்று சேனாதிபதி சொல்ல, வணிகர்க 'அடடே' என்று வியந்தார்கள்.

"இராஜேந்திரா கொக்கா, ஒரே நேரத்தில் பல வேலைக செய்பவராயிற்றே. ஒரு கல்லில் பல மாங்காய். அவர் அந்த கடல் உள் வாங்கி இருப்பதை எப்பொழுது கவனித்தார். எப்ப கவனித்தார். எவ்வளவு திறமைசாலியாக இருந்தால் இப்படி ஒ கணக்கு செய்ய முடியும்" என்று ஆச்சரியப்பட்டார்கள்.

"இத்தனை வீரர்கள் இல்லை என்றால் இவ்வளவு விரைவா இந்தப் பாலம் நடைபெற்று இருக்குமா. இது வீரர்களுக்கு வேலை கொடுத்தது போலவும் ஆயிற்று, பாலம் கட்டியது போலவும் ஆயிற்று பிற்பாடு கடற்கரை பட்டிணமாக இது மாற வேண்டும் என்கி புதிய தலையெழுத்தும் வந்தது" என்று கொண்டாடினார்கள்.

"அவர் சொன்னது போல தாமரைச் செல்வியை கொண்டாடுவோம். தாமரைச்செல்விக்கு நிவேதனம் செய்வோம் அவள் ஊரை காக்கும்படி செய்வோம்" என்று சொல்லி தினமு முண்டகக் கண்ணி என்ற தாமரைச் செல்விக்கு சக்கரைப் பொங்க நைவேத்யம் செய்தார்கள். சாரி சாரியாக வந்து பார்த்தார்கள் அந்தணர்கள், வேளாளர்கள், வணிகர்கள் எந்த வித்யாசமு இல்லாமல் எல்லோரும் வந்தார்கள்.

"யார் பூஜை செய்வது? அந்தணரா. வேளாளரின் சமாதியல்லவா? எனவே வேளாளர்களே வேலை செய்யட்டும் என்று அந்தணர்கள் விட்டுக் கொடுத்தார்கள்.

வேளாளர்கள் மிகக் கம்பீரமாக அந்த பூஜை முறையை அவர்களிடம் கற்று செய்யத் துவங்கினார்கள்.

திருவொற்றியூர் படை வீரர்களால் நிரம்பியது. இராஜேந்திர



சோழருக்கு கம்பீரமான வரவேற்பு கொடுக்கப்பட்டது. எக்காளங்கள் இடைவிடாது முழங்கின. முரசுகள் அதிர்ந்தன. கோவிலுக்குள் இராஜேந்திர சோழர் கூப்பிய கரங்களோடு நுழைந்தார்.

"ஓய்வெடுத்துக் கொண்ட பிறகு சாமி தரிசனமா, சாமி தரிசனத்திற்குப் பிறகு ஓய்வெடுத்துக் கொள்கிறீர்களா?"

"ஓய்வு எங்கே எடுப்பது?"

"இங்கேயே. ஆயிரங்கால் மண்டத்தில் துணி கட்டி வைத்திருக்கிறோம். நிம்மதியாகத் தூங்கலாம்" என்று சொல்ல, "முதலில் கை, கால் கழுவி சாமி தரிசனம் செய்து விடுகிறேன்" என்று சொன்னார்.

"உள்ளுக்குள்ளே போய் புற்றாலான சிவலிங்கத்தை வணங்கினார். எண்ணெயும், சந்தனமும் வாசற்படியில் வைத்தார். உற்சவருக்கு பால் அபிஷேகம் செய்யச் சொன்னார். எல்லாம் முடிந்த பிறகு வெளியே வந்தார். மண்டபத்தில் அமர்ந்தார். புளியோதரையும், பொங்கலும், எலுமிச்சைப்பழ சாதமும் வயிறார சாப்பிட்டார். உடம்பு அடித்து போட்டது போல வலித்தது. கை, கால் நீட்டிப் படுத்தார். மண்டபத்தை சுற்றி துணிகள் கட்டப்பட்டிருந்தன. உள்ளுக்குள்ளே பஞ்சு மெத்தை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. தலையணைகள் உயரமாக வைக்கப் பட்டிருந்தன. சற்று நேரம் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தார். தாமரைச் செல்வி பற்றியே நினைத்துக் கொண்டிருந்தார். மெல்ல கால் நீட்டினார்.

அந்த ஊர் தேவதாசிப் பெண்கள் வந்து வணக்கம் சொன்னார்கள். கையில் பெரிய மயிலிறகு விசிறி வைத்திருந்தார்கள்.

"தூங்குங்கள் மன்னா" என்று சொல்லி விசிறினார்கள். ஒரு பெண் மெல்ல கால் பிடித்து விட்டாள். இராஜேந்திர சோழர் அயர்ந்து உறங்கினார்.

கனவில் தாமரைச் செல்வி வந்தாள். செக்கச் செவேல் என்ற உடை உடுத்தியிருந்தாள்.

"உனக்கு என்ன வேண்டும், சொல் தருகிறேன். உனக்கு என்ன வேண்டும் சொல்" என்று கேட்க, திகைப்போடு அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"எனக்கு என்ன வேண்டுமென்று தெரியவில்லை. என் தந்தை

ஆசைப்பட்டு செய்ய நினைத்து, செய்ய முடியாத காரியங்களை நான் செய்தாக வேண்டும். பாண்டியன் மணிமுடியை, செங்கோலை அவரால் கொண்டு வர முடியவில்லை. நான் ரோஹணத்தில் நுழைந்து அதிரடியாய் அவைகளை மீட்டேன், கங்கைக்கு போக வேண்டும் என்பது என் தந்தையார் விருப்பம். அதையும் செய்ய வேண்டும். மிகச் சிறந்த முறையில் சிவனுக்கு கோவில் எழுப்ப வேண்டும். சோழ தேசத்தைப் பற்றி உலகம் அறியும் வரையில் பேச வேண்டும். இது ஒரு தனித்த நாகரிகம் என்று கொண்டாடப்பட வேண்டும்

இவையெல்லாம் ஆசைகளா, கனவுகளா, இல்லை வெறும் அபிப்ராயங்களா, இதற்கு என்ன செய்ய வேண்டும், எதுவும் தெரியவில்லை. கால் போன போக்கில் போய்க் கொண்டிருக்கிறேன். காற்றடித்த வேகத்தில் அலையும் சருகு போல் இருக்கிறேன். உள்ளே செய்ய வேண்டும் என்ற ஆத்திரம் இருக்கிறது, ஆனால் செய்யத் தெரியவில்லையோ, என்ற ஏக்கமும் இருக்கிறது. நான் இரண்டுங்கெட்டானாக இருக்கிறேன். என்னை ஒன்றாக்கு, ஒரு நிலைப்படுத்து"

தாமரைச் செல்வி வாய்விட்டு சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?"

"உலகத்தில் எல்லா மனிதர்களின் நிலையும் இதுவே. சொல்லும், செயலும் ஒன்றாக இருப்பவர்கள் மிகக் குறைவு. உனக்கு என்ன வேண்டும் என்று தெரிகிறது. 'நான் ஏற்பாடு செய்கிறேன்" அவள் எழுந்தாள். காணாமல் போனாள்.

அவர் திடுக்கிட்டு விழித்தார்.

"எங்கே அவள்?" என்று விசிறுகின்ற தாதியைப் பார்த்து கேட்டார்.

"கால் பிடித்து விட்டுக் கொண்டிருந்தவள் தானே, இப்போது தான் வெளியே போனாள். நான் பிடித்து விடவா"

அவருக்கு உள்ளே சோர்வாக இருந்தது. வெறுமே வானம் பார்த்து உட்கார்ந்திருந்தார்.

'நான் ஏற்பாடு செய்கிறேன்' என்ற வார்த்தை மீண்டும் ஞாபகம் வந்தது. என்ன ஏற்பாடு செய்யப் போகிறாள்.



"வந்தியத் தேவர் எங்கே?"

"அயர்ந்து தூங்குகிறார்"

"அருண்மொழிப் பட்டன்"

"சிவன் சன்னதியில் கண்மூடி உட்கார்ந்திருக்கிறார்"

"அருண்மொழிப்பட்டன் தூங்கவில்லையா?"

"தூங்க முயற்சித்தார். தூக்கம் வரவில்லையாம். எனவே எழுந்து முகம் கழுவிக் கொண்டு சிவன் சன்னதிக்கு போய் விட்டார். இன்று பிற்பகல் சிவன் சன்னதி மூடவில்லை. எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் வருவீர்கள் என்பதால் கதவு திறந்தே இருக்கிறது"

அவர் எழுந்து உடைகளை சரி செய்து கொள்ள, மெய்க்காவல் வீரர்கள் வரிசை ஆனார்கள்.

"அதிகம் பேர் வேண்டாம். இரண்டு பேர் போதும். கோவிலைச் சுற்றி வரப் போகிறேன். அவ்வளவே" அவர் மெல்ல நடந்து கோவிலில் உள்ள மகிழ மரத்தடியில் நின்றார். பிறகு வேறு பக்கம் போய் சுந்தரமூர்த்தி நாயனார், சங்கிலி நாச்சியார் என்று எழுதப்பட்ட சன்னதியின் முன் நின்று கை கூப்பினார்.

பின்னால் ஆள் அசையும் சத்தம் கேட்டது. அருண்மொழிப் பட்டன் கை கூப்பினான்.

"நன்றாக ஓய்வெடுத்தீர்களா?"

"நன்றாக ஓய்வெடுத்தேன். நீ தூங்கவில்லையாமே?"

"தூக்கம் வரவில்லை"

"ஏன்? உடம்பில் அலுப்பு இல்லையா?"

"அலுப்பு இருக்கிறது, ஆனாலும் இரவு நேரம் தூங்கிக் கொள்ளலாம். பகலில் விழிப்போடு இருக்கலாம் என்று தோன்றியது"

"எதற்காக?"

"எப்போதோ ஒரு முறை இந்த சிவன் சன்னதிக்கு வருகிறோம். அதை தூங்கி கழிப்பானேன், இறைவனை பார்த்துக் கொண்டிருப்போம் என்று தோன்றியது"

"அடடே, இது எனக்கு தோன்றவில்லையே?"

"எல்லோருக்கும். ஒன்று போல எதுவும் தோன்றாது. ஒவ்வொருவருடைய மன வளர்ச்சிக்கு ஏற்ப விஷயங்கள் மாறும்"

"என்னுடையது வளர்ச்சியா, தாழ்ச்சியா"

"வளர்ச்சி, தாழ்ச்சி என்று குறிப்பிட முடியாது. நீங்கள் ஒரு பக்கம். நான் ஒரு பக்கம். வெவ்வேறு கிளைகளாக பிரிந்திருக்கிறோம். எனக்குள் இந்தக் கோவில் மிகப்பெரிய அதிர்வை ஏற்படுத்துகிறது"

"என்ன விதமான அதிர்வு?"

"நான் சுந்தரரைப் பற்றி அதிகம் எண்ணிக் கொண்டிருந்தேன்"

"வா. வா. நானும் அதையேத் தான் எண்ணிக் கொண்டிருந்தேன். சுந்தரர் பற்றித்தான் எனக்குத் திரும்பத் திரும்ப எண்ணங்கள் வந்து கொண்டிருக்கிறது.

கோவிலுக்கு போய் நின்று பார்ப்பதை விட, சன்னதியில் நிற்பதை விட இந்த மகிழ மரத்தடியில் நிற்கலாம் என்று தோன்றியது. இங்கு தானே இறைவன் நின்றான்.

உன்னுடைய கேள்வி என்ன? சுந்தரரைப் பற்றி?" மன்னர் அருண்மொழிப் பட்டனை கேட்டார். அருண்மொழிப் பட்டன் கண்மூடி இருந்தான்.

"உங்களுடைய கேள்வி என்ன? அதிலிருந்து துவங்குவோம்" என்றான் மன்னர் யோசித்தார்.

"இது என்ன? இந்துமத அடிப்படை விஷயமே எனக்கு புரியவில்லை. இந்த ஊரில் ஒரு பெண்ணை பார்க்கிறார். ஏற்கனவே திருமணமானவர், காதலித்து கை பிடித்தவர். இங்கு வந்து இந்தப் பெண்ணை பார்த்து, 'எனக்கு திருமணம் செய்து வை' என்று இறைவனிடம் கேட்கிறார்.

இறைவன் அந்த அம்மாள் கனவில் போய் இவரை திருமணம் செய்து கொள் என்று சொல்ல, அவர்கள் நெகிழ்ந்து ஓடி வருகிறார்கள். ஆனால் திருவாரூரில் பரவை இருக்கிறாரே, அங்கு போய் விடுவாரோ என் கதி என்ன? என்று பயப்படுகிறார்கள்.

'அவனை சத்தியம் செய்யச் சொல். அவன் உன்னை விட்டு போக மாட்டான்' என்கிறார், அவர் சத்தியம் செய்வதற்கு சரி என்று ஒத்துக் கொள்கிறார். அதே நேரம் இறைவனிடம் நான் சத்தியம் செய்வது உன்னுடைய சன்னதியில், அங்கே நீ இருக்காதே. மகிழ



மரத்தடிக்கு போய் விடு என்று சொல்கிறார். இறைவரும் சரி சொல்கிறார். ஆனால் அந்தம்மாள் சங்கிலியார் கனவில் போய் அவன் இறைவன் சன்னதியில் சத்தியம் செய்கிறேன் என்பான். நீ ஒத்துக் கொள்ளாதே. மகிழ மரத்தடியில் சத்தியம் செய் என்று கேள். நான் அங்கு தான் இருப்பேன் என்று சொல்ல,

சங்கிலியாரின் தோழிகள் இவ்வளவு பெரிய விஷயத்தை சிவன் சன்னதியில் செய்யலாகாது. வெளியே வந்து செய்து கொடுத்தால் போதும்"

"எங்கே வெளியே"

"மகிழ மரத்தடியில்" என்று சொல்கிறார்கள். அவருக்கு சொல்லவும் முடியவில்லை. மெல்லவும் முடியவில்லை. ஆனாலும் இறைவன் பார்த்துக் கொள்வான் என்று துணிந்து சத்தியம் செய்கிறார்.

"சோழ தேசத்தின் சக்கரவர்த்தியாக இருக்கின்ற நான் இந்த நேரம் படை எடுத்து மேலை சாளுக்கியம் போகின்ற நான் என்ன செய்ய வேண்டும். முற்றிலும் சிவனிடம் ஒப்படைத்து விட வேண்டுமா"

"ஆமாம், முற்றிலும் சிவனிடம் சிவனிடம் ஒப்படைத்து விட வேண்டும்"

"எப்படி அருண்மொழி, நான் திட்டமிடாமல், நான் யோசனை செய்யாமல் எப்படி இதை இறைவனிடம் ஒப்படைப்பது"

"அதனால் தான் நீங்கள் இராஜேந்திர சோழர், அதனால் தான் அவர் சுந்தரர், அவருடைய பாட்டு ஒன்று உங்களுக்கு சொல்லி காண்பிக்கட்டுமா,

'மீளா அடிமை உமக்கே
ஆளாய் பிறரை வேண்டாதே
மூளா தீபோல் உள்ளே
கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார்
தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர்

திருவாரூரர் வாழ்ந்தேபோம் நீரே'


சுந்தரர் எப்படி இருக்கிறார் பார்த்தீர்களா.

மீளா அடிமை உமக்கே ஆளாய் என்கிறார். என்றேனும், சிறிது நேரமாவது இறைவனுக்கு ஆட்பட்டிருக்கிறீர்களா, அப்படி ஆட்பட்டவரால் தான் வாழ்ந்தே போம் நீரே என்று கோபித்துக் கொள்ள முடியும். நீர் சௌக்கியமாக இரும் நான் அவஸ்தைப் பட்டு கொள்கிறேன் என்று நொந்து கொள்ள முடியும்.

நீங்களும் நானும் இறைவனிடமிருந்து பிரிந்து இருக்கிறோம். நான் செய்கிறேன் நீ துணைக்கு வா என்பது நம் எண்ணம். இதனால் தான் இறைவன் வாராது போவானோ என்கிற பயம் இருக்கிறது.

சுந்தரர் பயமற்றவர் கொடு, என்ன கேட்டாலும் கொடு என்கிறார். அருண்மொழி பேச இராஜேந்திரர் மௌனமானார். இது சரணாகதியா இல்லை இன்னும் உயர்ந்தியா கேள்வி எழத் தொடங்கியது. அவர் அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டார்.

விஸ்வநாத சாஸ்திரிகள் மருவூர் கூட்டத்தோடும், தஞ்சாவூர் கூட்டத்தோடும் நிம்மதியாக பயணமானார். பல விஷ்ணு தலங்களை தரிசித்துக் கொண்டு கோசல தேசத்திற்குள் பிரவேசித்தார்.




திருவொற்றியூரிலிருந்து விரைவாகக் கிளம்பிய அந்தப் படை புலிக்காடு தாண்டி, பெரிய ஏரிகளைத் தாண்டி கடற்கரை ஓரமாகவே நடந்தது. இடதுபுறம் அடர்ந்த வனங்கள் இருந்தன. வலது புறம் கடல் சீறிக் கொண்டிருந்தது. ஒரு குறிப்பிட்ட தூரம் போனதும் எதிரே



கீழைச் சாளுக்கியப் படையை அந்த வீரர்கள் சந்தித்தார்கள். வாளை உருவினார்கள். வாள் முதுகுப் படையை எதிர்க்க எண்ணமில்லாத கீழைச் சாளுக்கிய வீரர்கள் குதிரையிலிருந்து இறங்கி கை கூப்பி வரவேற்றார்கள்.

அந்த வாள் முதுகுப் படையின் தலைவர்கள் நடுப்பக்கத்திலிருந்து முன்பக்கம் விரைந்து வந்தார்கள்.

"உங்களில் தலைவன் யார்?" என்று கேட்டார்கள். ஒருவன் மட்டும் முன்னே வந்து நிற்க, அவனை மட்டும் தனியே அழைத்துக் கொண்டு மற்றவர்களை விலகி இருக்கச் சொன்னார்கள்.

"எங்கிருந்து வருகிறீர்கள்?"

"வேங்கியிலிருந்து"

"ஏன் இங்கு வந்தீர்கள்?"

"வேங்கியில் செய்வதற்கு ஒன்றுமில்லை"

"என்ன அர்த்தம் இதற்கு"

"வேங்கியில் மன்னர் என்று யாரும் இல்லை. விமலாதித்தர் இறந்து போனார்"

"தெரியும், பிறகு"

"ஜெயசிம்மன் அவர்கள் எங்களை தலைமை ஏற்று நடத்திப் போவதாகச் சொல்லி, பாதி தூரம் வந்தார். பிறகு திரும்ப வட மேற்கு நோக்கி ஓடி விட்டார்"

"அந்தப் பையன். விஷ்ணுவர்தன விஜயாதித்தன்?"

"அவன் கோட்டைக் கதவின் பின்பக்கம் திறந்து கொண்டு வெளியேறி வடக்கு நோக்கி ஒட்ட தேசம் ஓடிவிட்டான். அவனை பூட்டி விட்டுத் தான் இவர் வந்திருக்கிறார். ஆனால் அவன் சாமர்த்தியமாக தப்பி விட்டான்"

"ஆக இரண்டு பேருமே இப்போது அங்கு இல்லையா?"

"அங்கு தலைவர் என்று யாருமே இல்லை. இராஜராஜ நரேந்திரன் இருந்திருந்தால் இந்நேரம் அழகாக முடி சூடியிருக்கலாம். ஜனங்கள் அவர் இல்லாது போய் விட்டாரே என்று மிகவும் வருத்தப்படுகிறார்கள். இன்றைய பொழுதில் கீழைச் சாளுக்கியம் தத்தளிப்பது போல வேறு எந்த நேரமும் தத்தளித்ததில்லை.

வயதானவர்கள் விக்கி, விக்கி அழுகிறார்களய்யா, அனாதையாகப் போனோமே என்று நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுகிறார்கள்.

"இளம் பையன்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரு குழு ஓட்ட தேசம் போகலாம் என்று கிளம்பியது. நான் அதட்டி நிற்க வைத்தேன். "இது உன்னுடைய மண், உன்னுடைய தேசம் ஒருபொழுதும் இதை விட்டு நீங்காதே" என்று அவர்களுக்கு அறிவுரை சொன்னேன்"

"மாமன்னர் இராஜேந்திரர் வந்தால் பிரம்பால் அடித்தே கொல்லுவார். அதற்கு ஒட்டதேசம் போய் விடுவதே நல்லது என்று நினைக்கிறார்கள்"

"வீரர்கள் தவிர மற்ற வகுப்பினருடைய நிலை என்ன?"

"வேலை என்று ஒன்றும் இல்லை, அரிசி விலை, பருப்பு விலை எல்லாம் மிக அதிகமாக விற்கிறது. எல்லாம் பதுக்கப்பட்டிருக்கிறது. எந்த நேரம் யார் பிடுங்குவார்கள் என்று தெரியவில்லை. பொது மக்கள் கீரைகளையும், கிழங்குகளையும் பறித்து தின்கிறார்கள். காட்டுக்குள்ளே போய் மான் வேட்டையாடி அந்தக் கறியை சாப்பிடுகிறார்கள். உடல் நோவுக்கு மருந்தில்லை. அது தான் கொடுமையாக இருக்கிறது. இந்த முறை மழை கடுமை. அதனால் அங்கங்கே தலைவலி, ஜுரம், மூக்கடைப்பு என்று ஜனங்கள் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பச்சிலைகளை மென்று தின்கிறார்கள். சரியான வைத்தியம் இல்லை"

"இந்த நேரம் இராஜராஜ நரேந்திரன் அங்கு இருந்தால் நிச்சயம் எங்களுக்கு தெம்பாக இருக்கும்"

தள்ளி நின்று கேட்டுக் கொண்டிருந்த இராஜராஜ பிரம்மராயனுடைய கன்னத்து தசைகள் புடைத்தன. கை நரம்புகள் முறுக்கேறின. குதிரையை விலக்கிப் போய் அதில் உட்கார்ந்தபடி தனியே சிந்தித்தார். அந்த கீழைச் சாளுக்கிய தலைவனை விலக்கி விட்டு வாள் முதுகு படைகள் தொடர்ந்து வேங்கியின் உள்ளே நகர்ந்தது.

இராஜ நரேந்திரன் குதிரையை ஓட்டிக் கொண்டு முன் பக்கம் போனான். பிரம்மராயருக்கும், மிலாடுடையாருக்கும் நடுவே தன் குதிரையை நிறுத்திக் கொண்டான்.



"உங்களோடு சிறிது பேச வேண்டும்"

"என்ன திடீரென்று உன் இடத்தை விட்டு வந்து விட்டாய். பின்னால் பாதுகாப்பு வேண்டாமா"

"அங்கு உத்தம சோழ கோன் இருக்கிறார், நான் பாதுகாப்புக்கு பின்னால் இருப்பதை விட, முன்னால் இருப்பது நல்லது என்று நினைக்கிறேன்"

"என்ன திடீரென்று, என்ன ஆயிற்று உனக்கு?"

"இது என்னுடைய தேசம்"

"புரிகிறது. நான் மறுக்கவே இல்லை"

"இந்த தேசத்தில் என் மக்கள் என்னை எதிர்பார்க்கிறார்கள்"

"அதையும் கேள்விப் பட்டோம்"

"அப்படியிருக்கையில் இந்தப் படையை நான் நடத்திக் கொண்டு போய் வேங்கியை கைப்பற்றினால் தான் சிறப்பு. அது அல்லாது நீங்கள் படை நடத்திக் கொண்டு போய் எனக்கு பிச்சை இட்டது போல இதை செய்தீர்கள் என்றால் என்னை ஜனங்கள் மதிக்க மாட்டார்கள்.

இராஜநரேந்திரன் படை எடுத்து வந்தார். வேங்கியை தன் வசப்படுத்திக் கொண்டார் என்ற பெயர் எனக்கு வேண்டும். எனவே நீங்கள் இருவரும் பின்னால் வாருங்கள். உத்தம சோழ கோன் என்னோடு வரட்டும். நான் இந்தப் படையை நடத்திப் போகிறேன்"

"ஆனால் இது உன் படை அல்லவே, இராஜேந்திர சோழனுடைய படை. எங்களுக்கு கட்டுப்பட்ட படை, உங்களுக்கு கட்டுப்படாது"

"கட்டுபடும்படியாக நீங்கள் ஆணையிட வேண்டும்"

"இல்லை. இராஜேந்திர சோழர் தான் இந்த மாறுதலை சொல்ல முடியும். நான் சொல்ல முடியாது. இந்தப் படை என் வசம் ஒப்படைத்திருக்கிறது, என் உயிர் போகும் வரை இந்த படைக்கு நான் தான் பொறுப்பு, நீங்கள் பொறுப்பாக முடியாது"

"அப்படியானால் நான் எதிர்பக்கம் போய் நீங்கள் உள்ளே வராது உங்களைத் தடுப்பேன்"

"நரேந்திரா, முட்டாள்தனம் செய்யாதே"

"வேறு வழியில்லை, வேங்கிக்குள் வேறு ஒரு படை வரக்கூடாது.

இராஜேந்திருடைய படை இங்கு வரவேண்டுமென்றால் நா தலைமை ஏற்றுத் தான் வர வேண்டும். நீங்களாக வர முடி நீங்களாக வர வேண்டுமென்றால், இந்தப் படை என் நட்புப்ப என்னுடைய நட்புப் படையோடு நான் உள்ளே வந்து வேங்கி கைப்பற்றினேன் என்ற பெயர் எனக்கு வேண்டும்"

அவர்கள் கை உயர்த்தினார்கள். குதிரை வீரர்கள் நின்றார் இறங்கச் சொன்னார்கள். குதிரை வீரர்கள் இறங்கி களைப்பாறினார்

இராஜராஜ நரேந்திரனை அழைத்துக் கொண்டு உத்தம சோ மிலாடுடையார் முன்னே நடந்தார்.

"முற்றிலும் முட்டாள் தனமான ஒரு வேலையை நீங்கள் செய் முற்பட்டிருக்கிறீர்கள். உங்களுடைய நிலைமை எனக்கு புரிந்தாலு இதற்கு சரி என்று ஒத்துக் கொள்ளக்கூடிய ஒரு நிலைமை என்னிட இல்லை. எனக்கு இட்ட கட்டளை வேங்கியை கைப்பற்றச் சொல்லி வேங்கியை கைப்பற்றச் சொல்லும் போது நீங்களும் உடனிருந்து உதவுமாறு உங்களை இராஜேந்திரர் கேட்டுக் கொண்டா உடனிருந்து உதவுமாறு மறுபடி சொல்கிறேன். நீங்கள் உடனிருந்து தான் உதவ வேண்டுமே தவிர நீங்கள் இந்தப் படையை முன்னே அழைத்துப் போக முடியாது"

"அப்படியானால் ஒன்று செய்யுங்கள். எனக்கு இந்தப் படை கீழ் படிய வேண்டாம். உங்களுக்கு கீழ் படிந்ததாகவே இருக்கட்டும். ஆனால் உங்களிடமிருந்து பத்து கோல் முன்னே நான் பயணப்படுவேன், புலிக்கொடியை ஏற்றி வேங்கிக் கொடியை ஏந்தி என்னோடு இரண்டு வீரர்கள் வர வேண்டும். அவர்கள் இருவரையும் எனக்கு மெய்க் காப்பாளராக நீங்கள் நியமிக்க வேண்டும். நாங்கள் மூவரும் முன்னே சென்று வேங்கியை கைப்பற்றப் போகிறோம் என்ற மிகுந்த முழக்கத்தோடு முன்னே செல்வோம்"

"இது நாடகம் போலல்லவா இருக்கிறது"

"நாடகம் தான் இருக்கட்டுமே, எனக்கு நல்லதல்லவா"

"உத்தம சோழ மிலாடுடையார் என்ன செய்வதென்று தெரியாமல் திகைக்க, இராஜராஜ பிரம்மராயர் தொண்டையை கனைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

"மிலாடுடையாரே, இந்தப் பையன் பேசுவதில் ஒரு நியாயம்



க்கிறது. தான் முன்னே செல்ல வேண்டும் என்ற ஆசையில் ஒரு த்தம் இருக்கிறது. இப்பொழுது வேங்கியை கைப்பற்றுவது என்பது போருக்கு பிறகு வரப் போவதில்லை. இவர் பத்திரமாக முன்னே போகட்டும். காலியாக இருந்த ஒரு மரப்பொந்தில் ஒரு போய் உட்காருவது போல யாருமே இல்லாத வேங்கியில் இவர் போய் உட்காரப் போகிறார். நாம் பின்னே போய் துணைக்கு இருக்கப் போகிறோம். அவரை முன்னே அனுப்பலாம். வீணாக விவாதம் செய்து கொண்டிருப்பதில் எந்த லாபமும் இல்லை.

இவர் நம்மை விட்டு நீங்கி இராஜேந்திரரிடம் போனால் இராஜேந்திரர் கோபித்துக் கொள்ளக் கூடும். ஆனால் நரேந்திரா, இப்பொழுது எங்களிடம் என்ன பேசினாயோ இதை ஒரு மேடையில் ஏறி அல்லது ஒரு பாறையில் ஏறி வாள் முதுகுப் படை வீரர்களிடம் நீ பேச வேண்டும்.

இந்தப் படையை நான் நடத்திச் செல்லப் போகிறேன். எனக்கு துணையாக மிலாடுடையாரும், பிரம்மராயரும் வருவார்கள். நீங்களும் துணையாக வர வேண்டும். இது என் தேசம். நீங்கள் முன்னே போய் நான் பின்னால் வந்தால் நன்றாக இருக்காது. எனவே எனக்கு உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று கைகூப்பி கேட்க வேண்டும். அப்போது இந்த வீரர்கள் என்ன சொல்வார்களோ அதை நீங்கள் ஏற்க வேண்டும். உங்கள் தலைமையை எங்கள் வீரர்கள் ஏற்க மறுக்கலாம்"

"மறுக்கக் கூடாது. மறுக்கக்கூடாதபடி நீங்கள் தான் பேச வேண்டும்" இராஜ நரேந்திரன் வேகமாகப் பேசினான்.

"சரி, எங்களுக்கு சம்மதம் என்று தெரிவித்து விடுகிறோம், அந்த வீரர்கள் ஏதேனும் சொல்வார்கள். என்ன சொன்னாலும் கை கூப்பி அவர்களை வேண்டிக் கொள். அது தான் நல்லது. முரட்டுத்தனமாக பேசாதே. உன்னை வாள் முதுகு படை வீரர்கள் ஏற்காது போகலாம். ஏனெனில் உனக்கு இருப்பது உடைவாள். இடுப்பில் தொங்க விட்டிருக்கிறாய். எங்களுடைய வழி வேறு. எங்களுடைய கத்திகள் இருக்கும் இடம் வேறு. எங்கள் போர் பயிற்சி வேறு. நீ வெறுமே இந்த பயிற்சிகள் எதுவும் இல்லாது எங்களை தலைமை தாங்குவது என்பது சரியாக இருக்காது. என் வீரர்கள் சிரிக்கலாம். முறைக்கலாம். நான் சமாதானப் படுத்துகிறேன்.

உன்னுடைய ஆதங்கத்தில் ஒரு நியாயம் இருப்பதால் இதை அனுமதிக்கிறேன். மிலாடுடையாரே இது என்னுடைய எண்ணம் உங்களுடைய எண்ணம் என்ன"

"பிரம்மராயரே, இது உங்கள் படை. நீங்கள் சரி என்று ஒத்துக் கொண்டால் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை"

அவன் பாறை மீது ஏறினான். வீரர்களை கை தட்டி அழைத்தான். வீரர்கள் அவன் மீது அலட்சியமாக இருந்தார்கள்.

"நானே இந்தப் படைக்கு தலைமை தாங்கப் போகிறேன்" என்றான்.

முதுகில் வாள் இருப்பவர்கள் தான் எங்கள் படைக்கு தலைமை தாங்க முடியும். புல் வெட்டும் கத்தியை இடுப்பில் வைத்துக் கொண்டு எங்களை தலைமை தாங்குகிறேன் என்று சொல்கிறீரே என்ன நியாயம் இது" ஒரு வீரன் கேட்க, நரேந்திரன் அவனை முறைத்தான்.

மிலாடுடையார் மெல்ல கை உயர்த்தினார்.

"இந்த தேசம் அவருடையது. அவரால் இந்த தேசம் பிடிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார். நாம் உள்ளே போவது இராஜேந்திருடைய கட்டளையின் பேரில், இராஜேந்திரர் உத்தரவு நரேந்திரருக்கு உதவி செய்ய வேண்டும் என்பது. இந்த உதவியை இன்னும் கொஞ்சம் அதிகமாக நரேந்திரர் எதிர்பார்க்கிறார். நரேந்திரர் முன்னே போக நாம் பின்னே தொடர வேண்டும். போகட்டுமே, பெயர் வாங்கிக் கொள்ளட்டுமே. ஏனெனில் அங்கு பெரும் படை ஒன்று இருப்பின் தாக்குதல் என்று ஒன்று இருப்பின் நாம் பயப்பட வேண்டும். வேங்கி ஆள் அரவம் அற்று இருக்கிறது. கோட்டைக் கதவுகள் திறந்து இருக்கின்றன.

எனவே, இவரே தன் கொடியோடு கம்பீரமாய் முன்னே போய் அமர்ந்து கொள்ளட்டும், நாம் வேங்கியை காவலும் காப்போம்" என்று சொல்ல, வீரர்கள் அரை மனதுடன் சரி என்று ஒத்துக் கொண்டார்கள்.

நாலு கோல் தூரம் புலிக்கொடியோடும்; கீழைச் சாளுக்கிய கொடியோடும் இராஜராஜ நரேந்திரன் முன்னே போனான். அவன் அதிக வேகம் போகாதபடியும், அதிக தொலைவு போகாத படியும்



டை வந்த வீரர்கள் மடக்கி அழுத்திக் கொண்டார்கள். சரியான இடைவெளியில் அவனை போக அனுமதித்தார்கள்.

ஜெயசிம்மன் மான்ய கேடயத்தை அடையும் முன்பு நடுவழியில் அவன் தளபதியை சந்தித்தான். கால வம்சத்தை சேர்ந்த கங்கை யாதவ் ஓடி வந்து தன் மன்னனை தழுவிக் கொண்டான்.

"நீங்கள் இந்த நேரம் எதற்காக வேங்கியை விட்டு வந்தீர்கள். விஷ்ணுவர்தன விஜயாதித்தனை ஏன் விட்டு விட்டீர்கள். அவனையும் அழைத்து வந்திருக்கலாமே" வேகமாகப் பல கேள்விகள் கேட்டான்.

"யாதவா, கொஞ்சம் பொறு. அந்த கிறுக்கன் பயந்து போய் ஓட்டர்களிடம் ஒண்டிக் கொண்டான். மான்ய கேடயத்தை தாக்குவதற்காக இரண்டாகப் பிரிந்து இராஜேந்திர சோழர் ஒன்பது லட்சம் வீரர்களோடு வருகிறார். ஆறு லட்சம் வீரர்கள் வட மேற்காக நுழைந்து பிறகு வடகிழக்காக திரும்புகிறார்கள். மூன்று லட்சம் வீரர்கள் திருமயிலையில் கொண்டாட்டமாக மூன்று நாட்கள் தங்கியிருக்கிறார்கள். எனவே மான்ய கேடயத்தை காப்பது என் கடமை என்று நான் இந்தப் பக்கம் திரும்பி விட்டேன்"

"மான்ய கேடயத்தை காப்பது என் பொறுப்பல்லவா, நீங்கள் ஏன் பதறுகிறீர்கள். இது மிகுந்த நல்ல நேரம். வேங்கியை நாம் கைப்பற்ற வேண்டிய நேரம். வேங்கியை நம்முடைய தேசம் என்று உறுதிப்படுத்த வேண்டிய நேரம். நீங்கள் அங்கிருந்து வந்தது பிசகு"

"அப்படியானால் ஒன்று செய் யாதவா"

"சொல்லுங்கள்"

"நீ வேங்கியை பாதுகாத்துக் கொள். நான் மான்ய கேடயம் போகிறேன். மான்ய கேடயம் பற்றிய கவலை எனக்கு இருக்கிறது. இரட்டை பாடியில் உள்ள சிற்றரசர்களுக்கு தகவல் சொல்லிவிட வேண்டும். அவர்களை தயாராக இருக்க வைக்க வேண்டும். மான்ய கேடயத்தை நோக்கி இராஜேந்திரர் வருகிற பொழுது அங்கேயே வெட்டி கொன்று விட வேண்டும். நீ வேங்கியை பார்த்துக் கொள்" என்று சொல்ல,

கங்கை யாதவ் அதற்கு சம்மதித்தான்.

கங்கை யாதவ் மாபெரும் வீரன் சோழ தேசம் கைப்பற்றிய

இடங்களையெல்லாம் அவன் முன்னேறி கைப்பற்றியிருக்கிறான். சோழ தேசம் புலிக்கொடியை வெட்டி எறிந்து விட்டு தன்னுடைய கொடியை பறக்க விட்டிருக்கிறான்.

"உனக்கு யார் வேண்டுமோ எடுத்துக் கொள்" என்று ஜெயசிம்மன் சொல்ல, மாரசிம்மா என்கிற தளபதியை மட்டும் தன்னோடு அழைத்துக் கொண்டான். ஆருகி, புலிசராசா, ஜெயகேசி, ஏராயா என்கிற மற்ற தளபதிகள் ஜெயசிம்மனோடு மான்ய கேடயம் நோக்கி பயணப்பட்டார்கள்.

இரண்டாம் ஜெயசிம்மன் மான்ய கேடயத்தை நெருங்குவதற்கு முன்பாகவே கங்கை யாதவ் வேங்கிக்குள் நுழைந்து எக்காளமிட்டு உள்ளுக்குள் தன்னுடைய படைகளை சரியாக நிறுவினான். கீழைச் சாளுக்கியப் படை எங்கே என்று கேட்டு எஞ்சியவர்களை திரட்டி வாசலின் முன்பு வைத்தார்.

கோட்டையின் மீது மேலைச் சாளுக்கியக் கொடி பறந்தது.

வாள் முதுகுப் படை மெல்ல மெல்ல கிழக்கு கடற்கரை ஓரமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது என்றும் இராஜராஜ நரேந்திரன் அதற்கு தலைமை தாங்கி வருகிறான் என்றும் அவனுக்கு செய்திகள் இரண்டாம் நாள் சொல்லப்பட்டன.

"வாள் முதுகுப் படையா, இது சரியான நேரம். அம்பெய்து கொன்று விடலாம். வில் வீரர்களை முன்னே நிறுத்து. குதிரையில் ஏறச் சொல். தொலை தூரத்தில் பார்த்த உடனேயே சரமாரியாக அம்பு விடச் சொல். நூற்றுக் கணக்கான வீரர்கள் எதற்கும் அஞ்சாமல் இடைவிடாது அம்பு தொடுங்கள் வாள் முதுகு படையினரை நெருங்கினால் தானே வெட்டுவார்கள். நெருங்குவதற்கு முன்பே போட்டு தீர்த்து விடலாம்" என்று உத்தரவிட்டான். உற்சாகப்படுத்தினான்.

ஒரு அம்புக்கு ஒரு சோழ வீரன், ஒரு சோழ வீரனை கொன்று வந்தால் உனக்கு ஐந்து பொன் காசு தருகிறேன் என்று சொன்னான். கீழைச் சாளுக்கியம் கஜானாவைத் திறந்து காசுகளை அள்ளிக் கொண்டான்.

இராஜராஜ நரேந்திரன் தலைமை ஏற்று போய்க் கொண்டிருக்கிறான் என்ற செய்தி இராஜேந்திரருக்கு திருவொற்றியூரில் சொல்லப்பட்டது. அவர் திடுக்கிட்டார்.



"என்ன முட்டாள்தனம், அவனை யார் தலைமை ஏற்கச் சொன்னது"

"எவ்வளவு சொல்லிப் பார்த்தும் கேட்கவில்லை, நானே போக வேண்டும். இல்லையெனில் எதிர்த்து நின்று வாள் முதுகுப் படையை தாக்குவேன். கீழைச் சாளுக்கியத்தின் மீது படை எடுத்து வந்ததாக ஒற்றை வீரனாக அடிப்பேன் என்றெல்லாம் சொன்னார். வேறு வழியின்றி இராஜராஜ பிரம்மராயர் ஒப்புக் கொண்டார்" என்று சொல்ல, அவர் தலையில் அடித்துக் கொண்டார்.

"என் தங்கையின் திருட்டுத்தனம் அப்படியே அவனிடம் இருக்கிறது. அடக்கமாக இருக்க தெரியவில்லை, அரையன் இராஜராஜன், உடனே கிளம்பு, மூன்று லட்சம் வீரர்களோடு எங்கும் நிற்காமல் நேரே போய் வாள் முதுகுப் படை வீரர்களை சந்தித்து அவர்களுக்கு பக்கபலமாக இரு. பிறகு வேங்கியில் நுழை.

யார் படையை நடத்துவது,

ஒழிந்து போகட்டும், அவனே நடத்திப் போகட்டும், ஆனால் அவனுக்கு பாதுகாப்பாக இருங்கள். அவன் மிக முக்கியம். அவன் எங்கேனும் மாட்டினால் இழுத்து பின்பக்கம் தள்ளி விடுங்கள்"

அரையன் இராஜராஜன் வேகமாக செயல்படுத்தினார். முன்னே குதிரை வீரர்களை அனுப்பினார். அடுத்தபடி தேர்களை அனுப்பினார். பிறகு யானைகளை வரிசையாக வரச் சொன்னார். மூன்று லட்சம் வீரர்கள் கொஞ்சமும் ஓய்வெடுக்காமல் மிக விரைவாக கீழைச் சாளுக்கியம் நோக்கி நகர்ந்தார்கள். கீழைச் சாளுக்கியம் நோக்கி அரையன் இராஜராஜன் வந்து கொண்டிருக்கிறார் என்ற செய்தி வாள் முதுகு படை வீரர்களுக்கு எட்டியது.

பிரம்மராயர் சந்தோஷமடைந்தார். பிலாடுடையார். "நல்லது நல்லது" என்று ஆரவாரித்தார்.

"அவர்கள் வந்து சேர்ந்ததும் படைஎடுப்பு நடத்துவோம், அதுவரை வேங்கியின் எல்லையில் இருப்போம்" என்று சொல்லி வேங்கியின் எல்லையில் கூடாரம் அடித்து தங்கினார்கள். ஒன்றரை நாளில் அரையன் இராஜராஜன் வந்து விடுவான் என்று சொல்லப்பட்டது. அந்த ஒன்றரை நாளுக்காக காத்திருந்தார்கள்.

இரவு நேரம் சுற்றி வீரர்கள் காவல் இருக்க தீப்பந்தங்கள் எரிய

உத்தம சோழ மிலாடுடையார் கூடாரத்திற்குள் அயர்ந்து படுத்துக் கொண்டிருந்தார். வழக்கம் போல அவருக்கு கால் குடைச்சல் ஏற்பட்டது. இரண்டு கால்களிலும் பலத்த காயங்கள் இருந்ததால் நரம்புகள் கிழிக்கப்பட்டதால் அவருக்கு வலி அதிகம் இருந்தது. தைலம் தடவி உருவி விட்டார்கள். அவர் வலி மறக்க, புகை போட்டார்கள்.

என்ன மூலிகை இது. எனக்கும் மயக்கம் வரும் போல இருக்கிறது" இராஜராஜ பிரம்மராயர் தன் மகனைக் கேட்டார்.

"தூங்குங்கள் அப்பா. இன்னும் ஒன்றரை நாள். போர் இருக்கிறதல்லவா என்று அவன் புகையை மட்டுப்படுத்தினான். ஆனாலும் அந்தப் புகையை கொஞ்சம் இராஜராஜ பிரம்மராயர் சுவாசித்தார். கண் இழுத்தது. படுத்துக் கொண்டார்.

இராஜராஜநரேந்திரன் எல்லோருக்கும் முன்னால் தனித்த கூடாரத்தில் புலிக்கொடி பறக்க அதற்குக் கீழே கட்டில் போட்டு தூங்கினான். ஒரு வீரனை கவரி வீசச் சொன்னான்.

அவர்கள் படுத்து உறங்குகிறார்கள் என்ற செய்தி கங்கை யாதவுக்கு கிடைத்தது.

"எடுத்தவுடனேயே அடித்தால் என்ன, அவர்கள் வரும் வரை ஏன் காத்திருக்க வேண்டும். கீழைச் சாளுக்கியத்தில் நுழைந்து விட்டார்கள் அல்லவா வேங்கிக்கு வரும் வரை ஏன் நிற்க வேண்டும். எதற்கு கோட்டைக்கு வரும் வரை காத்திருக்க வேண்டும். கிளம்புங்கள்" அவன் நூறு வீரர்களோடு கிளம்பினான். அவன் அதிகம் ஓசையெழாது அவர்கள் வாள் முதுகு படை இருக்கும் இடம் நோக்கி வந்தார்கள். அரைவட்டமாக சுற்றி நின்று கொண்டார்கள்.

வில் வீரர்களுக்கெல்லாம் நுனியில் எண்ணெய் சுற்றிய பந்தம் போடப்பட்டது. சரமாரியாக நெருப்பு பந்தங்கள் கூடாரங்கள் மீது விழுந்தன. பெரிய ஆரவாரம் ஏற்பட்டது. அடுத்த ஐம்பது பேர் கண்ணிமைக்கும் நேரத்தில் காவல் இருந்த வீரர்களை வெட்டி எறிந்து விட்டு உள்ளே ஓடி வந்தார்கள். எங்கே இராஜ நரேந்திரன் என்று தேடினார்கள்.

உத்தமசோழ மிலாடுடையார் எழுந்திருக்க முடியாத தூக்கத்தில் இருந்தார். இராஜராஜ பிரம்மராயர் தடுமாறி எழுந்தார். ஓடிப் போய்



இராஜராஜ நரேந்திரனுடைய கூடாரத்தை கலைத்தார். உள்ளே தூங்குபவனை இழுத்தார். வெளியே கொண்டு வந்தார். குதிரையில் ஏற்றினார்.

ஓடு. ஓடு. தெற்கு நோக்கி ஓடு. அரையன் இராஜராஜனை சந்திக்கும்வரை எங்கும் நிற்காதே. எந்த இடத்திலும் நிற்காதே. ஓடு என்று விரட்டினார். அவன் உட்காருவதற்குள் குதிரையின் பின்னே ஓங்கி அடித்தார். குதிரையில் அவன் தொங்கிக் கொண்டு ஓடினான். பிறகு அவன் கால் போட்டான். உடைவாள் கூட இல்லாது பரட்டை தலையுடன் எச்சில் ஒழுகும் வாயோடு அவன் தென்திசை நோக்கி ஓடினான்.

வாழ்க்கையில் முதன் முதலாக மரண பயத்தை உணர்ந்தான். தூங்கியது தவறோ என்று யோசித்தான். ஆனால் அதற்கு விடை தெரியவில்லை. அவன் பின்னே சில குதிரை வீரர்கள் வந்தார்கள்.

"உங்களுக்கு துணையாக வரச் சொல்லியிருக்கிறார்கள். ஓடுங்கள், எங்கும் நிற்காது ஓடுங்கள்" என்று சொல்ல,

"நாம் எதிர்த்து போரிட்டால் என்ன?" என்று கேட்டான். "அடித்து நொறுக்கி விடுவேன். போங்கள், உங்களுக்கு இப்போதைய உத்தரவு அரையன் இராஜராஜனை நீங்கள் போய் அடைய வேண்டும் என்பது தான். வீணாக எதுவும் பேசி வம்பில் மாட்டிக் கொள்ளாதீர்கள். உங்கள் உயிர் முக்கியம். அதற்காகத் தான் நாங்கள் வந்திருக்கிறோம். அங்கே தனித்தபடியாக இராஜராஜ பிரம்மராயர் போரிட்டு கொண்டிருக்கிறார்.

இராஜராஜ பிரம்மராயர் எழுந்து நின்று சகலரையும் வெட்டினார். கத்தி பலபக்கம் சுழன்றது. குதிரை வீரர்கள் குத்துப்பட்டார்கள். குதிரைகள் வெட்டுப்பட்டன.

"கங்கை யாதவ் வந்து விட்டானா, எங்கே அவன் எங்கே அவன்" குதிரையைத் தேடினார்.

குதிரை மேலே ஏறி உட்காரும் போது அந்த குதிரையை நோக்கி ஒரு அம்பு வந்து நெஞ்சில் தைத்தது. குதிரை சுருண்டு விழுந்தது. இறங்கி அவர் இன்னொரு குதிரையை நோக்கி ஓடினார். ஏற ஓடும் போது இன்னொரு அம்பு அவர் தோளில் தைத்தது. அவர் வேகமாக குதிரை ஏறி அம்பை பிடுங்கிப் போட்டார்.

"கங்கை யாதவ், எங்கே இருக்கிறாய், வாடா நாயே" என்று உரக்கக் கத்தினார். வாளை சுழற்றினார். நாலு தலை சுழன்று கீழே விழுந்தது. இன்னும் முன்னேற ஒரு அம்பு வலது புறத்தில் தைத்தது. கையை தூக்க முடியவில்லை. வாளை இறுக்க பிடிக்க முடியவில்லை. இன்னொரு அம்பு வயிற்றில் தைத்தது. இன்னொரு அம்பு நெற்றியை அடித்தது. இன்னொரு அம்பு நெஞ்சில் தைத்தது.

குதிரையில் இருந்தபடியே இராஜராஜ பிரம்மராயர் வஞ்சனையால் வீழ்ந்தார். கண் சொருகினார். இரத்தம் பீறிட்டது.

இரவு நேரம் தாக்குதல் நடத்துவது நல்ல மரபு இல்லை. நல்ல வீரர்களுக்கு அழகு இல்லை. இம்மாதிரியான கோழைத்தனமான தாக்குதல் மேலைச் சாளுக்கியம் அடிக்கடி செய்திருக்கிறது.

"ஞான சம்பந்தன் என்னை காப்பாற்றி விடுவாயா, ஞான சம்பந்தன் எனக்கு வலிக்கிறதடா. இந்த வலியை நீக்குவாயா, ஞான சம்பந்தன் எப்படியாவது காப்பாற்றி விடு. இராஜ நரேந்திரன் நல்லபடியாக சேர்ந்தார் என்று கேட்ட பிறகு நான் இறக்கிறேன். இன்னும் ஒரு நாழிகை என்னை எப்படியாவது காப்பாற்றி விடு" என்று கதறினார்.

ஞான சம்பந்தன் மெல்ல அம்புகள் எடுத்தான். நெஞ்சப் பக்கம் அம்பு எடுக்கும் போது பயமாக இருந்தது, மிக நிதானமாக, அமைதியாக உருவினான். சட்டென்று உள்ளுக்குள் விரல் வைத்து துணி போட்டு அழுத்தினான்.

ஆனால் இருதயம் அடிபட்டு இருந்தது. இருதயம் அடிபட்டது என்பதை துடிப்பு காட்டியது. கண்கள் சொருகின.

"முடியவில்லையடா முடியவில்லையடா"

"அப்பா. இறைவனின் பெயரை சொல்லுங்கள், இறைவனின் பெயரைச் சொல்லுங்கள். இறைவன் காப்பாற்றுவான்"

ஞானசம்பந்தன் அதே விஷயத்தைச் சொன்னான்.

"அப்பா, உங்களிடம் தான் இருக்கிறது. உயிரோடு இருக்க வேண்டும் என்று நீங்கள் தீர்மானித்தால் இருதயம் சரியாக இயங்கும். உங்களிடம் தான் இருக்கிறது. ஜாக்கிரதையாக இருப்பேன். இருப்பேன் இருப்பேன் என்று சொல்லுங்கள். போராடுங்கள் அப்பா, நான் சரி செய்து விடுகிறேன்"



அவன் இருதயத்திற்குள் பட்ட காயத்திற்குள் விரல் நுழைத்து மருந்தை எடுத்து இருதயத்தின் மீது தடவினான். இருதயம் ஒட்டிக் கொண்டது. இரத்த ஓட்டம் நின்றது. பிழைத்து விடுவார் என்று தோன்றியது. கூடாரத்தின் வெளிப்பக்கம் மிகப் பெரிய சத்தம் கேட்டது. மேலைச் சாளுக்கிய வீரர்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்தது. பல வீரர்கள் குத்துப்பட்டு துடி துடித்துக் கொண்டிருக்கிற சப்தம் கேட்டது. கங்கை யாதவ் முன்னேறிக் கொண்டிருந்தான்.

"போய் விடு, ஞான சம்பந்தா, போய் விடு. அவர்கள் முன்னேறி வருகிறார்கள். இங்கே நிற்காதே போய் விடு. அவர்கள் வைத்தியன் என்றும், பெண் என்றும் பார்க்க மாட்டார்கள். வெட்டிக் கொல்வார்கள். பேடிகள், போய் விடு" என்று சொல்ல, அவர்கள் இருவரும் மருந்துப் பெட்டியை எடுத்துக் கொண்டு அடுத்த கூடாரத்திற்கு ஓடினார்கள். ஒளிந்து கொண்டார்கள்.

கங்கை யாதவ் அவர் இருந்த கூடாரத்தை நாக்கி சிதிலப்படுத்தினான். வெட்ட வெளியில் மார்பு முழுதும் இரத்த விளாராக இராஜராஜ பிரம்மராயர் படுத்திருந்தார்.

"நீர் தான் இராஜராஜ பிரம்மராயரா, தீப்பந்த ஒளியில் அவர் முகத்தைப் பார்த்தான், உம்மை சந்திக்க வேண்டும் என்று நிறைய ஆசை. ஏகப்பட்ட போரில் ஜெயித்திருக்கிறீர்களாமே. உம்மை வெல்ல யாராலும் முடியாதாமே. வாள் முதுகு என்ற விஷயத்தை கண்டுபிடித்தது நீர் தானாமே. இப்போது எங்கே வாள் முதுகு காணோமே. மருத்துவம் நடக்கிறதா, எதற்கு மருத்துவம், போகப் போகிறீர் புரிகிறதா. இந்தப் படைக்கு தலைமை வகித்து மேலைச் சாளுக்கியம் நோக்கி வந்ததற்கு தண்டனையை இப்போது நான் தரப் போகிறேன்.

அந்தணரை கொல்வது பாவம் என்று எங்களுக்கும் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் நீர் அந்தணரல்ல. மறவன். அந்தணர் என்ற போர்வையில் கத்தி வீசி கொலை செய்கிற மறவன், எனவே உம்மை கொல்வதில் எந்த பாவமும் இல்லை. இதோ போய் வாரும். என் பெயர் கங்கை யாதவ். நான் மேலைச் சாளுக்கியத்தின் முக்கியமான தளபதி. ஜெயசிம்மனுக்கு அடுத்த படியான பதவியில் இருக்கிறவன். ஜெயசிம்மனுடைய பெயரால் நான் உன்னை குத்தி

கொல்லப் போகிறேன் என்று வாளை உயரத் தூக்கினான்.

இராஜராஜ பிரம்மராயர் கண்மூடிக் கொண்டார். எந்த இடத்தில் விரல் நுழைந்து ஞானசம்பந்தன் சரி செய்தானோ அந்த இடம் நோக்கி வாள் வேகமாகப் பாய்ச்சப்பட்டது. முதுகு வழியே நின்றது.

ஞானசம்பந்தன் துடித்து எழுந்தான். அவனை நாகரத்தினம் அழுத்திக் கொண்டாள்.

இராஜராஜ பிரம்மராயர் அடிபட்டு விட்டார் என்று தெரிந்து வீரர்கள் அந்தப் பக்கம் ஓடி வந்தார்கள். கங்கை யாதவ்வை சுற்றி தாக்கினார்கள். கங்கை யாதவ் குதிரையை திருப்பிக் கொண்டு தன் வீரர்களை "கிளம்புங்கள், கிளம்புங்கள்" என்று உத்தரவிட்டான். அந்த வீரர்கள் பின்னடைந்தார்கள். மேலை சாளுக்கிய வீரர்கள் அத்தனை பேரும் வேங்கியை நோக்கி போனார்கள். கோட்டைக்குள் நுழைந்து கதவை சாத்திக் கொண்டார்கள்.

ஞானசம்பந்தம் வாய் விட்டு அலறினான்.

"அப்பா, உன்னை காப்பாற்றியிருப்பேனே, உன்னை தூக்கி நிறுத்தியிருப்பேனே, இப்படி செய்து விட்டானே மகாபாவி" என்று அலறினான். தந்தையை கட்டிக் கொண்டு அழுதான். நாகரத்தினமும் அழுதாள்.

இராஜராஜ நரேந்திரனை, அரையன் இராஜராஜன் மிகக் கடுமையாக கண்டித்தார்.

"நீ செய்தது மிகப் பெரிய தவறு" என்றார்.

இன்னும் விரைவாக வேங்கி நோக்கி ஓடினார். இராஜராஜ பிரம்மராயர் சிதையில் அடுக்கப்பட்டு தயாராக இருந்த நிலையில் அரையன் இராஜராஜன் படைகள் அங்கு வந்து சேர்ந்தன.

மிலாடுடையாரை குதிரை மிதித்து கொன்று போட்டிருந்தது. உத்தம சோழ கோனை தலையை வெட்டி கொன்றிருந்தார்கள். அறுநூறு வீரர்களில் நூற்றி இருபது பேர் மட்டுமே எஞ்சியிருந்தார்கள். பல வீரர்கள் அடிபட்டு சாய்ந்து விட்டார்கள். பல பேர் தூக்கத்தில் இருக்கும் பொழுதே அம்பு எய்து கொல்லப்பட்டிருந்தார்கள். மிக மோசமான கொலை என்று பார்க்க பார்க்க தெரிந்தது.



அரையன் இராஜராஜன் பல் கடித்தார்.

"எப்போது வேங்கியை நோக்கி போகப் போகிறோம்" என்று இராஜ நரேந்திரன் கேட்டதும், திரும்பினார். ஓங்கி அவன் கன்னத்தில் அடித்தார்.

"இந்த பிணங்களின் மீது கால் வைத்து நீ மட்டும் போ வேங்கிக்கு" என்று சீறினார். இராஜராஜன் நரேந்திரன் கன்னத்தை பொத்திக் கொண்டு அந்த இடத்தை விட்டு அகன்றான்.

அவனை கைது செய்யும்படி கட்டளை இட்டார். அவன் பின் கை கட்டப்பட்டது. அவன் மரத்தடியில் சாய்ந்து உட்கார வைக்கப்பட்டான். அடுத்தது என்ன செய்வது என்று தெரியாமல் அரையன் இராஜராஜன் திகைத்துப் போனார்.

இது மிகப் பெரிய பலி. எடுத்தவுடன் இராஜேந்திர சோழருக்கு கிடைத்த மோசமான பரிசு, தவறான விஷயம். இராஜேந்திர சோழரின் கோபம் பன்மடங்கு பெருகும். ஆனாலும் அற்புதமான மூன்று உயிர்கள் இறந்து விட்டன. இறந்த இந்த வாள் முதுகு படை வீரர்கள் இரவு நேரம் உறங்கும் பொழுது கொல்லப்பட்டார்கள். இது நடந்திருக்கக் கூடாது. இராஜராஜ நரேந்திரனை அனுமதித்திருக்கக் கூடாது. அவர் செய்வதறியாமல் தவித்தார். மேற்கில் வெகு தொலைவிலே போன இராஜேந்திரருக்கு மூன்று நாட்கள் கழித்து அந்த செய்தி கிடைத்தது.

இராஜேந்திரர் பேய் போல அலறினார். வாளை எடுத்துக் கொண்டு நாலாபுறமும் அலைந்தார். "இராஜ நரேந்திரனை தூக்கிலிடு" என்று உரக்கக் கத்தினார்.

பரவை சமாதானப்படுத்தினாள். எல்லோரும் அமைதியாக இருந்தார்கள்.

இராஜ ராஜ பிரம்மராயரின் அஸ்தி சேகரிக்கப்பட்டு ஒரு கலசம் ஞான சம்பந்தனிடம் கொடுக்கப்பட்டது. ஒரு கலசம் அங்கேயே புதைக்கப்பட்டது. மேலே சிவலிங்கம் வைக்கப்பட்டது. வாள் முதுகு படை வீரர்கள் வாய் விட்டு அழுதார்கள். சோழர்களுக்கு போதாத நேரம் இது.

www.palsuvainovel.com



# 35

வீரமாதேவியும், பரமன் மழபாடியாரும் பத்தாயிரம் பேர் கொண்ட ஒரு படையோடு தெற்கு நோக்கி நகர்ந்தார்கள். நாகையை பார்க்க வேண்டுமென்று வீரமாதேவி ஆசைப்பட்டாள். தஞ்சையை இராஜராஜேந்திரன் பொறுப்பில் விட்டு விட்டு நாகையையும், மேல்பட்டினத்தையும் பார்த்து பிறகு இராமேஸ்வரம் போகலாம் என்ற எண்ணம் அவருக்கு இருந்தது. இதற்கு முன்பு கடலை பார்த்தது இல்லை. நாகைக் கடற்கரையில் நின்றபோது அவள் திகைத்துப் போனாள்.

இவ்வளவு தொலைவுக்கு நீரா, இது தான் கடலா, அதில் மரக்கலன்களா, எப்படி வருகிறார்கள்; எப்படி போகிறார்கள். பிரமித்தாள். நாகை விகாரத்திற்குள் படியேறினாள். அங்கு அவருக்கு சிறப்பான வரவேற்பு தரப்பட்டது.

பதினைந்து பிட்சுவுக்கு உணவளிப்பதாக ஒரு சாசனம் எழுதிக் கொடுத்தாள்.

இத்தனை பேருக்கு இங்கு என்ன வேலை, குறுக்கும் நெடுக்குமாக இளைஞர்களும், சிறுவர்களும் மொட்டைத் தலையும், காவியுமாக போனார்கள். இப்படிப் பட்ட சிறுவர்களை வைத்துக் கொண்டு புத்த மதத்தை வளர்க்க முடியுமா அல்லது இப்பொழுதிலிருந்தே வளர்க்க வேண்டும் என்று ஆரம்பிக்கிறார்களா, அவள் நாகை விகாரத்தை சுற்றிப் பார்த்து விட்டு வந்ததற்கு உண்டான காணிக்கையாக இருபத்தி ஐந்து பொன் கழஞ்சுகள் கொடுத்து விட்டு வெளியேறினார்.

"எனக்கு இந்த நாகை விகாரை பிடிக்கவில்லை. இந்த புத்த



பிட்சுக்களையும் பிடிக்கவில்லை. இவர்கள் யார் பார்வையிலும் கனிவு இல்லை. உண்மை இல்லை. ஒரு திருட்டுத்தனம் இருக்கிறது. இவர்கள் அத்தனை பேருமே உளவாளிகளோ என்று தோன்றுகிறது. நல்லவர்கள் போல் நடிக்கிறார்கள் என்று தோன்றுகிறது" அவள் இறங்கி வெளியே வந்தாள். சோழ தேசத்து வணிகர்கள் அவளை வரவேற்றார்கள்.

"நான் உங்களோடு தங்கப் போகிறேன்" என்று சொல்ல, அவர்கள் அவருக்கு ஒரு நல்ல வீட்டை வேகமாக சரி செய்து கொடுத்தார்கள். துணைக்கு பெண்டுகளை அனுப்பினார்கள். அவளுக்கு உணவு பரிமாறப்பட்டது.

"எத்தனை நாள் பயணம் ஸ்ரீ விஜயத்திற்கு?"

"காற்று நல்லபடி வீசினால் ஏழு நாள் பயணம்"

"ஸ்ரீ விஜயத்தின் பிரச்சனைக்கு என்ன காரணம்?"

"பேராசை காரணம். ஸ்ரீ விஜயத்தில் இந்துக்களும், கடாரத்தில் பௌத்தர்களும் அதிகமாக இருப்பதால் இவர்கள் இரண்டு பேருக்கும் நடுவே ஒரு அரசியல் குழப்பம் வந்து விட்டது. ஒற்றுமையாக இருந்தவர்கள் இரண்டுபட்டு நிற்கிறார்கள்.

ஸ்ரீ விஜயத்தின் வணிகத்தை பாழ் செய்ய கடற் கொள்ளைக்காரர்களை கடாரத்திலிருந்து அனுப்புகிறார்கள்.

"ஒரு நாவாயில் ஏறிப் பார்க்கலாமா?"

"மரக்கலத்திலேயே ஏறிப் பார்க்கலாம். மரக்கலம் என்பது நாவாயை விட பெரியது. நமது மேல்பட்டினத்தில் இருக்கின்றன. விதம் விதமான மரக்கலன்களை பார்க்கலாம். காற்றில் மட்டும் போவதும், துடுப்பு போட்டு காற்றோடு போவதும் இருக்கின்றன. பத்து துடுப்பு மரக்கலன்கள், முப்பது துடுப்பு மரக்கலன்கள் இருக்கின்றன.

"முப்பது துடுப்பு மரக்கலன்களில் என்னவெல்லாம் ஏற்றிக் கொண்டு போகலாம்"

"மூன்று யானைகளை ஏற்றிக் கொண்டு போகலாம்"

உடனே மேல்பட்டினம் (இராமநாதபுரம்) போக வேண்டும் என்று தீர்மானித்தாள். மறுநாள் காலையில் விடைபெற்றாள். மேல்பட்டினம் நோக்கிப் போனாள்.

சேர தேசத்து மரக்கலன்கள் ஆறு அங்கே நிற்க வைக்கப்பட்டிருந்தன. ஈழ தேசத்தில் முல்லைத் தீவுக்கு அருகே பதினாறு மரக்கலன்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்று அவருக்கு தெரிவிக்கப்பட்டது.

"இங்கிருந்து முல்லைத்தீவு எவ்வளவு தூரம்?" என்று கேட்க, பரமன் மழபாடியார் கை அமர்த்தினார்.

"தொடர்ந்து போய்க் கொண்டே இருக்கக் கூடாது. உங்கள் உடல்நலம் ஒத்துழைக்குமா என்று தெரியவில்லை"

"தாராளமாக ஒத்துழைக்கும். என் உடல்நலம் பற்றி பேசாதீர்கள். சிரமம் இருப்பின் நானே முடியாது என்று தெள்ளத் தெளிவாக சொல்லி விடுவேன்"

சுக்கானை இரண்டு பேர் கவனித்தார்கள். பாய்மரத்தை பத்து பேர் விரித்து திசை மாற்றினார்கள். வடக்கே இருந்து வீசிய காற்று வேகமாக இருந்ததால் மரக்கலம் நீரை கிழித்துக் கொண்டு ஓடியது.

"இராஜேந்திர சோழர் வந்தால் என் கதி என்னாகுமோ என்று தெரியவில்லை" என்று பரமன் மழபாடியார் நடுங்கியது போல் பேசினார்.

"இங்கு நடக்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் நானே பொறுப்பு. நீங்களல்ல. உங்களை ஒரு பொழுதும் இராஜேந்திரர் குறை சொல்ல மாட்டார்"

"ஏன் இதற்கு நான் தான் பொறுப்பு என்று சொன்னால் என்னைக் கூட குறை சொல்ல மாட்டார். மாறாக வெறுமே உட்கார்ந்து வெட்டிப் பொழுது போக்காமல் அடுத்தது என்ன செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறாரோ அதை நான் செய்கிறேன் என்று பாராட்டுவார்"

"கடற்பயணம் வயிற்றை பிரட்டும் என்று சொல்லுவார்களே, எனக்கு அப்படி ஒன்றும் ஆகவில்லையே" வியப்போடு வீரமாதேவி கேட்டாள்.

"தெரிந்தோ, தெரியாமலோ நீங்கள் மிகக் குறைவாகத் தான் சாப்பிடுகிறீர்கள். அரை வயிற்றுக்குத் தான் உணவு எடுத்துக் கொள்கிறீர்கள். இது மிகவும் நல்லது"

சூரியன் உதிக்கும் நேரம் அவன் கப்பலின் மேல் தளத்திலிருந்து



கிழக்கு நோக்கிப் பார்த்தான்.

'ஸ்ரீ விஜயம் அந்தப் பக்கம் தானே இருக்கும். விடக்கூடாது. போய் பார்த்து விடவேண்டும். கடல் கடக்க வேண்டும். என்னை கங்கை கரைக்கு கூட்டி போகாவிட்டால் என்ன. ஸ்ரீ விஜயம் நிச்சயம் அழைத்துப் போவீர். அதற்குத் தான் என்னை நான் தயார் செய்து கொள்கிறேன்' அவன் தனக்குத் தானே பேசிக் கொண்டான்.

விஸ்வநாத சாஸ்திரிகள் தலைமையில் உண்டான அந்தணர் கூட்டம் திருப்பதி மலையில் ஏறியது.

ஏழுமலை ஏறி இறங்கினால் நடுவே உள்ள அழகிய பள்ளத்தாக்கில் மகாவிஷ்ணு குடியிருக்கிறார் என்றும் அங்கே அவருக்கு தொண்டு செய்ய நிறைய வைஷ்ணவர்கள் இருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட் டது. புலிகளும், சிறுத்தைகளும், சிங்கங்களும் வழி முழுவதும் தென்பட் டன. பலத்த ஓசை கேட்டு பயந்து பின்வாங்கின. திருமலையின் உச்சியில் நின்று அவர்கள் வேதகோஷம் எழுப்பினார்கள்.

இந்தத் திருமலை மிக ரம்மியமான இடம், மறுப்பதற்கு இல்லை.

கண்ணப்ப நாயனார் கதையை மிக அழகாக சொன்னீர்கள். சரப சாஸ்திரிகளே மறுபடியும் கண்ணப்ப நாயனார் கதையை சொல்லுங்களேன். எங்கே வேதம் சொல்லும் பொழுதும் நான் வேத வித்து என்ற நினைப்பே இல்லை. கண்ணப்ப நாயனாருக்கு முன்னால் நான் கால் தூசு. இதே வேங்கட மலையில் கண்ணப்ப நாயனார் வந்தால் மிக வேகமாக உள்ளே போய் இறைவனை தொட்டு வணங்கி, முத்தமிட்டு விட்டு திரும்புவான் என்று தான் தோன்றுகிறது. இறைவனோடு ஒன்றியவர்களால் அப்படி இருக்க முடியும். மறுபடியும் அந்தக் கதையைச் சொல்லுங்கள்"

"அவனுக்கு திண்ணன் என்று பெயர். இளவரசு பட்டம் கட்டியதும் கன்னி வேட்டை. வேட்டையில் எது கடினமான வேட்டை என்று அவர்கள் பேசிக் கொள்ள, காட்டுப் பன்றியை வேட்டையாடுவது தான் கடினம் என்று அவர்களுக்கு தெரிந்தது.

காட்டுப் பன்றியை துரத்திக் கொண்டு திண்ணன் போக, மடக்கி கொல்ல, அதற்குள் வந்த நண்பர்கள் நாங்கள் பக்குவப்படுத்தித் தருகிறோம் என்று சொல்ல, அவர் மட்டும் மலையில் ஏற அங்கே

ஒரு சிவலிங்கம் இருந்ததை பார்த்தார். சிவலிங்கம் தெய்வம் என்று அவருக்கு சொல்லித் தரப்பட்டிருந்தது. அவர் கை கூப்பி வணங்கினார்.

இந்த ஒரு மலையில் இப்படி தனியாக அமர்ந்திருக்கிறீரே உமக்கு பயமாக இல்லையா. இந்த இடம் அசுத்தமாக வேறு இருக்கிறது, வெறும் இலைக் குப்பைகளையும், பூ குப்பைகளையும் போட்டிருக்கிறீர்களே. இப்படி தனியாக இருந்தால் பசிக்காதா, நல்ல உணவு வேண்டாமா. குடிக்க நீர் வேண்டாமா, எதுவுமே இல்லாமல் இருக்கிறீரே. அழுக்கடைந்து இருக்கிறீர்களே என்றார். மெல்ல கீழிறங்கினார்.

நண்பர்கள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவர் வேகமாக மாமிசத் துண்டுகளை அறுத்தார். தாமரை இலையில் வைத்துக் கொண்டார். பிறகு பொன்முகலி ஆற்றில் இறங்கினார். வாய் நிறைய தண்ணீர் எடுத்துக் கொண்டார். பிறகு வழியில் இருந்த பூக்களை பறித்துக் கொண்டு கொண்டையில் சொருகிக் கொண்டார். மெல்ல மேலேறி வந்து மாமிசத்தை முன்னே வைத்து. வாயில் உள்ள உமிழ் நீரை இறைவனுக்கு அபிஷேகம் செய்வித்து தலையில் சூடிக் கொண்டிருந்த காட்டு மலர்களை அந்த இறைவனுக்கு சூட்டி, 'சாப்பிடு, சாப்பிடு' என்று சொன்னார்.

அன்று இரவு முழுவதும் நான் துணையாக இருக்கிறேன் என்று அருகே படுத்துக் கொண்டார். மறுநாள் வேறு ஏதேனும் வாங்கி வருகிறேன் என்று கீழே இறங்கினார். அப்பொழுது அந்த சிவலிங்கத்திற்கு பூஜை செய்கின்ற சிவாச்சாரியார் மேலே வந்தார். மாமிசத் துண்டுகளை பார்த்து விட்டு தலையில் அடித்துக் கொண்டு சுத்தப்படுத்தினார். வில்வதளத்தையும், பூக்களையும் சிவன் மீது வைத்தார். பூஜை செய்து விட்டு விலகிப் போனார். இப்படி மாறி மாறி இரண்டு பேரும் பூஜை செய்து கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் சிவாச்சாரியாருக்கு யார் இந்த அடாத செயல்களை செய்வது. ஒரு நாள் உடும்பு கறி, ஒரு நாள் ஓணான் கறி, ஒரு நாள் மலைப் பாம்பு என்று விதம் விதமாக கொண்டு வந்து போடுகிறார்களே யார் இது என்று கோபமாக கண்டிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டார்.

சிவலிங்கத்திற்கு பின்னே இருக்கின்ற பெரிய மரத்தடியில்



உட்கார்ந்து கொண்டார். சுற்றிலும் புதர்கள் இருந்தது. அவர் உட்கார்ந்திருப்பது யாருக்கும் தெரியாது. அப்பொழுது வேடன் திண்ணன் கையில் மாமிசத்தோடு அங்கு வந்தான். வாயில் உள்ள உமிழ்நீரை துப்பினான். மலர்களை எடுத்து வைத்தான். மாமிச துண்டங்களை அவருக்கு உண்ணக் கொடுத்தான்.

"நன்றாக இருக்கிறது. மான் மாமிசம், என்ன ருசி பாருங்கள். நெய் ஒழுகுகிறது" என்றெல்லாம் பேசினான்.

சிவாச்சாரியார் தலையில் அடித்துக் கொண்டார்.

எழுந்து திட்டலாம் என்று போகும் பொழுது, சட்டென்று அவன் பயப்படுவது தெரிந்தது.

யாரைக் கண்டு பயப்படுகிறான் என்று திகைத்து உட்கார்ந்தார்.

"இரத்தம் வருகிறதே. உங்கள் கண்ணில் இரத்தம் வருகிறதே" அவன் அலறினான். ஓடிப்போய் பச்சிலைகளை பறித்துக் கொண்டு வந்தான். அவர் இருக்கும் பக்கம் வந்தான். அவர் அழுந்தி உட்கார்ந்து கொண்டார். மூலிகை இலைகளை பறித்தான் கசக்கினான். கண்ணில் வைத்தான்.

"இல்லையே, நிற்கவில்லையே" என்று பதறினான்.

ஏன் கண்ணில் இரத்தம் வருகிறது என்று தவித்தான். பிறகு யோசித்தான். ஒரு உறுப்பு போனால் அதை இன்னொரு உறுப்பு வைத்து சரி செய்து விடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே கண்ணுக்கு கண். இதோ என் கண்ணை தருகிறேன் என்று சொல்லி, அம்மை எடுத்து சரக்கென்று தன் கண்ணிலே குத்திக் கொண்டு விழியை தோண்டி எடுத்து அதை அவருடைய கண்ணிலே அப்பினான்.

சிவாச்சாரியார் தவித்துப் போனார்.

"மறுபடியும் இன்னொரு கண்ணில் இரத்தமா" என்று அவன் குதிக்க, என்ன செய்வது என்று தெரியாமல் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார். ஏதோ நாடகம் நடக்கிறது என்று தெரிந்து விட்டது. இன்னும் அழுந்த உட்கார்ந்து கொண்டிருந்தார். அப்போது மறுகண்ணில் வழியும் இரத்தத்தை எப்படி தீர்ப்பது. கை வசம் மருந்து இருக்கிறது. எனக்கு இன்னொரு மருந்து இருக்கிறது என்பதை அவன் புரிந்து கொண்டான். எனவே, அடுத்த கண் எங்கு

இருக்கிறது என்று தெரிய செருப்புக் காலை தூக்கி சிவலிங்கத்தின் கண்ணிலே வைத்தார். அம்பை வைத்து அழுத்தினார். அப்பொழுது சிவனுடைய கரம் ஒன்று சிவலிங்கத்திலிருந்து நீண்டது.

"நில்லு கண்ணப்ப" என்ற குரல் கேட்டது. திண்ணன் என்கிற அந்த வேடனை, சிவன் கையால் தொட்டு நிறுத்தி 'கண்ணப்ப' என்று அழைத்தார்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரையும் சிவன் தொடவில்லை. ஒருவருக்கும் பட்டப் பெயர் தரவில்லை. ஆனால் இந்த வேடனுக்கு 'கண்ணப்ப' என்று சொல்லி கையால் தடுத்து நிறுத்தினார். எல்லோருக்கும் கிட்டாத ஒரு மிகப்பெரிய பதவி, கடவுளுடைய கருணை அந்த வேடனுக்கு கிடைத்தது"

"சரபர் பேச்சை நிறுத்தினார்.

"அந்த சிவாச்சாரியார் கதி என்னவாயிருக்கும். அவர் படிப்பு மொத்தமும் குப்பையில் போட்டது போல் அல்லவா ஆயிருக்கும்"

"எனக்கும் அப்படித்தான் இருக்கிறது. அந்தணன் என்கிற அகம்பாவத்தை அந்த சிவாச்சாரியாருக்கு துடைத்தது போல எனக்கும் துடைத்து விட்டார்"

இறைவனை நேசிக்கின்ற உண்மையான பக்தி. என்னுடையது இல்லை என்று சொல்லுகின்ற ஒரு இடம் மனிதருக்கு வேண்டும். குறிப்பாய் அந்தணருக்கு வேண்டும். ஆனால் அதோ அந்த வேடனுக்கு இருந்திருக்கிறது. வெறும் படிப்பல்லவே வாழ்க்கை. வெறும் வேத கோஷம் அல்லவே இறை வழிபாடு. உள்ளுக்குள்ளே இருக்க வேண்டுமல்லவா. புத்தி பேசினால் போதுமா. மனதில் அலட்டிக் கொண்டால் போதுமா. அந்தராத்மாவில் ஆழத்தில் இறைவனோடு ஒன்றி இருப்பவருக்குத் தானே கண்ணை தோண்டி எடுத்து கையில் வைத்துக் கொள்ள முடியும். அதை இன்னொரு கண்ணில் அப்ப முடியும். இப்படிப்பட்ட விஷயத்தை, கதறுகின்ற வலி கொடுக்கிற விஷயத்தை சர்வ சாதாரணமாக அந்த திண்ணன் செய்திருக்கிறான் என்றால் மன்னிக்கவும் கண்ணப்பர் செய்திருக்கிறார் என்றால் எப்பேர்பட்ட பக்தி. எனக்கு துவண்டு போகிறதய்யா"

"என்னைவிட மிகப்பெரிய அந்தணர் அந்த வேடர் கண்ணப்பர் என்று தோன்றுகிறது. அவருக்கு முன்னால் நான் தூசு என்று



தோன்றுகிறது. எப்பேர்பட்ட மனித மனம், எப்பேர்பட்ட மகான்.

வேடனே விலகிப் போ என்று பல அந்தணர்கள் சொல்கிறார்களே, என்ன அபத்தம் அது. யாரை விலகிப் போகச் சொல்வது, எப்படி விலகிப் போகச் சொல்வது. பூணூலை கழற்றி கங்கையோடு விடப் போகிறேன். பஞ்ச கச்ச வேட்டி என்று இல்லாமல் வெறும் துண்டும், மேலே ஒரு சால்வையுமாகத் தான் இருக்கப் போகிறேன்.

சிவலிங்கம் என்பது ஒரு கல். கல் என்பது ஒரு அடையாளம். அந்த அடையாளத்தை வைத்துக் கொண்டு அதன் மூலமாக மனதை விருத்தி செய்து கொள்ள வேண்டும். இறைவனை தேட வேண்டும் என்று உபாயமாக அதைச்சொன்னார்கள். அது உபாயமே இல்லை. உண்மையில் இறைவன் என்று தெள்ளத் தெளிவாக வேடன் கண்ணப்பன் நினைத்திருக்கிறார், நமக்கு சிவலிங்கம் உபாயம். ஒரு தந்திர சாதனம். அதன் மூலமாக கடவுளை அடைய வேண்டும் என்று ஒரு வழியில் வைத்துக் கொண்டிருக்கிறோம். அடைய முடியாது அரைகுறையாக நிற்கிறோம்.

இறைவன் எங்கே, இதோ என் எதிரே என்று வேடன் கண்ணப்பன் பார்க்க, நமக்கு பார்க்க தெரியவில்லை.

விஸ்வநாத ஸ்ரௌதிகள் புலம்பினார். சரபர் அவரை தேற்றினார்.

அவர்கள் திருமலையிலிருந்து இறங்கி மேற்கொண்டு நடந்தார்கள். வழியில் வாள் முதுகுப் படை அடிப்பட்டதை பார்த்து தவித்தார்கள். இறந்தவர்களின் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு விளக்கேற்றினார்கள். தாகம் தனிக்க தகனம் செய்த இடத்தில் நீர் ஊற்றினார்கள். கல் நட்டு நீர் வார்த்தார்கள். பிறகு அங்கிருந்து கிளம்பி வேங்கியை நோக்கி போனார்கள். வேங்கியில் தடுத்து நிறுத்தப்பட்டார்கள்.

சேனாதிபதி கங்கை யாதவ் அவர்களை யார் என்று விசாரித் தான். தொண்டை நாட்டு அந்தணர்கள் காசிக்கு போகிறோம் என்று சொல்ல, அவர்கள் உடமைகள் அத்தனையும் சோதனை செய்யப்பட்டது.

சந்தேகப்படும் படியாக எதுவும் இல்லை, காய்கறிகள் நறுக்க கத்திகள் தான் வைத்திருக்கிறார்கள் என்று சொல்ல,

இரண்டு நாள் தங்கி விட்டு போகலாம் என்று மடக்கி நிறுத்தி வைக்கப்பட்டார்கள். இரண்டு நாளும் அரண்மனையில் உள்ள

அந்தணர்களோடு அவர்கள் வடமொழியில் உரையாடினார்கள். அந்த அந்தணர்கள் அவர்களை விட்டு விடலாம் என்று சொல்ல, கங்கையாதவ் சந்தேகத்தோடு அவர்களை விட்டு விட்டான். வேங்கியைத் தாண்டி அவர்கள் ஒட்ட தேசத்திற்குள் நுழைந்தார்கள்.

ஒட்ட தேசத்தில் விஷ்ணுவர்தன விஜயாதித்தன் ஒளிந்து கொண்டிருக்கிறான் என்ற செய்தி அவர்களுக்கு மெல்ல மெல்ல தெரிந்தது. ஆனால் எந்த இடம் என்று தெரியவில்லை. அதிகம் துருவி விசாரித்தால் சந்தேகப்படுவார்கள் என்பதால் விஸ்வநாத ஸ்ரௌதிகள் மௌனமாக இருந்தார். ஆனால் விஷ்ணுவர்தன விஜயாதித்தன் எங்கு ஒளிந்திருந்தான் என்பது இராஜேந்திரரிடம் சொல்லப்பட்டால் அது மிக உபயோகமான தகவலாக மறக்க முடியாத ஒரு விஷயமாக இருக்கும் என்பது அவருக்கு தெரிந்திருந்தது.

"ஒரு போரில் ஜெயிக்க வேண்டுமென்றால் தொண்டை நாட்டில் என்னவிதமான ஹோமங்கள் செய்வார்கள்" என்று ஒரு அ தணர் வந்து கேட்டார்.

"யார் கேட்பது?" என்று கேட்க,

"போரில் ஜெயிக்க வேண்டும் என்று நானா கேட்பேன். ஒரு அரசர் தான் கேட்டார்"

"எந்த அரசர்? அவருடைய நட்சத்திரம் என்ன, எந்த மாதம் பிறந்தார். நீங்கள் விசாரிக்கின்ற ஓரை செவ்வாய் ஓரை, செவ்வாய் பூமிகாரகன், சண்டைக்கு உரியவர், யுத்தம் பற்றி பேச இது சரியான நேரம் தான். ஆனால் நட்சத்திரத்தினுடைய பலம் தெரிய வேண்டும். எனக்கு அந்த அரசரை பார்க்க வேண்டும். உங்களுக்கு அதர்வண வேதத்தில் பரிச்சயம் உண்டா" என்று கேட்க, வந்த அந்தணர் உதடு பிதுக்கினார்.

"யாரேனும் பரிச்சயம் உள்ளவர்கள் இருக்கிறார்களா?" என்று கேட்க, "அப்படி யாரும் இருப்பதாக தெரியவில்லை" என்று சொன்னார்.

"எங்களில் பலபேருக்கு அதர்வண வேதத்தின் விஷயங்கள் கரதலப்பாடம். நான்கு வேதங்கள் தெரிந்த சதுர்வேதிகளும் இருக்கிறார்கள். கோட்டை முற்றத்தில், வயல் வெளியில், கோவில் வளாகத்தில் பூஜை செய்யப்பட வேண்டும். இவைகளில் ஏதேனும் ஒரு இடத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். இடம் சுத்தமாக



இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். நீங்கள் வெறுமே தகவல் தெரிந்து கொண்டு போய் அரைகுறையாக பேசாதீர்கள்"

"சரி, சரி, நான் போய் கேட்டு வருகிறேன்" என்று அந்த அந்தணர் விடைபெற்று போனார்.

அவருக்காக விஸ்வநாத ஸ்ரௌதிகள் காத்திருந்தார். இரண்டு நாளில் அந்த அந்தணர் திரும்பி வந்தார். "ஒட்ட தேசத்து அந்தணர்கள் வேறு எவரும் ஹோமம் செய்வதை அனுமதிக்கவில்லை. எகிறுகிறார்கள். நரபலி தர வேண்டும் என்கிறார்கள். பத்து வயது இளைஞனை அரச குலத்தவனை கொண்டு வந்து தரச் சொல்கிறார்கள். ஆடுகளும், எருமைக் கடாவும், ஒரு குதிரையும் பலி தர வேண்டும் என்கிறார்கள். ஆனால் நீங்கள் காசிக்கு போகிறீர்கள் என்று கேள்விப்பட்டு உங்கள் அனைவருக்கும் வஸ்த்ர தானம் செய்ய விரும்புகிறார்கள்"

விஸ்வநாத ஸ்ரௌதிகள் சம்மதித்தார்.

அந்த இளைஞன் சோர்வாக இருந்தான். கண்களில் தூக்கம் இருந்தது. உடம்பில் அழுக்கு இருந்தது. வெகு தொலைவில் இருந்து வந்திருக்கிறான் என்பது தெளிவாகத் தெரிந்தது.

ஹோமம் நடக்கிற இடம் வேறு. அவன் இருக்கின்ற இடம் வேறு. கிட்டத்தட்ட ஐம்பது காத தூரம் பயணப்பட்டிருந்தால் தான் இத்தனை அலுப்போடு இருக்க முடியும். அவனை குளித்து விட்டு வரச் சொன்னார்கள். சரியாக உணவு எடுத்துக் கொள்ளாதது போல வயிறு குழிந்திருந்தது. விலா எலும்புகள் தெரிந்தன. சங்கல்பம் செய்த பிறகு அவனை தூங்க அனுமதித்தார்கள். அந்த மாளிகையின் மேலே உள்ள அறையில் அவன் அயர்ந்து தூங்கினான்.

அவனுடைய மெய்க் காப்பாளனிடம் விஸ்வநாத ஸ்ரௌதிகள் பேச்சுக் கொடுத்தார். அவருக்குள் மெல்லியதாக ஒரு திட்டம் மலர்ந்தது.

"வாழ்க்கையில் சொல்ல வண்ணா கஷ்டங்கள் பட்டிருப்பீர்கள். உங்கள் மனோ தைரியத்தால் அத்தனையும் தாண்டி விட்டீர்கள்" என்று அந்த படை வீரனுக்கு அவர் ஜோசியம் சொல்ல ஆரம்பித்தார். அந்த ஜோசியம் உலகத்திலுள்ள அத்தனை பேருக்கும் பொருந்தும் ஜோசியம். ஆனால் அது அவனுக்குத் தெரியவில்லை.

"மனைவியைப் பற்றி உங்களிடம் கேட்க வேண்டும்" அவர்

தாழ்ந்த குரலில் இரகசியமாகக் கேட்டார்.

"என்ன செய்வது சில பேர் தலையெழுத்து அப்படியாகத் தான் இருக்கிறது"

"ஆமாம் அய்யா, என் தலையெழுத்து மோசமாக இருக்கிறது. எனக்கு விடியலில் இருந்து நடுஇரவு வரை இங்கு காவல் இருக்க வேண்டியிருக்கிறது"

"அப்படி யாரை காவல் காக்கிறீர்கள். பெண்கள் நிறைய பேர் இருக்கிறார்களா"

"பெண்கள் காவல் காக்க வேண்டிய அவசியமே இல்லை. பெண்களை விட மோசமாக பயப்படும் ஒரு சிறுவனை கண்காணிக்க வேண்டியிருக்கிறது"

"ஓட்ட தேசத்து இளவரசனா?"

"இல்லை. கீழைச் சாளுக்கியத்திலிருந்து ஓடி வந்தவன், எனக்கு கீழைச் சாளுக்கியம் பற்றி எதுவுமே தெரியாது"

விஸ்வநாத ஸ்ரௌதிகள் முகம் மலர்ந்தார்.



# 36

சொக்க வைக்கும் கூத்து சொக்கக் கூத்து. சொக்கன் ஆடிய கூத்து சொக்கக் கூத்து.

சொக்கன் என்று அழைக்கப்படும் சிவபெருமான் இந்த உயிரினங்கள் தோன்றுவதற்கு நடனமாடினார். அவருடைய ஒவ்வொரு அசைவிலிருந்தும் ஒவ்வொரு விதமான உயிரினங்கள் தோன்றின. பிரபஞ்சத்திலிருந்து பூமியில் இறங்கின. இங்கே



உயிரினங்கள் உலாவுகிற வரை சிவன் நடனம் தொடரும். சிவன் நடனம் நின்றால் எல்லா உயிரினங்களும் அழிந்து விடும். உயிரினங்களின் அசைவு தான் சிவநடனம். சிவம் என்பது உருவமல்ல. ஒரு பெரிய சக்தி. பூமியை சுற்றியிருக்கிற சக்தி. பூமியில் உள்ள அசையும் பொருள்கள் அத்தனையிலும் கவிழ்ந்திருக்கின்ற சக்தி. இந்த பூமியை அசையும் பொருளாக ஆக்கியதால் தான் சிவன் நடனமாடுபவனாக சொல்லப்படுகிறார். நடனம் என்பது இடையறாது அசைவு, அதே தான் பூமியும். பூமி மட்டும் சுழன்று கொண்டிருக்கவில்லை. அது தன்னைத் தானே சுழன்று கொண்டிருப்பதில் அதிலுள்ள கோடிக் கணக்கான உயிர்கள் முன்னும், பின்னும், மேலும், கீழும், இடதும், வலதும் பறந்தும், நீந்தியும் தங்கள் அசைவை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. சிவனை தெரிவித்துக் கொண்டிருக்கின்றன. சிவன் அசைவே பூமியின் அசைவு.

அதை சொக்கக் கூத்து என்கிற வகையில் தளிச்சேரி பெண்டினர் நடனமாடப் போகின்றனர்.

ஒரு பெரிய பானையில் ஓலைகள் போடப்பட்டிருக்கும். அந்த ஓலை நறுக்கில் ஏதேனும் ஒரு உயிரினத்தின் பெயர் எழுதப்பட்டிருக்கும். வண்டு, நரி, யானை, குதிரை, மான், முதலை, மீன் என்றெல்லாம் எழுதப்பட்டிருக்கும். பாம்பும், தேளும் கூட சொல்லப்பட்டிருக்கும். அந்த தளிச்சேரிப் பெண் அதை வாங்கி பார்த்துக் கொண்டு சில நிமிடங்கள் தியானத்தில் இருப்பாள்.

பாம்பு எப்படி நகரும். தியானிப்பாள், யானை எப்படி நகரும். செய்து பார்த்துக் கொள்வாள். புலி எப்படி நகரும். நடந்து பார்த்துக் கொள்வாள். மீனும், முதலையும் எப்படி அசையும். அதையும் ஒவ்வொரு பெண்களும் பார்த்துக் கொள்வார்கள். எந்தப் பெண்ணுக்கு எந்த ஓலை வந்ததோ, அந்த ஓலையில் என்ன எழுதப்பட்டிருக்கிறதோ அதே விதமாக அவர்கள் மாறுவார்கள். ஒவ்வொருவராக வந்து நிற்பார்கள். அந்த அசைவை வைத்துக் கொண்டு ஜனங்கள் அது என்ன என்பதை சொல்லி விடுவார்கள் மிகச் சிறப்பாக அசைந்து வந்தால், நடனமாடினால் ஜனங்கள் ஆரவாரித்து கை தட்டுவார்கள். சில சமயம் குலவையும் போடுவார்கள். அவர்கள் கூக்குரலிலிருந்து நன்றாக நடனமாடியிருக்கிறோம் என்று தெரிந்து கொள்ளலாம்.

முதலில் வந்தவளை பார்த்து யானை யானை என்று

கூவினார்கள். அச்சு அசல் யானையினுடைய அந்தனை ஆட்டமும் அவள் செய்து காண்பித்தாள். காது மடல் அசைவிலிருந்து பின்கால் சற்று தூக்கி நிற்பது முதல், துதிக்கை ஆட்டுவது வரை, துழாவிக் கொண்டிருப்பது வரை விதம் விதமாக செய்து காட்டினாள், ஜனங்கள் பெரிதாக ஆரவாரம் செய்தார்கள்.

அவள் குனிந்து வணங்கி விட்டு நகர்ந்தாள்.

அடுத்தது பாம்பு ஊர்ந்து வந்தது. 'சர்ட்' என்று சீறியது. ஜனங்கள் பயந்தார்கள். அதற்கும் ஆரவாரம் செய்தார்கள். புலி உருமிற்று, கரடி குதித்தது. நரி குழைந்து வந்தது. மீன் முன்னும், பின்னும் அலைந்தது. அந்த மீன் வேடம் போட்டவள் வேறொரு தந்திரம் செய்திருந்தாள். மேற்கூரையில் கயிறு கட்டி அதில் பறவை உருவம் தொங்க விட்டிருந்தாள்.

அந்த மீன் பறவைக்கு அருகே வரும் போது அந்தப் பறவை சர்ட் என்று கீழே குதிக்கும், அப்போது அந்த மீன் துள்ளி குதித்து விலகி ஓடும். இது மீன்கொத்தி மீனை வேட்டை ஆட முற்படுவதும், மீன் தப்பித்து ஓடுவதும் அங்கு அழகாக சொல்லப்பட்டிருந்தது. அதற்கும் ஜனங்கள் எகிறி குதித்து வாழ்த்து தெரிவித்தார்கள்.

தீப்பந்தங்கள் எல்லாம் மெல்ல, மெல்ல மறைக்கப்பட்டது. இருள் சூழ்ந்தது. ஒரே ஒரு இடத்தில் மட்டும் தீப்பந்தம் மின்னியது. அதுவும் மெல்லிய துணியால் மறைக்கப்பட்டிருக்க வெறும் வெளிச்சமாக இருந்தது. நடுவே சிவன் வந்து நின்றார். சிவன் காலைத் தூக்கி நடனமாடினார். அருகே உமா தேவியார் வியந்து பார்த்துக் கொண்டிருந்தார். விநாயகரும், முருகனும் பிரமித்து பார்த்துக் கொண்டிருக்க சிவன் சுற்றி சுற்றி நடனமாடினார். வேகமாக நடனமாடினார். எல்லா பிராணிகளுடைய அசைவையும் அந்த ஒரு சிவனே சட் சட்டென்று மாற்றிக் காட்டினார். வந்து உமாதேவியாருக்கு அருகே உட்கார்ந்தார். ஒவ்வொரு மிருகமாய் உள்ளே நுழைந்தன. பிளிறின. உருமின, கூவின, குதித்தன, அவருக்கு அருகே நின்று, மண்டியிட்டன. எல்லா உயிரினங்களும் மண்டியிட சிவன் எழுந்து நின்று அவைகளை ஆசிர்வதித்தார்.

"ஓம் நமச்சிவாய, ஓம் நமச்சிவாயா, ஓம் நமச்சிவாய" என்று எல்லோரும் பாடினார்கள்.

நாட்டிய நாடகம் இனிதே முடிந்தது. எல்லோர் மனதிலும் சிவ



தாண்டவமே நின்றிருந்தது. உலகம் முழுவதும் இறைவன் படைப்பு, நீயும், நானும் இறைவன் படைப்பு. இங்கு இறைவனல்லாது எதுவும் நகராது என்று தெள்ளத் தெளிவாக அவர்களுக்கு புரிந்தது.

"எல்லா ஜனங்களுக்கும் ஒரு விண்ணப்பம்" தலைக்கோலி விமலை உரத்த குரலில் கலைந்து போகும் ஜனங்களை இழுத்து நிறுத்தினாள்.

"இன்று நீங்கள் எல்லோரும் சொக்கனின் நடனத்தை கண்டு ரசித்தீர்கள். சொக்க வைக்கும் நடனத்தை பார்த்து ஆதரித்தீர்கள். உங்கள் அன்புக்கு நன்றி. வரும் வாரம் நாங்கள் எல்லோரும் தஞ்சையிலிருந்து இடம் பெயர்ந்து ஜெயங் கொண்டம் நோக்கிப் போகிறோம். இங்கு மிகச் சிலரே இருப்பார்கள். அவர்கள் கோவில் பணி செய்வார்கள். நடனமாட என்று யாரும் இருப்பதற்கு இல்லை. மத்திம வயது உடையவர்கள் சுவாமி புறப்பாட்டின் போதும், அரசர் வரும் போதும் மெல்லியதாய் நடனமாடுவார்களே தவிர இப்படி சொக்க நடனம் நடக்காது.

நான் இங்கு வந்து நாற்பது வருடம் ஆகிறது. என் மகள் நடனமாடி ஓய்ந்து போய் என் பேத்தி நடனமாடிக் கொண்டிருக்கிறாள். அவளுடைய நடனத்திற்கு நீங்கள் பேராதரவு தெரிவித்தீர்கள். என் பேத்திக்கு ஜெயங்கொண்டம் வரச்சொல்லி உத்தரவாகி இருக்கிறது. பேத்தியை மட்டும் அனுப்பி நாங்கள் என்ன செய்வது. எனவே, என் மகளும் நானும் அவளோடு ஜெயங்கொண்டம் பயணப்பட போகிறோம்"

"இங்கு சில தேவரடியார்களே இருப்பார்கள். அவர்கள் கோவில் வழிபாட்டின் போதும், அரசர் வரும் போதும் மெல்லியதாய் நடனமாடுவார்களே தவிர இப்படி சொக்க நடனமெல்லாம் நடக்காது, சொக்க நடனம் பார்க்க விரும்பினால் நீங்கள் ஜெயங்கொண்டம் வர வேண்டியிருக்கும். நாங்கள் வரும் வாரம் மூட்டை முடிச்சுகளுடன் மாட்டு வண்டி ஏறி ஜெயங்கொண்டம் பயணப் படுகிறோம். இதுவரை எங்கள் நடனத்தை ஆதரித்து எங்களை கௌரவித்த தஞ்சை மக்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்"

"வாழ்க இராஜேந்திரர், வாழ்க தஞ்சை மாநகரம். வாழ்க தஞ்சாவூர் மக்கள்" என்று உரத்த குரலில் முழங்கினாள்.

சட்டென்று முகத்தை பொத்திக் கொண்டு அழத் துவங்கினாள். நாற்பது வருடகாலம் வாழ்ந்து வந்த பூமியை விட்டு பிரிவது என்பது எளிதான விஷயமா. இல்லவே இல்லை. ஜனங்களும் கண் கலங்கினார்கள். ஆனால் என்ன செய்வது இது அரச கட்டளை. மீற முடியாது.

தஞ்சையிலிருந்தும், திருவாரூரிலிருந்தும், நாகைப் பட்டினத் திலிருந்தும், திருவெண் காட்டிலிருந்தும் வந்தோமல்லவா. அதே போல தஞ்சையிலிருந்து ஜெயங்கொண்டம் போகப் போகிறோம். அரசன் எங்கு இருக்கிறானோ அங்கு தான் மக்கள் இருக்க வேண்டும். தஞ்சை நெரிசலாகி விட்டது. இன்னும் நல்ல முறையில் வாழ்க்கை நடத்த வேண்டுமென்றால் ஜெயங் கொண்டத்திற்குத் தான் போக முடியும். ஜெயங்கொண்டம் ஒரு திட்டமிடப்பட்ட நகரம். அங்கு வாழ்க்கை இன்னும் சௌகரியமாக இருக்கும்.

தஞ்சையை பிரிவது என்ற வேதனையை சகித்துக் கொண்டு அங்கே புகுந்து விட்டால் வெகு சீக்கிரத்தில் தஞ்சையை மறந்து விடலாம், ஆனால் தளிச்சேரி பெண்டுகள் நகர்ந்து போன போது ஊரே நகர்ந்து போனது போல ஒரு பிரமை உண்டாயிற்று. அவர்கள் நகர பட்டுத்துணி தைப்பவர்கள் நகர்ந்தார்கள். நடன உடை தைப்பவர்கள் நகர்ந்தார்கள். இரத்தினங்கள் வைத்து தைப்பவர்கள் நகர்ந்தார்கள்.

"என்றேனும் ஒரு நாள் இடம் மாறி போகப் போகிறோம். அதற்கு இந்த கூட்டத்தோடே நகர்ந்து விடலாமே" என்று சிலரும் கிளம்பினார்கள்.

போகும் வழியில் சாப்பாட்டு கவலையே வேண்டாம். நாங்களும் கூடவே வருகிறோம்" என்று சோற்றுக்கடை அந்தணர்கள் பயணப்பட்டார்கள்.

"என்ன, ஒரு மாடை அதிகமாக நீங்கள் தர வேண்டியிருக்கும். வண்டி சத்தம் யார் கொடுப்பது" என்று கேட்டார்கள்.

இவர்களுக்கு முன்னே போய் நின்று அடுப்பு மூட்டி கதம்ப சாதமும், புளியஞ்சாதமும், தயிர் சாதமும், இலை இலையாய் வழங்கினார்கள். காசு கவனமாய் வாங்கி போட்டுக் கொண்டார்கள்.

"நெல்லு கொடுத்து சோறு வாங்குவது, பாத்திர பண்டங்களை வைத்து சோறு வாங்குவது என்பது வேண்டாம், எங்களுக்கு மாடை



தான் வேண்டும். காசு தான் முக்கியம்" என்றார்கள்.

சோழ தேசத்தில் மெல்ல மெல்ல பண்டமாற்றுக்கு பதிலாக காசுனுடைய ஆட்சி அதிகமாயிற்று.

ஓவியக்காரனின் மகன் ஒருவன் வெள்ளை கண்ணம் அடித்த பலகையில் மாடையாலேயே லஷ்மி உருவம் செய்திருந்தான். நான்கு கரங்களுடைய லஷ்மியின் வலது கையிலிருந்து மாடை அருவி போல் பொங்கியது.

நூற்றி அறுபது மாடையில் செய்யப்பட்ட அந்த ஓவியத்தை ஒரு தளிச்சேரி பெண் இருநூற்றி பத்து மாடை கொடுத்து வாங்கிக் கொண்டாள். அவள் அதை பார்த்துக் கொண்டிருந்த நேரம் மரத்திலிருந்து பூ கழன்று அதன் மீது விழுந்தது. அவள் பரவசமானாள்.

"ஓகோ என்று சம்பாதிக்கப் போகிறாய்" என்று பார்த்தவர்கள் எல்லாம் வியந்தார்கள். மற்றவர்களிடமும் சொன்னார்கள். எல்லோருக்கும் புதிய ஊருக்குப் போய் நிறைய சம்பாதிக்க வேண்டும் என்ற ஆவல் இருந்தது.

"மாடையில் நடராஜர் பெருமானுடைய நடனத்தை செய். பின்பக்கம் விதம் விதமான வர்ணம் தீட்டி பிரளயகால வேகம் போல சிகப்பும், கருப்பும் கலந்து அலைகள் பொங்குவதைப் போல செய்து விடு. பிரளயகால நடனமாக அது காட்சியளிக்கட்டும்" என்று ஒரு அந்தணர் யோசனை சொல்ல, அவன் உடனடியாக வேலையில் இறங்கினான்.

அந்த அந்தணருக்கு ஐந்து மாடை காசு கொடுத்தான். வழியெல்லாம் பேச்சும், சிரிப்புமாக அவர்கள் ஜெயங்கொண்டம் நோக்கி போனார்கள். ஜெயங்கொண்டம் போய் கோவிலை பார்த்ததும் திகைத்துப் போனார்கள். ஊரை சுற்றி சுற்றி வந்தார்கள். குறுக்கும், நெடுக்குமாய் போகின்ற கால்வாய்களில் இறங்கி முகம் கழுவிக் கொண்டார்கள்.

"எங்கள் வீட்டின் வலது பக்கமும் கால்வாய் போகிறது. இடது பக்கமும் கால்வாய் போகிறது. குளுகுளுவென்று இருக்கிறது" என்று ஒருவள் பூரித்துக் கொண்டாள். தளிச்சேரி பெண்டுகளுக்கு தனியாக வீடுகள் ஒதுக்கப்பட்டன. அவர்களுக்கு துணையாக இவ்வளவு ஆட்கள் தேவைப் படும் என்று சிற்பிகள் அறிந்திருக்கவில்லை. எனவே, தளிச்சேரி

பெண்டுகள் இருக்கும் இடத்திற்கு நேர் பின்னாக ஒரு புளியந்தோப்பில் திடமாக ஓலைக் குடிசைகள் எழுப்பி சுற்றிலும் மண்சுவர் அமைத்து தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தார்கள்.

ஜெயங்கொண்டம் சட்டென்று தீப்பிடித்துக் கொண்டது போல பரபரப்பாக மாறியது.

"சிற்பிகளிடம் மாடைகளே இல்லை" ஒருவர் சொன்னார்.

"அய்யோ, பிறகு நாம் எப்படி பிழைப்பது" இன்னொருவர் கேட்டார்.

"எல்லாம் பொற் கழஞ்சுகளாக வைத்துக் கொண்டிருக்கிறார்களய்யா. அந்த பொற் கழஞ்சு மதிப்பு என்னவென்று அவர்களுக்கு தெரியவில்லை. ஒரு மரக்கட்டை செதுக்க நாலு மாடை கொடுத்தால் போதும். அவன் இரண்டு பொன் கழஞ்சு கொடுக்கிறான். ஆட்டு உரலுக்கு மர ஆப்பு அடித்து கொடுத்து விடுகிறேன். நாலு கைகள் பிடிக்கும் அளவுக்கு நீள ஆப்பு, இரண்டு பேர்கள் சுழட்டலாம். இன்னும் வேகமாக அரவையாகும். எனக்கு காசு எதுவும் கொடுக்க வேண்டாம். ஒரு முப்பது நாளைக்கு மூன்று இடங்கி கொடுத்தால் போதும்" நேர் எதிரே இருக்கின்ற உடையார் குடியிலிருந்து அரிசியும், பருப்பும், காய்கறிகளும் வந்தன. வெற்றிலை கூடை கூடையாய் வந்து இறங்கியது. மக்கள் வரத்து அதிகரிக்க விலை அதிகமாகியது.

"ஒரு கழஞ்சு பொன்னுக்கு ஐந்து கலம் நெல், தஞ்சையில் விற்கிறதடா" ஒருவர் உரக்கக் கத்தினார்.

"அது அந்தக் காலம். இப்பொழுது போய் கேள். நீங்களெல்லாம் கிளம்பி வந்து விட்டீர்கள் அல்லவா தஞ்சையில் வாங்குவதற்கு ஆள் இல்லை. எல்லா சரக்குகள் எடுத்துக் கொண்டு காவிரியில் படகேறி துறைமுக நகரங்களுக்கு போகிறார்கள். ஒரு கழஞ்சுக்கு தஞ்சையில் நாலு கலம் நெல். இங்கு மூணு கலம்நெல், விலை ஏற்றுவதற்கு உங்களுக்கு ஏதேனும் காரணம் வேண்டும். ஆட்கள் இல்லையென்றாலும் விலை ஏறும், ஆட்கள் வந்திருந்தாலும் விலை ஏறும், வியாபாரிகள் கொள்ளை லாபம் அடிக்கின்ற காலம். யுத்த காலம்"

"என்ன எங்களுக்கு கொள்ளை லாபமா, அவனவன் உயிரை பணயம் வைத்து வருகிறானய்யா. போன மறவன் திரும்பி வருவான்



என்று கூட யூகிக்கலாம். ஆனால் வாணிபம் செய்பவன் திரும்பி வருவான் என்பது சொல்லவே இயலாது. இவர்களுக்கெல்லாம் வணிகன் என்றால் இழிவு, நோகாமல் சம்பாதிக்கிறவன் என்று ஒரு அலட்சியம். கொள்ளை அடிக்கிறோம் என்று ஒரு கடுகடுப்பு. ஆனால் நமது கஷ்டம் நமது வீட்டு நாய்க்கு கூட தெரியாது.

மறவர்கள் யுத்தத்திற்கு போக வேண்டுமே என்று அலுத்துக் கொள்கிறார்கள். தளிச்சேரி பெண்கள் நடனமாட ஆட்களே இல்லையென்று அலுத்துக் கொள்கிறார்கள். சட்டை தைப்பவர்களே வரவில்லை என்று தையற்காரர்கள் அலுத்துக் கொள்கிறார்கள். கிழிந்த சட்டைதான் தைத்துக் கொண்டிருக்கிறோம் என்று நொந்து கொள்கிறார்கள்.

பஞ்சமர் உதவியுடன் உழுது பயிரிடல் அமோகமாக நடந்து கொண்டிருந்தது. இப்பொழுது அத்தனை பஞ்சமர்களும் போருக்கு போய் விட, களை பிடுங்குதலும், உரம் போடுதலும் நாங்களே செய்கிறோம் என்று உழவர்கள் அலுத்துக் கொள்கிறார்கள்.

சோழ தேசத்தில் சந்தோஷமாக இருப்பது யார் சொல்லுங்கள். கடலோடிகள், கடலில் மீன் பிடிப்பவர்கள், மரக்கலன் செலுத்துபவர்கள், இவர்களுக்கு அதிகமாக கூலி கொடுத்து வணிகர்கள் விலைக்கு வாங்குகிறார்கள். சேர தேசத்திலிருந்து வந்த மரக்கலன்களை பழுது பார்த்து மறுபடியும் பயணப்பட தயாராக இருக்கிறார்கள்"

"ஸ்ரீ விஜயம் போகக் கூடாது என்று சொல்லி விட்டார்களே"

"அதனால் என்ன, இலங்கைக்கு போகலாமே, இலங்கையை சுற்றிக் கூட வருவதில்லை. இடையே புகுந்து விடுகிறார்கள். முல்லைத் தீவில் தங்கி பிறகு மறுபடியும் கிளம்புகிறார்கள். நாகை, திருக்கடல் மல்லை, மயிலாப்பூர், திருவொற்றியூர் என்று தங்குகிறார்கள். சேர தேசத்திலிருந்து மூன்று மரக்கலன்களில் பானை பானையாக மருந்துகள் போயிருக்கின்றன. திருவொற்றியூர் போய் ஒதுங்கி இருக்கின்றன. திருவொற்றியூர் தாண்டியும் ஒரு மரக்கலன் போயிருக்கிறது.

ஒரு நாளைக்கு ஒரு பொன் கழஞ்சு, ஒரு நாள் பிடித்த மொத்த மீனையும் பத்து மாடைக்கு விற்றவர் இப்பொழுது ஒரு பொன் கழஞ்சு வாங்குகிறார். இத்தனைக்கும் இரண்டு வேளை சோறு போட்டு அதற்கு மேல் கழஞ்சுகள் கொடுக்கிறார்கள்"

"இன்னொரு குழுவினரும் சந்தோஷமாக இருக்கிறார்கள்"

"யாரது?"

"பாண்டிய தேசத்து கூலிகள், எந்த வேலை சொன்னாலும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். மரம் அறுக்க வேண்டுமா, கல் தூக்க வேண்டுமா, காட்டுக்கு போய் விறகு வெட்டி வர வேண்டுமா, மாடுகள் மேய்க்க வேண்டுமா, ஆடுகளை அறுக்க வேண்டுமா, எதற்கும் தயாராக இருக்கிறார்கள்"

"ஆமாம் அவர்களுக்கு பாண்டிய தேசத்தில் எந்த வேலையும் இல்லை"

"வேலை இல்லையா, வீடே இல்லை. இங்கு ஓலை குடிசை பார்த்ததும் துள்ளி குதிக்கிறார்கள். இனிமேல் வெட்ட வெளியில் தூங்க வேண்டியதில்லை என்று சந்தோஷப் படுகிறார்கள்"

"அய்யோ பாவம். சரி போர் எப்பொழுது முடியும்?"

"இப்போது அல்ல. இன்னும் இரண்டு வருடங்கள் ஆகும். இராஜேந்திர சோழர் தஞ்சை வந்து விட்டு உடனடியாகக் கிளம்புவார். அல்லது ஜெயங்கொண்டம் வந்து அரண்மனையை திறந்து அங்கு சிறிது நாள் இருந்து விட்டு பிறகு பூம்புகாரிலிருந்து கிளம்புவார்.

ஸ்ரீ விஜயப் படையெடுப்பு முடிந்தால் தான் போர் ஓய்ந்ததாக அர்த்தம். கங்கைக்கரை படை எடுப்பு முடியவே இரண்டு வருடங்கள் ஆகும். அதற்குப் பிறகு கடல் பயணம் நேரம் பார்த்து போக வேண்டும். ஸ்ரீ விஜயம் போய் இறங்க வேண்டும். அங்கு தங்கி கொள்ளை அடித்து அரசியல் மாற்றங்கள் செய்து மீண்டு வர ஒரு வருடம் ஆகும். ஆக, நான்கு வருடங்களுக்கு பிறகு தான் சோழ தேசம் பழைய நிலைக்கு வரும்"

"அப்போதும் அரிசி விலை குறையாது" ஒரு மத்தளக்காரர் நெட்டுயிர்ப்பாக பேசினார்.

"ஏன்?"

"அப்பொழுது உள்ளுக்குள்ளே நிறைய பொன்னும், பொருளும் வந்து விடும். ஆறு மாடைக்கு கிடைத்திருந்த நெல் ஒரு கழஞ்சு கொடுத்தாலும் கிடைக்காது. ஏனெனில் எல்லோரிடமும் பொன்னும், மாடையும் குவிந்து கிடக்கும். கொள்ளை அடித்த பொருள்களில் வீரர்கள் தங்களுக்கென்றும் ஒதுக்கி வைத்துக் கொள்வார்கள்.



எனவே பண நடமாட்டம் அதிகம் இருக்கும். நெல்லின் விலை அதிகமாகும். பொன்னுக்கு அர்த்தமில்லாது போகும்"

"அப்போது எது சுபீட்சமான காலம்"

"ஒரு போருக்கும் இன்னொரு போருக்கும் இடைவெளி அதிகம் இருந்தால் அது சுபீட்சமான காலம்"

"ஆனால் கீழைச் சாளுக்கியத்திலிருந்து எந்த செய்தியும் வரவில்லையே"

"இன்று அல்லது நாளை வந்துவிடும் என்று சொல்கிறார்கள். முதல் தாக்குதலுக்கு தயாராகி விட்டோம் என்ற செய்தி வந்ததாம். தாக்குதல் நடந்ததா என்று தெரியவில்லை"

"கீழைச் சாளுக்கியத்துடன் போரா, மேலைச் சாளுக்கியத்துடன் போரா"

"கீழைச் சாளுக்கியம் நமக்கு அடங்கிய தேசம், நமக்கு பிரியமானவர்கள். மேலைச் சாளுக்கியம் கீழைச் சாளுக்கியத்தை அடக்கி ஆண்டு தங்களுடைய படைகளை வைத்து அங்கு நிர்வாகம் செய்து கொண்டிருக்கிறார்கள்"

"தஞ்சை பெருவுடையாரே நல்ல செய்தி வர வேண்டும். நிரம்ப வெற்றிகள் பெற வேண்டும். வெற்றி பெற்று போதும் போதும் என்று மறவர்கள் சாய்ந்து உட்கார வேண்டும். அரிசி விலை குறைய வேண்டும். ஆட்டம் பாட்டங்கள் அதிகமாக வேண்டும். வழக்கம் போல தஞ்சாவூர் களை கட்டி நிற்க வேண்டும்"

"களை கட்டி நிற்பதா, தஞ்சாவூரா. அது முடிந்த கதை. இனிமேல் ஜெயங்கொண்டம் தான் களை கட்டி நிற்கும். அங்கு தான் எல்லா வேடிக்கைகளும் நிகழும். அது தான் சோழ தேசத்தின் மூளையாக, இருதயமாக செயல்படும்"

"அப்படியானால் தஞ்சாவூர்?"

"பழையன கழிதலும், புதியன புகுதலும் கால வகையினானே. அது காலத்தின் கட்டாயம். மிகச் சிறந்ததாக ஒரு தலை நகரம் ஜெயங்கொண்டத்தில் அமையும். போது தஞ்சையை யார் கவனிப்பார்கள்.

இதையெல்லாம் விட மிகப் பெரிய கேள்வி ஒன்று இருக்கிறது"

"என்ன?""

"பெருவுடையார் கோவிலை யாராவது கைவிட்டார்களா இல்லை. மெல்ல மெல்ல கைவிட்டு விடுவார்களா, அந்த பயம் என்னிடம் இருக்கிறது"

"இவ்வளவு அழகான கோவிலையா அவர்கள் கை விட்டு விடுவார்கள்"

"இதைவிட அழகான கோவில். பல்வேறு விதங்களில் மேம்பட்ட கோவில் ஜெயங்கொண்டத்தில் உருவாகி வருகிறது"

"இராஜாதி இராஜர் இங்கிருக்கிறாரே. அவர் பார்த்துக் கொள்ள மாட்டாரா"

"இல்லை. தகப்பனுக்குப் பிறகு இராஜாதி ராஜன் ஜெயங்கொண்டத்திற்கு போகவே பிரியப்படுவார். இராஜாதிராஜன் மகனும் அப்படித்தான் ஆசைப்படுவார். தஞ்சாவூருடைய வாசனை மெல்ல மெல்ல மங்கும்"

"கண்ணெதிரே ஒரு தேசம் குற்றுயிராய் போவதை இப்பொழுது தான் பார்க்கிறேன்"

"இனி அதிகம் பார்ப்பாய். நிறைய பேர் குற்றுயிராய் இருப்பதை பார்ப்பாய். இங்கு இருக்கின்ற தளிச்சேரி பெண்டுகளை எத்தனை அழகிகளாக நான் பார்த்திருக்கிறேன் தெரியுமா. எடுப்பான மார்பும், துடிப்பான தொடையும், அழகிய கண்களுமாய் இருப்பவர்கள் முகம் சுருங்கி, கூன் விழுந்து தட்டுத் தடுமாறி நடக்கிறார்கள். பார்க்க பாவமாக இருக்கிறது. குரவைக்கூத்து ஆடின கால்கள் உடையவள் இப்பொழுது கட்டுப் போட்டுக் கொண்டு நொண்டி நொண்டி நடக்கிறாள்"

"வடக்கு வீதியில் போர் வீரர்கள் வந்திருக்கிறார்கள். கீழைச் சாளுக்கியத்திலிருந்து வந்திருக்கிறார்கள், வெவ்வேறு இடத்திலிருந்து வந்திருக்கிறார்கள்" யாரோ கூச்சல் போட, அந்த கூட்டம் ஓட்டமும், நடையுமாய் வடக்கு வீதி நோக்கி போயிற்று.

சோழகுல சுந்தரியின் வீட்டிலிருந்து மிகப் பெரிய அலறல் சத்தம் கேட்டது. இராஜராஜ பிரம்மராயர் வில்லாளி அடிபட்டும், கத்தியால் குத்தப்பட்டும் மரணமடைந்தார். உத்தம சோழ மிலாடுடையார், உத்தமசோழ கோன் என்று இன்னும் இரண்டு தளபதிகளும் இறந்து போனார்கள்.



முதல் நரபலி கீழைச் சாளுக்கியத்தின் வாசலில், வேங்கியிலிருந்து சில காத தூரத்தில் நடந்தது. இரவு நேரத்தில் படை எடுத்து வந்து தாக்கி தூங்குகிறவர்களை அடித்து கொன்றார்கள்.

ஜனங்கள் இந்தச் செய்தியை கேட்டதும் வெறி பிடித்தது போல் கத்தினார்கள், மார்பில் அடித்துக் கொண்டு அழுதார்கள். சோழகுல சுந்தரி நடு கூடத்தில் தூணில் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்தாள். அவள் மடியில் இராஜராஜ பிரம்மராயரின் நீண்ட வாள் கிடந்தது.

அவருடைய ஞாபகமாக அந்த வாள் எடுத்து வந்திருந்தார்கள். அவளுக்கு அந்த வாள் அடையாளம் தெரிந்திருந்தது. நெஞ்சில் வைத்துக் கொண்டு சிறிது நேரம் அழுதாள். பிறகு மடியில் வைத்துக் கொண்டு தடவிக் கொடுத்தாள்.

முடிந்து விட்டது. வாழ்க்கை முடிந்து விட்டது. பேரப் பிள்ளைகள் வருவார்கள். பேரன் முகத்தில் இவரைப் பார்க்கலாம். தஞ்சையை விட்டு ஜெயங்கொண்டம் போய் விடலாமா என்று தோன்றியது. இல்லை, அவரோடு சுற்றிய தஞ்சை தான் இனி எனக்கு இடம். இது தான் என்னுடைய ருத்ர பூமி. இந்த தஞ்சையை விட்டு நான் போக மாட்டேன். இந்த பெரிய வீடு அவர் வாங்கியது. என் மகன் வருவான். ஆதுரச்சாலை அமைக்க வேண்டுமென்று அடிக்கடி பேசிக் கொண்டிருந்தான். இது ஆதுரச் சாலை, இராஜராஜ பிரம்மராய ஆதுரச் சாலை, ஆதுரச் சாலைக்கு வந்தவர்க்கு ஆறுதல் சொல்வது என்னுடைய வேலை.

அடிபட்ட ஒவ்வொரு வீரனுக்கும் மருத்துவ உதவி செய்வது என் வேலை. தஞ்சையை ஏன் பாழ்பட்ட பூமியாக செய்ய வேண்டும். இல்லை. தஞ்சை பாழ்பட்ட பூமியாக இருக்காது. தஞ்சை அமைதியான இடம். தஞ்சை அலுத்துப் போனவர்களுக்கு அமைதி கொடுக்கும் இடம். தஞ்சை யுத்தம் போய் அடிபட்டு நொந்தவருக்கு உதவி செய்யும் இடம்.

என் பிள்ளை அற்புதமான மருத்துவன். அவர் பெயரை ஒளிர வைப்பான். அவன் வருவதற்கு முன்பே இந்த இடத்திலேயே பல கட்டில்கள் தயார் செய்து விட வேண்டும். மருந்து அரைப்பதற்கு உண்டான உலக்கைகளும், உரல்களும், அம்மிகளும் கொண்டு வர வேண்டும். சாதாரண மருத்துவர்களை இங்கு கொண்டு வந்து சொல்லி அவர்கள் மூலம் சிறிய நோய்களுக்கு வைத்தியம் பார்க்க

வேண்டும்.

அம்மா அழவில்லை. தைரியமாக இருக்கிறேன் என்று மகனுக்கு செய்தி அனுப்ப வேண்டும். அவள் தீர்மானித்தாள். எழுந்து நின்றாள். அந்த நீண்டவாளை சுவரில் மாட்டினாள். அதற்கு அருகே தீபம் எரிய வைத்தாள். அந்த கூடம் பிரகாசமாகியது. மொத்த தஞ்சையும் பிரகாசமாய் மாறியதாய் அவள் நினைத்தாள். எல்லா ஊருக்கும் ஏதோ ஒரு பயன் இருக்கத் தான் செய்கிறது. எல்லா செயலுக்கும் ஒரு விளைவு இருக்கத் தான் செய்கிறது.

ஜெயங்கொண்டத்திற்கு போகிறவர்கள் போகட்டும். ஆடி, ஓடி, அலுத்து திரிந்தவர்களுக்கு நல்ல இடம் தஞ்சை. அவள் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டாள்.

அவள் தேவரடியார், நித்ய கன்னி, முகம் கழுவி குங்குமப் பொட்டிட்டு, முகத்திற்கு மஞ்சள் எழுதி, மை எழுதி பிரகாசமாக வெளியே வந்தாள்.

கூட்டம் அவளை கை கூப்பி நின்று அழுதது, தொழுதது. அவள் அதை பிரியத்துடன் ஏற்றுக் கொண்டாள்.

## முதல் பாகம் முற்றும்

கதை, கவிதை மற்றும் கடிதப் போக்குவரத்து, டிடி அல்லது எம்.ஓ. இவைகளை SREE AISHVARYA PUBLICATION லேடிஸ் நாவல், 4, தேவகி நகர் 2வது குறுக்குத் தெரு, பொன்னியம்மன் மேடு, சென்னை-110. என்ற நிர்வாக அலுவலக முகவரிக்கே அனுப்பவேண்டும்.

செல்: 94453 45067

**LADIES NAVAL** Owner & Published by **M.P. CHANDRA SEKARAN** published at 50/1, Pycrafts Road, Royapettah, Chennai - 600 014. Printed by **M.P.CHANDRASEKARAN** at Wonder Prints, No.14, Weavers Street, Triplicane, Chennai - 600 005.

**Editor: Pon ChandraSekar**

**E-mail: palsuvainovels@gmail.com**